வரலாறு

11 ஆந் தரம்

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

Cover Desing by : Sindya Atapattu

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

வரலாறு

தரம் 11

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

(2008ம் ஆண்டிலிருந்து 11ம் தரத்துக்கானது)

சமூக விஞ்ஞானத்துறை

தேசிய கல்வி நிறுவகம்

மகரகம

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

வரலாறு

தரம் 11

முதலாம் பதிப்பு - 2007
தேசிய கல்வி நிறுவகம்

பதிப்பாசிரியர்கள் : திரு. உ.நவரத்தினம்
பணிப்பாளர், சமூக விஞ்ஞானத்துறை
திரு. ச. கருணாகரன்
உதவிச் செயற்றிட்ட அதிகாரி, சமூக விஞ்ஞானத்துறை

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

பணிப்பாளர்நாயகத்தின் செய்தி

புதிய நூற்றாண்டில் ஏற்படுத்தப்படும் இக்கலைத்திட்ட மறுசீரமைப்பானது தற்போது பாடசாலைகளில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு வழிமுறையாகக் கருதப்பட முடியும். இக்கலைத்திட்டமானது இன்றைய இளஞ் சந்ததியினர் எதிர்நோக்கியுள்ள தனிப்பட்ட இயலாமைகளிலிருந்து அவர்களை விடுவிக்கும் நோக்கிலே தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் கல்விமுறையினை நோக்கின் இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன் இலங்கையானது கல்வித் துறையிலே மிகவும் முதன்மை ஸ்தானத்திலிருந்தது. ஆனால் தற்போது ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பின்னடைந்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எதிர்காலத்தைக் கருத்திற் கொள்ளாது நிகழ்காலத்தை மாத்திரம் கருத்திற் கொண்ட கலைத் திட்டங்களை மீண்டும் மீண்டும் முன் வைக்கப்பட்டமை இப்பின்னடைவுக்கான காரணிகளுள் ஒன்றாகும்.

இவ்வாறான நிலையிருந்து விடுபடும் நோக்கில் தேசிய கல்வி நிறுவகத்தின் அதிகாரிகள் தெளிவானதொரு தொலைநோக்கின் அடிப்படையில் கலைத்திட்டத்தில் மறுசீரமைப்பை மேற்கொள்ள முன்வந்துள்ளனர். புதிய கலைத்திட்டத்தின் நோக்கமானது மாணவர் சமூகத்தின் தேடலையும் கற்றலையும் ஊக்குவிப்பதுடன் மாணவரின் தேர்ச்சிகளை மேம்படுத்துவதுமாகும். இந்நோக்கத்தை அடைவதற்கு ஆசிரியரின் வகிபாகத்தில் முழுமையான மாற்றம் ஏற்படுவது அத்தியாவசியமானது. இப்புதிய கலைத்திட்டமானது தற்போது நிலவும் ஆசிரியர்மையக் கல்வியிருந்து மாணவர்மையக் கல்விக்கும் தேர்ச்சிமையக் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் இட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஆசிரியர்கள் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் தயாராகுதல் வேண்டும்.

இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்களை அவ்வாறானதொரு முறைமைக்கு இட்டுச் செல்வதற்குப் பெருமளவு பங்களிப்புச் செய்யும் என நம்புகிறேன்.

வழிகாட்டியிலுள்ள வழிகாட்டல்களை நன்கு பின்பற்றுவதனூடாக வெற்றிகரமான ஆசிரியராக மிளிர்வதற்கான ஆற்றல் உங்களுக்குக் கிடைக்கும். மேலும் கற்பித்தலின் போது மாணவர்களைக் கணிப்பிடுவதற்கும் இது உங்களுக்கு உதவும். தேடலும் தர உள்ளீடுகளும் அடங்கிய வழிகாட்டலானது மாணவர்களுக்கு உதவும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு அதிபர்களுக்கு நேரசூசியைத் தயாரிக்கும் போதும் அருமையாகவுள்ள வளங்களைப் பகிர்ந்தளிக்கும் போதும் வெளிவாரி கண்காணிப்புகளின் போதும் இவ்வழிகாட்டல்கள் பெரிதும் உதவும்.

இவ்வழிகாட்டியானது விதிக்கப்பட்ட ஒன்றன்று. ஆசிரியர்களுக்கு ஆக்கத் திறனுடன் பொருத்தமான பல்வேறு செயற்பாடுகளையும் சுயமாக உருவாக்கிக் கற்பிக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டியிலுள்ள செயற்பாடுகள் மாதிரிகளாகும். பிரதேச வேறுபாடுகளுக்கேற்ப ஆசிரியர்கள் சுயமாகச் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள முடியும்.

இவ்வாசிரியர் வழிகாட்டியைத் தயாரிப்பதில் உதவிய கல்வியியலாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வெளிவாரியான உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் ஜே.டபிள்யூ. விக்கிரமசிங்ஹ
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

உதவிப் பணிப்பாளர்நாயகத்தின் செய்தி

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒருமுறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப, 2007ஆம் ஆண்டிலிருந்து, நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்திருத்தத்தின் கீழ், இப்பாடத்திட்டமும், ஆசிரியர் வழிகாட்டற் கோவையும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில், குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும், அமைந்திருந்தமையால் அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச் செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில், அவ்வப் பாடங்களில் மாணவர் அடைந்துகொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங் காணப்பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்கின்ற பரம்பரை ஒன்றின் உருவாக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்துகொள்வதுடன், அதில் விசேட கவனமும் செலுத்தவேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில், புதிய கற்றல்-கற்பித்தல் செயன்முறை ஒன்று விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச் செயன்முறையின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், இயலுமெனில் இணையத் தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றற் கலாசாரம் ஒன்றைக் காண முடியும். இதற்குக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தகத்தினை உசாத்துணை நூலாகக் கொள்ள முடியும். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு, இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்க. இதனூடாக புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இந்தப் புதிய வகுப்பறைக் கற்றல்-கற்பித்தற் செயலொழுங்கின் போது மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால், அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர், சில சந்தர்ப்பங்களில் எதிர்கொள்கின்ற க‘டங்கள்-இடையூறுகள் என்பவற்றை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள, கற்றல் கற்பித்தல் செயன்முறையை நீடிப்பதற்கான உபகரணமானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை, மேலும் பலப்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல்-கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்கு பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவதுடன் அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகம், வகுப்பறைச் சூழல் என்பனவற்றையும், புதிய கற்றல் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

விமல் சியம்பலாகொட
உதவிப் பணிப்பாளர்நாயகம்,
மொழிகள்,மானிடவியல், சமூகவிஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

நூலாக்கக் குழு

ஆலோசனைக் குழு:

பேராசிரியர் ஜே.டப்ளியூ. விக்ரமசிங்ஹ	-	பணிப்பாளர்நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
திரு.விமல் சியம்பலாகொட	-	உதவிப் பணிப்பாளர்நாயகம் தேசிய கல்வி நிறுவகம்
பேராசிரியர் மாலனி அந்தகம	-	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
பேராசிரியர் எம்.யூ.டி.சில்வா	-	ருஹுணு பல்கலைக்கழகம்
பேராசிரியர் இந்திராணி முணசிங்ஹ	-	கொழும்பு பல்கலைக்கழகம்
கலாநிதி எஸ்.அனுரியா	-	தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

மேற்பார்வை:

திரு.உ. நவரத்தினம்	-	பணிப்பாளர் சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி.

இணைப்பாளர்கள்:

திருமதி. டி.எச். சந்திமா நிஸானி தர்மபால	செயற்றிட்ட அதிகாரி (வரலாறு) சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி.
திரு. எஸ். கருணாகரன்	உதவி செயற்றிட்ட அதிகாரி சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி.

எழுத்தாளர் குழு:

1. திரு. பீ.எல்.ஆர். ரோஹண குமார - தேசிய கல்வி நிறுவகம்
2. திரு. எஸ்.எம். தயானந்த - தேசிய கல்வி நிறுவகம்
3. திரு. சீ. எஸ். ஜெயசிங்ஹ - ஆசிரியர் நிலைய முகாமையாளர் - ஹோரன
4. திருமதி. ஏ. இந்திராணி - இர/ குழந்தை இயேசு கன்னியர்மடம் தேசிய பாடசாலை இரத்தினபுரி
5. திருமதி. ஜே.வி. காந்தி வலயக்கல்விக் காரியாலயம் - பாணந்துறை
6. திருமதி. நந்தா மனம்பேரி - கே.புனித ஜோசப் மகளிர் கல்லூரி - கேகாலை
7. திருமதி. ஆர்.டப்ள்யு.எஸ். தேல கம்/ மசனட் வித்தியாலயம் - கந்தான
8. திருமதி. மஞ்சரி புஞ்சி ஹேவா - நு/ சிறிமாவோபண்டாரநாயக மகளிர் கல்லூரி - ஹங்ரன் கெத்த
9. திருமதி. எஸ்.ஏ.என். பெபேரா - கே/ ரன்வலமகாநாக ம.வி. கேகாலை
10. திரு. ரி.பி.ஏகநாயக வலயக்கல்விக் காரியாலயம் - தலாத்துஓய
11. திரு.ஏ.செல்வேந்திரன் - ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி - கொட்டக்கலை
12. திருமதி. இந்திராணி மொஹிதீன் ஓய்வுபெற்ற ஆசிரியை
13. திரு. எச். வீரரத்தின - ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்
14. திரு.யூ.எல்.எம். பசீர் - ஆசிரிய ஆலோசகர் வத்தேகம
15. திரு. யு.எல்.சிபார்தின் மரிக்கார் - க/பாரதி தமிழ் ம.வி. வத்தேகம
16. திரு. என். சிதம்பரநாதன் முன்னாள் பணிப்பாளர் தேசிய கல்வி நிறுவகம்
17. திருமதி. எஸ். பாலசுந்தரம் முன்னாள் பிரதி ஆணையாளர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

வரைபடம்:

செல்வி. கே.ஏ.லசந்தி கீதானி தேசிய கல்வி நிறுவகம்

கணனி வடிவமைப்பு:

செல்வி. விஜிதா யோசவ்

அட்டை வடிவமைப்பு:

செல்வி சந்தியா அத்தபத்து - தேசிய கல்வி நிறுவகம்

ஏனைய உதவிகள்:

செல்வி. எம்.என்.எப். ரிஹானா நயீம் - தேசிய கல்வி நிறுவகம்
திரு. எஸ். ரூபசிங்ஹ - தேசிய கல்வி நிறுவகம்
திருமதி. சிரானி சமரக்கொடி - தேசிய கல்வி நிறுவகம்

உள்ளடக்கம்

	பக்கம்
1. பணிப்பாளர்நாயகத்தின் செய்தி	III
2. உதவிப் பணிப்பாளர்நாயகத்தின் செய்தி	IV
3. நூலாக்கக் குழு	VI
பாடத்திட்டம் (முதலாம் பாகம்)	01
கற்றல் - கற்பித்தல் செயன்முறை (இரண்டாம் பாகம்)	15
கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நீடிக்க வைக்கும் உபகரணங்கள்	216

அறிமுகம்

2007ம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும் புதிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமையத் தயாரிக்கப்பட்ட 11ம் தர வரலாறு பாடத்துக்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியே இது.

இவ் அறிவுரைப்பு வழிகாட்டி மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். இதன்படி முதலாம் பாகம் பாடத் திட்டத்தையும் இரண்டாம் பாகம் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளையும் மூன்றாம் பாகம் மதிப்பீட்டையும் உள்ளடக்கியுள்ளது. பாடத்திட்டம் எனும் பாகத்தில் 11ம் தர வரலாற்றுப் பாடத்துக்குரிய பாடங்களும் இரண்டாம் பாகத்தில் உரிய கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கற்றல் - கற்பித்தல் செயன்முறையூடாக; எதிர்பார்க்கப்படும் அடைவு மட்டத்தை மாணவர்கள் அடைந்து கொள்வது உறுதிப்படுத்தப்படுவதுடன் அதனை அறிந்து கொள்வதற்காக கணிப்பீடும் மதிப்பீடும் உதவியாக அமையும்.

இங்கு அவதானிக்க வேண்டிய விடயம் என்னவெனில் பாடம் முழுமையாக செயற்பாடுகளில் உள்ளடக்கப்படவில்லை என்பதாகும். இங்கு உதாரணங்கள் சில மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த உதாரணங்களைக் கவனத்தில் எடுத்து உங்களாலும் செயற்பாடுகள் தயாரிக்கப்பட வேண்டியுள்ளதுடன் இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளையும் உங்கள் ஆக்கத்திறனுக்கு ஏற்ப அபிவிருத்தி செய்துகொள்ள முடியும்.

அதன்படி வரலாறு பாட நோக்கங்களை அடையும் வகையில் தேர்ச்சிகளால் நிரம்பியுள்ள புதிய உலகத்துக்கு ஏற்ற மாணவர்களை உருவாக்குவதற்கான துணையாக இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிச் சஞ்சிகை அமையுமென எதிர்பார்க்கிறோம்.

வரலாறு பாடக்குழு

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பாகம் ஒன்று

பாடத்திட்டம்

அறிமுகம்

மனித நாகரிகங்களின் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார, சமய மற்றும் பண்பாட்டுத்துறைகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் அவற்றின் வெற்றிகளின் பல்வகைத் தன்மைகள் ஒப்பீட்டு ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் விளங்கிக் கொள்வதன் ஊடாக வரலாற்றைக் கற்கக்கூடியதாக இருக்கும். இத்தகைய கற்றலானது சூழல் மற்றும் தேசிய உரிமைகளைப் பாதுகாப்பதுடன் அனைத்து இனங்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கான சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் முதன்மைப் படுத்தப்பட்டதாகவும் இருத்தல் அவசியம்.

2007ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்களின் மூலம் தரம் ஆறிலிருந்து தரம் பதினொன்றுவரை வரலாற்றுப் பாடமானது பாடசாலைக் கலைத்திட்டத்தில் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் அறிமுகம் செய்யப்படும் பாடங்கள் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

தரம் பதினொன்றுக்கான இப்பாடத்திட்டம் 2008ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. ஆறு தலைப்புக்களிலான இப்பாடத்திட்டத்தில் இலங்கை தொடர்பாகச் செல்வாக்குச் செலுத்திய உலக வரலாற்று நிகழ்வுகளும் தலைப்புக்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அதற்கமைய பதினோராம் தரத்தில் இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி தாபிக்கப்பட்டதிலிருந்து 1978ஆம் ஆண்டு வரையான காலம், இருபதாம் நூற்றாண்டில் ஆசிய நாடுகள் எழுச்சியுறல், உலக மகாயுத்த காலத்திலும் அதன் பின்னரும் உலக அதிகாரச் சமநிலை மாற்றமடைந்த விடயங்கள் என்பன பற்றி கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. உலக வரலாற்றின் முக்கியத்துவமான நிகழ்வுகள் இலங்கை வரலாற்றிலே செல்வாக்குச் செலுத்தியுள்ள விதத்தை இத்தலைப்புக்களை ஆய்வுக்குட்படுத்துகையில் தெரிந்துகொள்ளலாம்.

ஆறாம் தரத்திலிருந்து பதினொராம் தரம் வரையான பாடத்திட்டத்தை கற்பதிலிருந்து கீழ்வரும் தேர்ச்சிகளை மாணவர்கள் அடையப்பெறுவர் என எதிர் பார்க்கப்படுகிறது.

- வரலாற்று வளர்ச்சி, போக்குகள் என்பன பற்றி விபரிப்பார்.
- எதிர்காலத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு முந்தைய காலம் பற்றிய தர்க்க ரீதியான அறிவைப் பயன்படுத்துவார்.
- தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்கி நடவடிக்கைகளை மேற்கொள்வார்.
- வரலாற்றில் இடம்பெற்ற முக்கியமான நபர்களின் வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு நடப்பார்.
- தேசிய தனித்துவத்தை இனங்கண்டு அவற்றை மதித்து தமதாக்கிக் கொள்வார்.
- வரலாற்று அனுபவங்களைக் கொண்டு தற்கால நிகழ்வுகளை வினைதிறன் மிக்கதாகக் கையாளுவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

3.0 பதினொராந்தரத்திற்கான பாடத்தேர்ச்சிகள்

- பிரித்தானியர் இலங்கையில் தமது ஆட்சியைத் தாபித்துக் கொண்ட விதத்தை விவரிப்பார்.

- இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள் இதுவரை காலமும் நிலவிய முறையிலிருந்து வேறுபடும் விதத்தை விவரிப்பார்.

- இருபதாம் நூற்றாண்டில் ஆசிய நாடுகள் எழுச்சியடைந்த விதத்தை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்.

- உலகப் போரால் இழந்து விட்ட மனித உரிமைகளைப் பாதுகாத்து உலக சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் தாபனம் மேற்கொண்ட முயற்சிகளை மதித்து, சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு பங்களிப்பார்.

- இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலக வலுச் சமனிலைக்காக பிரதான வல்லரசுகள் இரண்டும் கையாண்ட கொள்கைகளின் செயற்பாடுகளை ஒப்பீட்டு ரீதியாக விமர்சிப்பார்.

- சுதந்திரத்தின் பின் இலங்கையின் அரசியல், பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்களித்துள்ள விதத்தைப் பற்றி விசாரணை செய்து அதற்குப் பங்களிப்புச் செய்வார்.

- இலங்கையின் வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவத்தை மாண்புடன் ஏற்றுச் செயற்படுவார்.

- வரலாற்றுத் தகவல்களைக் கொண்டு தேசப்படங்களிலே குறித்துப் பெயரிடும் திறனை வளர்த்துக்கொள்வார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பாடத்திட்டம்

அலகு 11.1 இலங்கையில் பிரித்தானியராட்சி நிறுவப்படல்

தேர்ச்சி	தேர்ச்சி மட்டம்	பாட உள்ளடக்கம்	பாட வேளைகள்
பிரித்தானியர் இலங்கையில் தமது ஆட்சியதிகாரத்தை நிலைநாட்டிய விதம் பற்றி விவரிப்பார்.	✖ இலங்கையாட்சியாளர்களின் பல வீனங்களைப் பயன்படுத்தி, பிரித்தானியர் இலங்கையில் ஆட்சியை நிறுவிய முறையை விவரிப்பார்.	11.1 இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி நிறுவப்படல். 11.1.1 இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி ஏற்படுத்தப்படல் - 1796 இல் கரையோரப் பிரதேசம் பிரித்தானியர் வசமாதல் - 1815இல் மலைநாட்டை வெற்றி கொள்ளல்	20
	✖ சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக சுதேசிகள் எழுச்சியடைந்த விதத்தை விவரிப்பார்.	11.1.2 பிரித்தானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் - 1817 - 1818 இல் நடைபெற்ற கிளர்ச்சி - 1848 இல் நடைபெற்ற கிளர்ச்சி	
	✖ பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் பற்றி விவரிப்பார்	11.1.3. ஆட்சிமுறைப் பரம்பலும் நிர்வாகமும் 1947வரை - கோல்புறூக்,கமரன் அரசியல் சீர்திருத்தம் - மெகலம அரசியல் சீர்திருத்தம் - மனிங் அரசியல் சீர்திருத்தம் - 1924 அரசியல் சீர்திருத்தம் - டொனமூர் அரசியல் சீர்திருத்தம் - சோல்பரி அரசியல் சீர்திருத்தம்	

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பாடத்திட்டம்

அலகு 11.2 பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக, பொருளாதார மாற்றங்கள்

தேர்ச்சி	தேர்ச்சி மட்டம்	பாட உள்ளடக்கம்	பாட வேளைகள்
பிரித்தானிய ஆட்சியினால் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்களை விவரிப்பார்.	✖ பெருந் தோட்டப் பரம்பலின் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிப்பார் ✖ பிரித்தானிய ஆட்சியின் காரணமாக இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குவார். ✖ பிரித்தானியரின் கீழ் இலங்கையின் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிப்பார். ✖ பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட சமய, பண்பாட்டு எழுச்சியைப் பரிசீலிப்பார்.	11.2 பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக, பொருளாதார மாற்றங்கள் விவரிப்பார் 11.2.1 காணி உரிமை மற்றும் கட்டாய சேவை ராஜகாரிய முறையை இல்லா தொழித்தல் 11.2.2 பெருந்தோட்டச் செய்கையின் தோற்றமும் பரம்பலும் 11.2.3. பாரம்பரிய விவசாயம் 11.2.4. நவீனமயமாதலும் மேற்கத்திய மயமாதலும் - மத்திய வகுப்பாரின் எழுச்சி - தொழிலாளர் இயக்கம் - தேசிய இயக்கம் 11.2.5. கல்வி 11.2.6 சமய, கலாசார மறுமலர்ச்சி - பௌத்த,இந்து,இஸ்ஸாம் மற்றும் மி'னறிகள்	16

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பாடத்திட்டம் **அலகு 11.3 இருபதாம் நூற்றாண்டில் ஆசிய நாடுகளின் எழுச்சி**

தேர்ச்சி	தேர்ச்சி மட்டம்	பாட உள்ளடக்கம்	பாட வேளைகள்
ஆசிய நாடுகள் இருபதாம் நூற்றாண்டில் எழுச்சியுற்ற விதத்தை முன் மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்.	✖ இந்தியர்கள் தமது, நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக செயற்பட்ட விதத்தை முன்மாதிரியாக மதித்துப் பேசுவார்.	11.3 இருபதாம் நூற்றாண்டில் ஆசிய நாடுகள் எழுச்சியுறல் 11.3.1 இந்தியா - தேசிய இயக்கத்தின் ஆரம்பம் - மிதவாதக் கொள்கையாளர்களின் செயற்றிட்டமும் வெற்றியும் - போராட்டத்துடன் தேசிய உணர்வு எழுச்சியடைதலும் மகாத்மா காந்தியும் - இந்தியா பிளவுபடல்	4
	✖ ஜப்பான் உலகின் பலம்வாய்ந்த நாடாக வளர்ச்சியடைந்த விதத்தை விவரிப்பார்.	11.3.2 ஜப்பான் - டொகுகாவா யுகம் - மெய்ஜி சீர்திருத்தம் - ஜப்பான் உலகில் பலம்வாய்ந்த அரசாக எழுச்சியடைதல் - ஹிரோஷிமா,நாக'ாகி அழிவுற்ற பின்னர் மார்'ல் திட்டத்தின் உதவியுடன் மீளவும் கட்டியெழுப்பப் படல்	4

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

தேர்ச்சி	தேர்ச்சி மட்டம்	பாட உள்ளடக்கம்	பாட வேளைகள்
	✖ திட்டமிடலுக்கமைவாகச் செயற்பட்டு சீனா எழுச்சியடைந்த விதத்தை விவரிப்பார்.	11.3.3. சீனா - ஐந்தாண்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தல் - சீனப் புரட்சியின் முக்கியமான கட்டங்கள் - சங் யுத் சென், சியாங் காய் ஷேக் - இரண்டாம் உலக மகா யுத்தத்தில் சீனா - மக்கள் சீனாவின் தோற்றம் - பொருளாதாரத் திட்டம்: நோக்கமும் எதிர்பார்க்கையும் - கலாசாரப் புரட்சி - வெளிநாட்டுத் தொடர்புகள்	4

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பாடத்திட்டம் **அலகு 11.4 உலக மகாயுத்தமும் உலக சமாதானத்திற்கான முயற்சிகளும்**

தேர்ச்சி	தேர்ச்சி மட்டம்	பாட உள்ளடக்கம்	பாட வேளைகள்
ஐக்கிய நாடுகள் தாபனத்தால், உலக மகாயுத்தங்களால் மறுக்கப்பட்ட மனித உரிமைகளைப் பாதுகாத்து, உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு மதிப்பளித்து அவற்றுக்குப் பங்களிப்புச் செய்வார்.	✖ முதலாம்,இரண்டாம் உலக மகாயுத்தங்கள் மனித வர்க்கத்தின் முன்னேற்றப் பாதையில் இடையூறாக இருந்த விதத்தை விவரிப்பார். ✖ சர்வதேச சங்கத்தின் தோல்வியையும். ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பலத்தையும் ஒப்பிடுவார். ✖ பாஸிச, நாசிச வாதங்களின் பண்புகளை அட்டவணைப்படுத்துவார்.	11.4. உலக மகாயுத்தங்களும் உலக சமாதானத்திற்கான எத்தனங்களும் 11.4.1. முதலாம் உலக மகாயுத்தம் போர் - காரணம் - முக்கியமான பங்காளர் - விளைவு 11.4.2. சர்வதேச சங்கமும் உலக சமாதானமும் - நோக்கம் - சமாதானத்திற்கான எத்தனம் - தோல்வியுற்றமைக்கான காரணங்கள் 11.4.3. பாஸிஸ, நாஸிஸ வாதங்களின் எழுச்சி - பாஸிஸவாதத்தின் அறிமுகம்: ✖ முஸோலினியின் கீழ் இத்தாலி - நாஸிஸவாதத்தின் அறிமுகம்: ✖ ஹிட்லரின் கீழ் ஜேர்மனி	14

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

தேர்ச்சி	தேர்ச்சி மட்டம்	பாட உள்ளடக்கம்	பாட வேளைகள்
		11.4.4. இரண்டாம் உலக மகாயுத்தம் - காரணம் - பங்காளர் 11.4.4. ஐக்கிய நாடுகள் தாபனம்: - காரணம் - பங்காளர் 11.4.5. ஐக்கிய நாடுகள் தாபனம்: - ஆரம்பம் - நோக்கம் - அமைப்பு - சமாதானத் திற்கான எத்தனங்கள்	

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பாடத்திட்டம் **அலகு 11.5 உலக வலுச் சமநிலை - இரண்டாம் உலக மகாயத்தத்தின் பின்ன**

தேர்ச்சி	தேர்ச்சி மட்டம்	பாட உள்ளடக்கம்	பாட வேளைகள்
இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலக வலுச் சமநிலை தொடர்பில் பிரதான வல்லரசுகள் இரண்டும் கையாண்ட கொள்கைகள், செயற்பாடுகள் என்பவற்றை ஒப்பீட்டு ரீதியாக விமர்சிப்பார்.	✖ ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் உலக வல்லரசுகளாக எழுச்சியுற்ற விதத்தை விளக்குவார். ✖ ஐக்கிய நாடுகள் தாபனத்தின் செயற்பாடு ஆயுதப் போர்களைக் கட்டுப்படுத்துவதற்குக் காரணமாக இருந்த விதத்தை விமர்சிப்பார்.	11.5. உலக அதிகாரச் சமநிலை - இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் 11.5.1. ஐக்கிய அமெரிக்கா உலக வல்லரசாக எழுச்சியுறல்: - எழுச்சி பெற்ற விதம் - ஐக்கிய அமெரிக்கா முதலாளித்து வத்தின் தலைமை நாடாதல். 11.5.2. சோவியத் ஒன்றியம் உலக வல்லரசாக எழுச்சியுறல் - காரணம் - பொதுஉடைமைவாதத்தை அடிப் படையாகக் கொண்ட பொருளாதா ரத்தை உருவாக்குதல் - பொதுஉடைமைவாத நாடுகளின் தலைமைத்துவத்தைப் பெறல்	12

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

தேர்ச்சி	தேர்ச்சி மட்டம்	பாட உள்ளடக்கம்	பாட வேளைகள்
	✖ இருபதாம் நூற்றாண்டில் பொதுவுடைமை முகாம், வீழ்ச்சி யடைந்தமைக்கான காரணங்களை விவரிப்பார்.	11.5.3. பனிப் போர் - ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளால் ஆயுதப் போருக்கான சந்தர்ப்பம் இல்லாமற் போனது - இரண்டு அதிகார முகாம்களாகச் செயற்படுதல் - உலகப் பொருளாதார நிர்வாகம் - அணி சேரா நாடுகளின் எழுச்சி - சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி	

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பாடத்திட்டம்

அலகு 11.6 சுதந்திரத்தின் பின் இலங்கை

தேர்ச்சி	தேர்ச்சி மட்டம்	பாட உள்ளடக்கம்	பாட வேளைகள்
இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் அதன் அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடு களுக்குப் பங்களித்துள்ள விதத்தைப் பற்றி விவரிப்பார்.	✖ பாராளுமன்ற சனநாயகம் செயற்படும் போது கட்சி முறையினதும் அமைச்சரவை யினதும் முக்கியத்துவத்தை ஆராய்வார். ✖ 1972, 1978 அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களை விவரிப்பார். ✖ இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களால் விளைந்த பயன்களை விவரிப்பார்.		16

5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

வரலாற்றுப் பாடத்தின் உள்ளடக்கக் கருத்துக்களை வெற்றிகரமாகவும், செயற்றிறன் வாய்ந்த வகையிலும் கற்பதற்கும் அதனூடாக கற்றல் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏற்புடைய வகையில் மாணவர்களின் பங்குபற்றலை விருத்தி செய்யும் விதமாகப் பாடசாலை வேலைத் திட்டம் வழங்கப்படுதல் மிகவும் அவசியமாகும். இவ்வேலைத்திட்டம் மாணவர்களின் வாழ்க்கைக்கும், அவர்களது சமூகத்திற்கும் நன்மை பயப்பதாக அமைதல் வேண்டும்.

இங்கு அவ்வாறான ஆலோசனைகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப வேறு ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளையும் கொள்கைகளையும் தயாரிப்பதற்கான சுதந்திரம் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

- வரலாற்று மன்றத்தை நிறுவி மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கான கலந்துரையாடல்கள், மாநாடுகள், விவாதங்கள், கண்காட்சிகள், சஞ்சிகைகள், சுவர்ப் பத்திரிகைகள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு வழிப்படுத்தல் வேண்டும்.

- வகுப்பறையில் பெற்றுக் கொண்ட அறிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவான முன்னேற்பாட்டுடன் காலத்திற்குக் காலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அல்லது பிரதேசங்களுக்கு கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்துதல் முக்கியமானது.

- இலங்கையின் புகழ் பெற்ற வரலாற்று ஆய்வாளர்களை அழைத்து அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் பயனுள்ளதாகும்.

- தொல்பொருள்கள் அழிவுக்குள்ளாகி வரும் இன்றைய கால கட்டத்தில் பிரதேசத்திலுள்ள தொல்பொருள் முக்கியத்துவமுள்ள இடங்கள் தொடர்பாகத் தேடியாராயவும் அவற்றைப் பாதுகாக்கவும் பாடசாலை மற்றும் மக்களது பங்குபற்றலுடனான நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல்.

- வரலாற்றுப் பாடத்திற்குரிய ஓவியங்கள், சிலைகள், ஏனைய பொருட்கள் என்பவற்றை அவதானித்து அறிக்கைதயாரிக்கக் கூடியவாறு அருங்காட்சியகத்தைப் பார்வையிடும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தல் உகந்தது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பாகம் இரண்டு

கற்றல் கற்பித்தல் முறையியல்

அறிமுகம்

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த கடத்தும் வகிபங்கு (Transmission Role) பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட பரிமாற்ற வகிபங்கு (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படுகின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்தி சார் மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

கடத்தும் வகிபங்கில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக்கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக்கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே காணப்படுவார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, பரிமாற்றல் வகிபங்கின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர் - மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கருத்துநிலை விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு நிலைமாற்றல் வகிபங்கு (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள விரிவான பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகள் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார்செய்து கொள்ளும்படி (தொடர்புறுத்தும் படி) ஈடுபடுத்தும் படி (Engagement step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் பரிமாற்றல் வகிபங்கின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான, சைகைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். இக்கலந்துலையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல், மின் அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள் கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations) கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் வரவேற்கத்தக்கதாகும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கண்டறியும் விடயங்களுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு பாட விடயங்களைக் கண்டறிந்து கொள்வதற்கு (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். பாட அலகுடன் தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான இறுதிப் பெறுபேற்றைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். இதனால் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்த விடயங்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அற்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டறிந்தவற்றை விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்தவற்றையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விரிவாக்கிக் கொள்வதற்கு (Eleboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப்படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment). செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை நிலைமாற்றல் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல் தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரவேசத்தின்போது பரிமாற்றல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது. ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது நிலைமாற்ற வகிபங்குக்கு மேலதிகமாக கடத்தும் வகிபங்கிலும், பரிமாற்றல் வகிபங்கிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

வரலாறு கற்பித்தலுக்கான உத்திகள்.

வரலாற்றைக் கற்பிக்கும் ஆசிரியர் தகவல்களை வழங்குவதை விட தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்கள் ஊக்கம் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டால் கற்பித்தல் பணி மிகவும் பயனுள்ள தாகும். எனவே இயலுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் கலந்துரையாடுதல் மூலங்களைப் பயன்படுத்துதல், அவதானித்தல் போன்ற செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்துதல் விரும்பத்தக்கதாகும். வரலாற்றைக் கருத்துள்ள வகையில் கற்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்தக்கூடிய சில வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- தேசிய அருங்காட்சியகம், பிரதேச அருங்காட்சியகம் போன்றவற்றின் மூலம் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களின் கீழ் அருங்காட்சிப் பொருள்களைப் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குதல்.

- மாணவர்கள் பிரதேச வரலாற்றை அறிந்து கொள்ள ஆர்வம் மூட்டுவதினூடாகத் தேசிய வரலாற்றை அறிய வழிப்படுத்தல்.

- ஊடகங்கள் மூலம் தகவல்களைப் பெறச் சந்தர்ப்பம் வழங்குதல். (வானொலி, தொலைக்காட்சி, கல்விச்சேவை.)

- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட ஆர்வமூட்டுதல்.

- ஆதாரமான மூலங்களைப் பயன்படுத்துவதற்கு ஆர்வமூட்டுதல்.

- மாணவர் தமது ஆற்றலை வெளிப்படுத்தச் சந்தர்ப்பங்களை வழங்கும் விதத்தில் செய்திப்பத்திரிகைகள். சஞ்சிகைகள் வெளியிடுதல், கண்காட்சிகள் நடத்துதல், பாடசாலை அருங்காட்சியகத்தை உருவாக்குதல். போன்ற செயற்பாடுகளில் ஈடுபட ஊக்கம் அளித்தல்.

- வரலாற்று ஆசிரியராகிய உங்களால் தற்காலப் பிரச்சினைகளை நடுநிலையாகவும் யதார்த்தமாகவும் நோக்குகின்ற திறனுள்ள குடிமக்களை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்ய முடியும். இதற்கான உங்களது பொறுப்பு மிகப் பெரிதானதாகும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

11.1 இலங்கையில் பிரித்தானியராட்சி நிறுவப்படல்

பாட வேளைகள் 20

அறிமுகம்

கி.பி. 1796ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலேயர், 1815இல் முழு நாட்டையும் தமது ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தனர். அதனைத் தொடர்ந்து நூற்றைம்பது ஆண்டுகளாக அவர்கள் இலங்கையை ஆட்சி செய்தனர். இலங்கையில் தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்குப் பிரித்தானியர் மேற்கொண்ட செயற்பாடுகள் எவ்வாறானவை என்பது பற்றி இவ்வலகில் கற்பர்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப்பட்ட இலங்கையர் தமது சுதந்திரத்துக்காக 1818ஆம் ஆண்டில் மேற்கொண்ட கிளர்ச்சிகளுக்கான காரணங்கள் என்ன, அக்கிளர்ச்சிகள் தோல்வியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் யாவை, என்பன பற்றி இவ்வத்தியாயத்தில் ஆராயப்படும். பிரித்தானியர்கள் தமது ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக மேற்கொண்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும் அதன் மூலம் இலங்கையிலேற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்கள் பற்றியும் இவ்வத்தியாயத்தில் ஆராயப்படும்.

தேர்ச்சி:
- பிரித்தானியர் இலங்கையில் தமது ஆட்சியதிகாரத்தை நிலைநாட்டிய விதம் பற்றி விபரிப்பார்.

தேர்ச்சி மட்டம்:
- இலங்கையாட்சியாளர்களின் பலவீனத்தை தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட பிரித்தானியர் இலங்கையில் தமது ஆட்சியை நிறுவிய விதம் பற்றி விவரிப்பார்.
- சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பிரித்தானியரின் ஆட்சிக்கெதிராகச் சுதேசிகள் எழுச்சியடைந்தமை பற்றி விபரிப்பார்.
- பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையிலேற்பட்ட அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றி விவரிப்பார்.

பாட உள்ளடக்கம்

11.1 இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி நிறுவப்படல்

11.1.1 இலங்கையில் பிரித்தானியர் தமது அதிகாரத்தை நிலைநாட்டுதல்

- இது பல கட்டங்களில் மேற்கொள்ளப்படல்
  1. 1796இல் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றுதல்
  2. கரையோரப் பிரதேசங்கள் 1802இல் பிரித்தானியர் முடியின் கீழ் கொண்டுவரப்படல்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

3. 1815இல் கண்டி கைப்பற்றப்படுதல்
4. 1818இல் முதலாவது சுதந்திரக் கிளர்ச்சி முறியடிக்கப் பட்டதுடன் கண்டியில் ஆங்கிலேயர் ஆட்சி உறுதிப் படுத்தப்பட்டது.
5. 1833இல் கோல்புறூக் யாப்புச் சீர்திருத்தம் மூலம் அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் இலங்கையின் தேசிய உணர்வு நசுக்கப்பட்டு, ஆங்கில ஆட்சி முறையொன்று ஆரம்பிக்கப்பட்டது.

- கீழைத்தேச வர்த்தக உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக 1600ஆம் ஆண்டு 'பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி' ஆரம்பிக்கப்பட்டது.

- 1660ஆம் ஆண்டு அளவில் 'கிழக்கிந்திய பிரான்சிய வர்த்தகக் கம்பனி' எனும் பெயரில் பிரான்சியரும் ஆங்கிலேயருடன் வர்த்தகப் போட்டியில் ஈடுபட்டனர்.

- பிரித்தானியரின் கவனம் இலங்கையின் பக்கம் திரும்புவதற்கான காரணங்கள்:

1. இந்து சமுத்திரக் கப்பல் பாதையின் மத்தியில் இலங்கை அமைந்திருந்தமை.
2. தென்மேல், வடகீழ் பருவக்காற்றுக் காலங்களில் பாதுகாப்பாகக் கப்பல்களை நிறுத்தி வைக்கக்கூடிய திருகோணமலைத் துறைமுகம் இலங்கையில் அமைந்திருந்தமை.
3. இந்தியாவின் மேற்குக்கரை, கிழக்குக்கரைகளில் கப்பற்படைகளை இலங்கையிலிருந்து இலகுவாக நிர்வகிக்கக்கூடியதாக இருந்தமை.
4. வர்த்தகத்தின் முக்கியத்துவம்
   - ஐரோப்பாவுக்குக் கொண்டுசெல்லப்பட்ட கறுவாவில் இலங்கைக் கறுவாவுக்கு இருந்த மதிப்பு
   - போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கையின் கறுவா வியாபாரம் மூலம் பெற்ற இலாபத்தை ஆங்கிகேயர் தமது வசமாக்கிக் கொள்ளல்.
5. 1789இல் ஏற்பட்ட பிரான்சியப்புரட்சியின் பின்னர் ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் பிரான்ஸ் போரிலீடுபட்டது.

- 1794இல் ஒல்லாந்தை பிரான்ஸ் ஆக்கிரமித்தபோது இளவரசன் வில்லியம் ஸ்டாட். ஹோல்ட பிரித்தானியாவுக்குத் தப்பியோடினார்.

- பிரான்சியருக்கு எதிராக ஒல்லாந்தருக்கு உதவி செய்வதற்கு ஆங்கிலேயர் முன்வந்தனர்.

- இதனால் இலங்கையில் ஒல்லாந்தர் வசமிருந்த பகுதிகளை பிரான்சியர் கைப்பற்றுவார்கள் என்ற சந்தேகம் நிலவியது.

- கியூ மாளிகையிலிருந்த இளவரசன் வில்லியம் ஸ்டாட் .ஹோல்ட் 1795 பெப்ரவரி 7ஆந் திகதி இலங்கையின் ஒல்லாந்தத் தேசாதிபதிக்கு "கியூ" கடிதத்தை அனுப்பிவைத்தான்.

- கியூ கடிதத்தின் படி செயற்படுவதற்கு தேசாதிபதி பன்ஏங்கல் பெக் விரும்பவில்லை.

- எனவே ஆங்கிலேயர் 1797 ஆகஸ்ட் மாதத்தில் ஒல்லாந்தரைத் தாக்கி திருகோணமலையைக் கைப்பற்றிக் கொண்டனர். தொடர்ந்து யாழ்ப்பாணம், மன்னார், கல்பிட்டி பகுதிகளை கைப்பற்றிக் கொண்டு, 1796 பெப்ரவரி 16ஆந் திகதி கொழும்பையும் கைப்பற்றிக் கொண்டனர்.

- அன்றைய தினம் ஒல்லாந்து தேசாதிபதி 'பன்ஏங்கல் பெக்', ஒல்லாந்ருக்குச் சொந்தமான இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

- ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியால் பொறுப்பேற்கப்பட்ட இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் அந்நிறுவனத்தின் சென்னை நிர்வாக மத்திய நிலையத்தால் நிர்வகிக்கப்பட்டது.

- இந்தியாவில் வரி அறவிடப்பட்ட அதேமுறையில் இலங்கையிலும் வரி அறவிடுவதற்குச் சென்னை நிர்வாகிகள் தீர்மானித்தனர்.

- கரையோரப் பிரதேசம் மூன்று நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டது. அப்பிரதேச நிர்வாகியின் அலுவலகம் கச்சேரி எனப்பட்டது.

- இதிலிருந்து இலங்கையிலும் கச்சேரி நிர்வாகம் ஆரம்பமானது.

- வரி அறவிடுவதற்காகச் சென்னையிலிருந்து "அவுமில்தார்" எனப்படும் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டனர்.

- வரி பணமாக அறவிடப்பட்டது.

- தென்னை வரி, கள் வரி, மீன்வரி, சாராய வரி, உப்புவரி, புகையிலை வரி முதலிய புதிய வரிகள் விதிக்கப்பட்டன.

- வரி அறவிடும் உரிமை ஏலவிற்பனை மூலம் வழங்கப்பட்டது.

- அவுமில்தார்களின் கடுமையான வரி அறவீட்டு முறைகளுக்கும் புதிய வரிகளுக்கும் எதிராக கரையோர மக்கள் 1797இல் கிளர்ச்சி செய்தனர்.

- 1797 கிளர்ச்சிக்கான காரணங்கள்
  1. வரி அறவிடுவதற்கு சென்னை அதிகாரிகள் அமர்த்தப்பட்டமை.
  2. அவுமில்தார்கள் மக்களை க'டப்படுத்தி வரி அறவிட்டமை.
  3. பணப்புழக்கம் இல்லாத காலத்தில் பணமாக வரி அறவிட்டமையால் மக்களுக்கேற்பட்ட அசௌகரியம்.
  4. புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டமை.
  5. கரையோர மக்கள் முகங்கொடுத்த பிரச்சினைகள் பற்றிச் சென்னை அதிகாரிகளிடம் முறையிடப்பட்ட போதிலும் எவ்வித பயனும் ஏற்படாமை.

- சென்னை நிர்வாகத்தால் வெறுப்படைந்த மக்கள் 1797 இல் ஆங்கிலேயருக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

- சிங்களவர்கள் கெரில்லா தாக்குதலில் ஈடுபட்டமையாலும் ஒரு பிரதேசத்தில் கிளர்ச்சியை அடக்கிவிட்டு மறு பிரதேசத்துக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் இன்மையாலும் ஆங்கிலேயர் கிளர்ச்சியை அடக்குவதற்குப் பெருஞ் சிரமப்பட்டனர்.

- கிளர்ச்சிக்கான காரணங்களை அறிவதற்காக கேர்ணல் டி.மியூறன் என்பவரின் தலைமையில் மூவரைக் கொண்ட ஒரு குழு இலங்கைக்கு வந்தது.

- மியூறனின் சிபார்சுகளாவன:
  1. வரி ஏல விற்பனை முறையை ஒழித்தல்
  2. வரி அறவிடுவதற்குச் சென்னை அதிகாரிகளுக்கு பதிலாக உள்நாட்டவரை அமர்த்துதல்.
  3. தென்னை வரி முதலிய புதிய வரிகளை நீக்குதல்.
  4. ஒல்லாந்தரின் நீதிமன்ற முறையை மீண்டும் நடைமுறைப் படுத்துதல்

- சென்னை நிர்வாகத்தின் பலவீனங்களைப் புரிந்து கொண்ட பிரித்தானிய அரசாங்கம் 1798 ஒக்டோபர் மாதம் முதல் கரையோர நிர்வாகத்தில் பங்குபற்றியது. இவ்வாறு வர்த்தகக் கம்பனியும் பிரித்தானிய முடியின் பிரிதிநிதியும் இணைந்து மேற்கொண்ட நிர்வாகம் ''இரட்டை ஆட்சிமுறை'' எனப்பட்டது.

- இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுநர் பிரடெரிக் நோர்த் ஆவார்.

- இரட்டையாட்சி முறையில் முடியின் பிரதிநிதியான ஆளுநரும் வர்த்தகக் கம்பனியின் அதிகாரிகளும் இணைந்து செயற்பட்டனர்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பிரான்சியப் புரட்சியுடன் ஆரம்பமான ஐரோப்பிய யுத்தம் முடிவடைந்து 1802இல் ஏமியன்ஸ் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. யுத்த காலத்தில் ஒல்லாந்தரிடமிருந்து கையேற்ற பிரதேசங்களை யுத்த முடிவில் அவர்களிடம் மீண்டும் கையளிக்க வேண்டி நேரலாம் என்ற அச்சம் விலகவே அதுவரை வர்த்தகக் கம்பனியின் நிர்வாகத்திலிருந்த கரையோரப் பிரதேசங்கள் 1802இல் பிரித்தானிய முடியின் கீழ் கொண்டு வரப்பட்டன. (1802 இல் இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டது.)

1815ஆம் ஆண்டு கண்டி கைப்பற்றப்படுதல்

- 1815இற்கு முன்னரே கண்டியைக் கைப்பற்றுவதற்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- 1800ஆம் ஆண்டு மக்டோவல் எனும் தளபதியின் கீழ் கண்டிக்கு ஒரு படையை அனுப்பி கண்டி மன்னனுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதற்கு ஆளுநர் நோர்த் முயற்சித்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை.

- 1803இல் கண்டியைக் கைப்பற்றுவதற்கு பிரடெரிக் நோர்த் தீர்மானித்தார்.

- இத்தீர்மானத்துக்கான காரணங்களாவன:
  1. கரையோரமாகவும் கண்டி இராச்சிய எல்லையிலுமாக இரு படையணிகளை சேவையில் அமர்த்த வேண்டியிருந்தமை.
  2. கண்டி இராச்சியத்துக்குள் பிரவேசிக்கும் கடவைகளில் வரி செலுத்த வேண்டியிருந்தமை
  3. கரையோர மக்களும் கண்டி மன்னனைத் தமது தலைவனாகக் கருதியமை.
  4. நிர்வாக நகரான கொழும்புக்கும் துறைமுக நகரான திருகோணமலைக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்த கண்டி இராச்சியம் தடையாக இருந்தமை.
  5. ஆங்கிலேயரைத் துரத்துவதற்கு மலையக மன்னன் பிரான்சியரின் உதவியை நாடலாம் என்ற சந்தேகம்.
  6. பிலிமத்தலாவை மகா அதிகாரம் கண்டி அரசனாவதற்கு ஆங்கிலேயரின் உதவியை நாடியமை.
  7. கரையோர வர்த்தகர்களுக்கு கண்டிப் படைவீரர்கள் துன்பமிழைத்தமை

- 1803 ஜனவரியில் ஆங்கிலத் தளபதி மக்டோவலின் தலைமையிலான படை கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தது.

- இப்படையெடுப்பின்போது கொழும்பிலிருந்தும் திருகோணமலை யிலிருந்தும் ஒரே சமயத்தில் இரு படையணிகள் கண்டி மீது படையெடுத்தன.

- ஆங்கிலப்படைகள் கண்டியை அடைந்தபோது மலையக மன்னன் தனது படைகளுடன் அங்குரங்கெத்த பகுதியை நோக்கிப் பின்வாங்கினான்.

- இச்சந்தர்ப்பத்தில் ஆங்கிலப்படை தாம் அழைத்துவந்த முத்துசாமி எனும் நாயக்கர் வம்ச இளவரசனைக் கண்டிக்கு அரசனாக்கினர்.

- ஆங்கிலேயருக்குச் சார்பான ஆட்சியாளனாக முத்துசாமியை அமர்த்தி அவனுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

- முத்துசாமிக்குப் பாதுகாப்பாக ஒரு படையை நிறுத்தி வைத்துவிட்டு ஆங்கிலப் படை கொழும்பு திரும்பியது.

- அதுவரை மறைந்திருந்த ஸ்ரீவிக்கிரம ராஜசிங்க மன்னன் தனது படையுடன் வந்து ஆங்கிலப் படையைத் தாக்கினான்.

- சிங்கள வீரர்களின் கெரில்லா தாக்குதலின் காரணமாக ஆங்கிலப்படைகள் படுதோல்வியடைந்தன.

- 1805ஆம் ஆண்டு ஆளுநராக நியமனம் பெற்றுவந்த தோமஸ் மெயிட்லன்ட் வெற்றிகரமாகக் கண்டியை ஆக்கிரமிப்பதற்கான பின்னணியை ஏற்படுத்தினார்.

- இதற்காக ஜோன்டொய்லி ஆளுநருக்கு உதவி புரிந்தான்.

- கண்டி இராசதானியில் சிங்களப் பிரதானிகளின் அதிகாரம் ஓங்கியிருந்தமையால் அதனைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னன் எடுக்க, ஆங்கிலேயர் அதனால் பயனடைந்தனர்.
  1. உயர் அரச பதவிகளை நாயக்கர் வம்சத்தவர்களுக்கு வழங்குதல்
  2. சிங்களப் பிரதானிகளிடையே பேதங்களை ஏற்படுத்தல்
  3. சிங்களப் பிரதானிகளின் சிறுகுற்றங்களுக்கும் பெரிய தண்டனைகளை வழங்குதல்

- 1810ஆம் ஆண்டு மகாஅதிகாரம் பிலிமத்தலாவை ஸ்ரீ விக்ரம ராஜசிங்க மன்னனைக் கொல்வதற்காகத் தீட்டிய சதித்திட்டம் அம்பலமாகவே மன்னன் அவரைக் கொலை செய்தான்.

- எஹலபொல சபரகமுவப் பகுதிக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

- ஆங்கிலேயரின் உதவியை எதிர்பார்த்த எகலபொல சப்பிரகமுவையில் மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இதனால் கோபமடைந்த கண்டி மன்னன் எகலபொலவின் மனைவியையும் பிள்ளைகளையும் தலதாமாளிகை தேவசங்கிந்த எனும் புனித இடத்தில் வைத்துக் கொடூரமாகக் கொலை செய்தான்.

- எகலபொல குடும்பத்தினரின் கோரமான கொலை காரணமாக கண்டிப் பிரதானிகள், புத்த பிக்குகள், பொது மக்கள் என்போரின் எதிர்ப்பலை மன்னனுக்கெதிராக மேலும் வளர்ச்சியடைந்தது.

- 1814இல் மலையகப் பகுதிக்குச் சென்ற கரையோர வியாபாரிகளை உளவாளிகள் எனக் கருதிய கண்டிப் படைவீரர்கள் அவர்களுக்குத் துன்பமிழைத்தனர்.

- மலையக மன்னனுக்கு எதிரான கிளர்ச்சிக்காரர்களைத் துரத்திச் சென்ற கண்டிப் படைவீரர்கள் பிரித்தானியருக்குச் சொந்தமான பகுதியிலிருந்த கிராமம் ஒன்றைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

- எனவே ஆங்கிலப் படையினர் கண்டி நோக்கிப் படையெடுத்தனர்.

- இறுதி நேரத்தில் மொல்லிகொட அதிகாரம் ஆங்கிலேயர் பக்கம் சேர்ந்து கொண்டார்.

- தப்பியோடிய மன்னன் ஸ்ரீ விக்ரமராஜசிங்கன் மெதமஹநுவர, போமுர எனுமிடத்தில் உடுப்பிட்டி ஆராச்சியின் வீட்டில் ஒளிந்திருந்தான்.

- சிங்களத் தலைவர்கள் மன்னனைப் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர்.

- 1815 மார்ச் 2ஆம் திகதி கண்டி கொலுமண்டபத்தில் வைத்து ஆளுநர் றொபேட் பிறவுண்றிக்குக்கும் கண்டிப் பிரதானிகளுக்குமிடையில் கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

- இதன்படி கண்டி இராச்சியம் ஆங்கிலேயர் வசமானது

11.1.2. பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான நடவடிக்கைகள்

- 1797-1798ஆம் ஆண்டுகளில் கரையோரத்தில் ஏற்பட்ட கிளர்ச்சி (ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது)

- 1818- முதலாம் சுதந்திரப் போராட்டம்

  - இதற்கான ஏதுவான காரணங்கள்:
    1. வெளிநாடொன்றில் வசிக்கின்ற தங்களால் சந்திக்க முடியாத மன்னன் ஒருவனின் ஆட்சியைக் கண்டி மக்கள் விரும்பாமை.
    2. கண்டிப் பிரதானிகளும் ஆங்கிலேயரின் அடிமைகளாக இருக்க வேண்டி ஏற்பட்டமை.
    3. கடவை வரிகள் நீக்கப்பட்டமையால் கண்டிப் பிரதானிகள் வருமானத்தை இழந்தமை.
    4. ஆங்கிலேயர் கண்டி ஒப்பந்தப்படி ஆட்சி செய்யாமை.
    5. ஊவா வெல்லஸ்ஸ பகுதிக்கு ஹஜ்ஜி மரிக்கார் எனும் முஸ்லிம் முகாந்திரம் நியமிக்கப்பட்டமை.
    6. தானே கண்டி அரசாட்சிக்கு உரித்துடைய துரைசாமி எனும் இளவரசன் என்று கூறிக்கொண்டு வில்பாவே என்பவன் கண்டிப் பகுதியில் பிக்குமார் புடைசூழ நடமாடியமை.

- 1817 ஒக்டோபர் 12ஆந் திகதி ஊவா வெல்லஸ்ஸவில் முதலாம் சுதந்திரப் போராட்டம் ஆரம்பமானது.

- 1818ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியோர்
  1. மொனரவில கெப்பட்டிபொல
  2. மடுகல்ல
  3. கிவுலேகெதர மொஹட்டால
  4. பூட்டாவே ரட்டேரால
- இப்போராட்டம் ஆங்கிலேயரால் கொடூரமான முறையில் அடக்கப்பட்டது.

- கிளர்ச்சித் தலைவர்களான கெப்பட்டிபொல, மடுகல்ல என்போர் போகம்பர என்று எனுமிடத்தில் வைத்து சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

- ஏனைய தலைவர்கள் நாடுகடத்தப்பட்டதுடன் அவர்களின் சொத்துக்கள் அரச உடைமையாக்கப்பட்டன.

- 1818ஆம் ஆண்டு போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்:
  1. போராட்டம் உரிய முறையில் திட்டமிடப்படாமை.
  2. புனித தந்த தாது ஆங்கிலேயர் வசமானமை.
  3. பிரதானிகளுக்கிடையே ஏற்பட்ட தனிப்பட்ட கோபதாபங்கள்.

4. ஆங்கிலேயர் மேற் கொண்ட கிராமங்களை அழிக்கும் கொள்கை. (பயிர்நிலங்களை அழித்தல்)
5. துரைசாமி ஆட்சி உரிமையாளன் அல்லன். அவன் வில்பாவே எனும் பிக்கு என்ற உண்மை வெளியானமை.

- 1818ஆம் ஆண்டு போராட்டத்தை வெற்றி கொண்ட ஆங்கிலேயர் தமது விருப்பப்படி 1818இல் கொள்கைப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர்.

- இப்பிரகடனத்தின்படி கண்டிப் பிரதானிகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.
  உ + ம்
  1. கிராமத்தலைவர் (கம்முலாதான) பதவிக்கு ஆட்களை அமர்த்துவதற்குப் பிரதானிகளுக்கிருந்த அதிகாரம் நீக்கப்பட்டது.
  2. கண்டிப் பிரதானிகள் ஆங்கிலேயரிடம் சம்பளம் பெறும் ஊழியர்களாக்கப்பட்டனர்.
  3. கண்டிப் பிரதானிகளுக்குப் பொதுமக்கள் வெகுமதிகள் வழங்குவது தடைசெய்யப்பட்டது.
  4. ஆளுநரின் அனுமதியுடன் மலையகத்தில் மாற்றுச் சமயங்களைப் பரப்பலாம் என்னும் ஒரு வாசகம் பிரகடனத்தில் சேர்க்கப்பட்டது.
  5. ஆங்கில நீதிமன்ற முறையும் மலையகப்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டன.

1848ஆம் ஆண்டு இரண்டாம் சுதந்திரப் போராட்டம்.

- கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சுகளின்படி 1833இல் செயற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் 1848இல் இரண்டாம் சுதந்திரப் போராட்டத்துக்கான பின்னணியை ஏற்படுத்தின.
- 1848 சுதந்திரப் போராட்டத்துக்கான காரணிகள்:

  1. சிவில் சேவையாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்த காரணத்தால் சிவில் சேவை பாதிக்கப்பட்டமை.
  2. உள்நாட்டு விவசாயத்துறைக்கு அரச ஆதரவு கிடைக்காமை.
  3. மாவட்ட நீதிமன்ற முறையால் கிராமத்தவர்கள் துன்பத்துக் குள்ளானமை.
  4. ஸ்டுவர்ட்மெக்கன்சி ஆளுநரால் 1840 இல் பிறப்பிக்கப்பட்ட தரிசு நிலச் சட்டத்தால் விவசாயிகள் மிகவும் சிரமங்களுககுள்ளாகினர்.
  5. பௌத்த சமயத்துக்கான அரச ஆதரவு நீக்கப்பட்டமை.
  6. ரொறிங்டன் ஆளுநர் புதிய வரிகளை விதித்தமை.
  7. நீலப்புத்தகம் (Blue book) எனும் புள்ளி விபர சஞ்சிகைக்கான தரவுகள் திரட்டப்பட்ட போது அது புதிய வரிகளுக்கான ஏற்பாடென்ற வதந்தி பரவியமை.

- கண்டி மக்கள் பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு முறைப்பாடொன்றைச் செய்வதற்காகச் சென்ற போது ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக ஆளுநர் யுத்த காலச் சட்டத்தைப் பிறப்பித்து பொதுமக்களை கொன்றொழித்தார்.

- மாத்தளையில் ஆரம்பித்த இப்போராட்டம் கண்டி, தம்புள்ள, வாரியபொல, குருணாகல் முதலிய இடங்களில் வெகுவிரைவாகப் பரவியது.

- வீரபுரன் அப்பு, கொங்காலேகொட பண்டா, குடாபொல பிக்கு, அங்குரன்கெத்த டிங்கிரிரால முதலிய தேசியத் தலைவர்களே இப்போராட்டத்தை வழிப்படுத்தினர்.

- **1848ஆம் ஆண்டுப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்:**

  1. போராட்டம் உரிய முறையில் ஒழுங்கமைக்கப்படாமையும் அனுபவம் போதாமையும்.
  2. மலையகம் முழுதும் சிறப்பான பாதைவசதிகள் காணப்பட்டமை.
  3. ஆங்கிலேயருக்கு தேவையான சந்தர்ப்பங்களில் மேலதிகப்படைகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை.

- **1848 போராட்டத்தின் விளைவுகள்:-**

  1. குற்றவாளிகளாக இனங்காணப்பட்டோருக்குத் தண்டனை வழங்கப்பட்டதுடன் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டன.
  2. ரொறிங்டன் ஆளுநர் பிரித்தானியாவுக்குத் திருப்பி அழைக்கப்பட்டார்.
  3. எதிர்ப்புக்குரிய வரிகள் நீக்கப்பட்டன.
  4. நீர்ப்பாசன, விவசாய நடவடிக்கைகளுக்கு அரச அனுசரணை வழங்கப்பட வேண்டும் என்பதை பிரித்தானிய நிருவாகிகள் உணர்ந்தனர்.
  5. உள்நாட்டு விவசாய அபிவிருத்தி, சுகாதார நலன் மேம்பாடு, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கான பாதையமைப்பு அபிவிருத்தி, உள்ளூராட்சி மன்ற மேம்பாடு என்பவற்றுக்கு 1852 இன் பின்னர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

     உ + ம்: 1865இல் மாநகர சபை அறிமுகம்
     1871இல் கிராம சபை அறிமுகம்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

11.1.3 **அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும் நிர்வாகமும் - 1947 வரை**

கோல்புறூக் சீர்திருத்தம்:-

- 1833இல் கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- இலங்கையிலிருந்து கிடைத்த வருமானத்தை விட நிர்வாகச் செலவு அதிகரித்திருந்தமைக்கான காரணத்தை ஆராயவே கோல்புறூக் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

- 1829 இல் இலங்கை வந்த வில்லியம் கோல்புறூக் இலங்கையின் நிர்வாகம், வருமானம், அரசாங்க நிறுவனங்கள் என்பன பற்றிய ஆலோசனைகளை முன்வைத்தார்.

- 1830இல் இலங்கை வந்த சாள்ஸ்.எச்.கமரன் நீதித்துறை பற்றிய ஆலோசனைகளை முன்வைத்தார்.

- **கோல்புறூக் ஆணைக்குழுவின் ஆலோசனைகள்:**

  1. கரையோரப்பிரதேசமும் கண்டியும் இணைக்கப்பட்டு ஒரே நிர்வாக அலகாக ஆட்சி செய்யப்பட வேண்டும்.
  2. 16 மாகாணங்களாக இருந்த இலங்கையை 5 மாகாணங்களாகக் குறைத்தல்.
  3. சிவில் சேவையாளர்களின் சம்பளத்தைக் குறைத்தலும் ஓய்வூதியத்தை நீக்குதலும்.
  4. கட்டாய சேவையான இராஜகாரிய முறையை நீக்குதல்
  5. ஆங்கிலக் கல்வி முறையை விரிவுபடுத்தல்
  6. அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை நீக்கி சுதந்திரமான வர்த்தக உரிமையை ஏற்படுத்துதல்
  7. சட்டவாக்க சபை, சட்ட நிரூபண சபை எனும் இரு சபைகள் அறிமுகப்படுத்துதல்.
  8. முழு நாட்டிற்கும் பொதுவான ஒரே நீதிமன்ற முறையை அறிமுகப்படுத்துதலும் அதன் கீழ்மட்ட நீதிமன்றமாக மாவட்ட நீதிமன்றம் உருவாக்கப்படுதலும்.

- சட்டவாக்க சபையில் பதினைந்து உறுப்பினர்கள் இடம்பெற்றனர். இவர்களுள் உத்தியோக பற்றுள்ள அங்கத்தவர்கள் 9 பேரும், உத்தியோக பற்றற்ற அங்கத்தவர்கள் 6 பேரும் இடம்பெற்றனர்.

  1. உத்தியோக பற்றற்ற உறுப்பினர்கள் ஆளுநரால் பெயர் குறிப்பிடப்பட்டனர்.
  2. இவர்கள் இன ரீதியான நியமனம் பெற்றனர்.



- 1840 முதல் அரசியலமைப்புச் சீர்திருத்தம் கோரி கிளர்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஐரோப்பியரே அதில் முன்னின்றனர்.

- 20ஆம் நூற்றாண்டு ஆரம்பமாகும்போது தேசிய தலைவர்கள் அரசியலமைப்புச் சீர்திருத்தக் கோரிக்கைக்காக பல சங்கங்களை உருவாக்கிக் கொண்டனர்.
  1. இலங்கைத் தேசிய சங்கம்
  2. யாழ்ப்பாணச் சங்கம்
  3. சிலாபச் சங்கம்

- அரசியலமைப்புச் சீர்திருத்தம் கோரியோரின் பிரதான கோரிக்கைளாவன:
  1. உத்தியோக சார்பற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்
  2. பிரதேச ரீதியிலான பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தல்
  3. சட்டவாக்க சபையின் அதிகாரங்களைக் கூட்டுதல்
  4. சட்ட நிரூபண சபைக்கும் உத்தியோக சார்பற்ற உறுப்பினர்களை நியமித்தல்.

மக்கலம் அரசியலமைப்புச் சீர்திருத்தம்:

- 1910இல் ஆளுநர் மக்கலமின் ஆட்சிக்காலத்தில் முன்வைக்கப்பட்டது

- 1912 முதல் இது செயற்பட்டது

- சட்டவாக்க சபையின் அங்கத்தவர் எண்ணிக்கை 21 ஆக அதிகரிக்கப்பட்டது.

  உத்தியோகப்பற்றுடையோர் - 11
  உத்தியோகப்பற்றற்றோர் - 10

- இலங்கையரில் 4% இனருக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ஆங்கிலக் கல்வி பெற்ற சொத்துடைய மத்திய தர வகுப்பினருக்கே இவ்வாக்குரிமை வழங்கப்பட்டது.

- சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே கல்வி கற்ற இலங்கையர் சார்பில் சட்டவாக்கச் சபைக்குத் தெரிவான முதலாவது இலங்கையராவார்.

- மக்கலம் சீர்திருத்தத்தினாலும், அரசியலமைப்புச் சீர்திருத்தக் கோரிக்கையாளர்கள் திருப்தியடையவில்லை.

- 1915இல் நிகழ்ந்த சிங்கள, முஸ்லிம் இனக் கலவரத்தை அடக்குவதற்கு ஆளுநர் றொபட் சாமஸ் கடும் நடவடிக்கை எடுத்தார்.

- 1919இல் இலங்கைத் தேசிய சங்கம் உருவானது.

- இலங்கை தேசிய சங்கம் அரசியலமைப்புச் சீர்திருத்தக் கோரிக்கைகளுக்கான அமைப்புக்களில் முன்னணி வகித்தது.

மனிங் அரசியலமைப்புச் சீர்திருத்தம்:

- இது 1921இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

- இதில் சட்டவாக்க சபைக்கு உத்தியோக சார்புள்ள உறுப்பினர் 14 பேரும், உத்தியோக சார்பற்ற உறுப்பினர் 23 பேரும் இடம்பெற்றனர்.

- முதல் முறையாக சட்டநிரூபண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

- முதன் முறையாக பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

- சட்ட நிரூபண சபைக்குமுதன் முறையாக இலங்கையர் மூவர் நியமிக்கப்பட்டனர்.

1924 மனிங் - டிவன்சயர் யாப்புச் சீர்திருத்தம்

- இதன்படி சட்டவாக்கச் சபையில் உத்தியோக சார்பற்ற அங்கத்தவர் தொகை 37 ஆகவும் உத்தியோக சார்பு அங்கத்தவர் தொகை 12 ஆகவும் மாற்றமடைந்தது.

- 1924 சட்டவாக்க சபையில் அதிகாரமும் பொறுப்புக்களும் வெவ்வேறாகக் காணப்பட்டமை பெருங்குறைபாடாகும்.

உ-ம்: நிர்வாக நடவடிக்கைகளுக்கான பொறுப்பு ஆளுநரிடமே காணப்பட்டது. ஆயினும் சட்டவாக்க சபையில் பெரும்பான்மை பலம் உத்தியோக சார்பற்ற அங்கத்தவர்களிடமே காணப்பட்டது. என்றாலும் அவர்களுக்கு எவ்வித பொறுப்புகளும் வழங்கப்படவில்லை.

டொனமூர் அரசியல் சீர்திருத்தம்:

- 1924 யாப்புச் சீர்திருத்தத்திலும் இலங்கையின் கல்விகற்ற மத்திய வகுப்பினர் திருப்தியடையவில்லை.

- 1924 யாப்புச் சீர்திருத்தத்தை அடுல்படுத்துவது கடினம் என்பதால் அப்போதைய ஆளுநர் ஹியூ கிலிப்பர்ட் புதிய யாப்புச் சீர்திருத்தமொன்று அறிமுகப்படுத்தப்படுதல் உகந்தது என குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அறிவித்தார்.

- புதிய அரசியல் யாப்புச் சீர்திருத்தம் ஒன்றைச் சிபார்சு செய்வதற்காக 1927ம் ஆண்டு டொனமூர் பிரபுவின் தலைமையில் ஓர் ஆணைக்குழு இலங்கை வந்தது.

- டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சுகளின்படி 1931இல் டொனமூர் யாப்பு அமுலுக்கு வந்தது (சர்வசன வாக்குரிமை, அரசுக் கழகம், நிர்வாகக் குழுமுறை)

- 1931 முதல் 1947 வரை அமுலில் இருந்த டொனமூர் யாப்பில் காணப்பட்ட குறைபாடுகள்:
  1. ஆளுநருக்கும் அரச அதிகாரிகளுக்கும் அதிகளவு அதிகாரங்கள் காணப்பட்டமை.
  2. இலங்கை மக்களுக்கு இதன் மூலம் அரைகுறைப் பொறுப்பாட்சியொன்றே வழங்கப்பட்டிருந்தமை.

சோல்பரி யாப்புச் சீர்திருத்தம் (1947)

- பூரண அதிகாரமும் பொறுப்பும் வாய்ந்த ஆட்சி முறையொன்றைத் தமக்குத் தரும்படி இலங்கைத் தேசியத் தலைவர்கள் கிளர்ச்சி செய்தனர். இதன் பயனாக 1944இல் சோல்பரி பிரபுவின் தலைமையில் ஓர் ஆணைக்குழு இலங்கைக்கு வந்தது.

- சோல்பரி ஆணைக்குழு முன்வைத்த சிபார்சுகள், இலங்கையின் நிர்வாகக் குழுத் தலைவர்கள் (அமைச்சர்கள்) முன்வைத்த அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களுக்கான ஆலோசனைகளாகவே அமைந்தன.

- 1947இல் அமுல்படுத்தப்பட்ட சோல்பரி யாப்பின் பிரதான அம்சங்களாவன:

1. தேசாதிபதிப் பதசி
2. இருமன்றங்களையுடைய பாராளுமன்றம்
3. பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை (கெபினட்)
4. அரசாங்க சேவை ஆணைக்குழுவும் நீதிச் சேவை ஆணைக்குழுவும்

- தேசாதிபதி நாம நிர்வாகியாவார்

- பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 101 ஆகும். இதில் 95 பேர் சர்வசன வாக்குரிமை மூலம் 6 பேர் நியமனம் மூலமும் அங்கம் வகித்தனர். பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 5 வருடங்களாகும்.

- மேல் மன்னறமான செனட் சபையில் 30 பேர் அங்கம் விகிப்பர்.

- நிர்வாக நடவடிக்கைகள் பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக்கு உரியது.

- அரசாங்கச் சேவையினதும், நீதிச் சேவையினதும் சுதந்திரத்தை அவ்விரு ஆணைக்குழுக்களும் உறுதி செய்தன.

- புதிய அரசியல் யாப்புப்படி 1947இல் தேர்தல் நடைபெற்றது.

- அத்தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைந்தது.

- டி.எஸ்.சேனாநாடகக் அவர்கள் இலங்கையின் முதலாவது பிரதமரானார்.

- பிரித்தானியரின் கீழான இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பு பிரித்தானிய ஆட்சி முறைக்கேற்ப அமைக்கப்பட்டிருந்தது.

பிரித்தானிய முடி

பிரித்தானிய பாராளுமன்றம்

குடியேற்றநாட்டுக் காரியதரிசி

பிரித்தானிய தேசாதிபதி

பிரதான செயலாளர்

சிவில் அதிகாரிகள்

திணைக்களத் தலைவர்கள் — ஏஜன்டுகள்

தேசிய உத்தியோகத்தர் — தேசிய உத்தியோகத்தர்

- 1798ம் ஆண்டில் இலங்கையில் சிவில் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

- மத்திய அராசாங்கத்தின் நடவடிக்கைகள் திணைக்களங்களை அடிப்படையாகக் கொண்டே இடம்பெற்றன.

- பிரடரிக் நோர்த் ஆளுநரின் காலத்தில் புதிய திணைக்களங்கள் சில ஆரம்பிக்கப்பட்டன.
  உ-ம்: 1800 - நில அளவைத் திணைக்களம்
  1800 - பொது வேலைகள் திணைக்ளம்
  1801 - காணிப் பதிவுத் திணைக்களங்கள்
  1805 முதல் 1811 வரை கரையோரப் பகுதிக்கு ஆளுநராக இருந்த தோமஸ் மெயிட்லண்ட் இலங்கையில் முறையான சிவில் சேவையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்.
  உ-ம்: அனைத்து சிவில் சேவை உத்தியோகத்தரும் சுதேச மொழிகளை கற்பதற்கு உத்தரவிட்டார்.

- கோல்புறூக் சீர்திருத்தங்களின் படி திணைக்களங்களின் நிர்வாகம் மேலும் ஒழுங்குபடுத்தப்படுவதற்கான நடவக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- 16 நிர்வாக அலகுகளாகக் காணப்பட்ட இலங்கை கோல்புறூக் சீர்திருத்தப்படி 5 நிர்வாக அலகுகளாகக் குறைக்கப்பட்டது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- கோல்புறூக் ஆணைக் குழுவின் சிபார்சுப்படி 1833இல் செயற்படுத்திய சீர்திருத்தங்களின்படி செலவுகளைக் குறைப்பதற்கான மார்க்கமாக சிவில் சேவையாளர்களுக்கான சம்பளம் குறைக்கப்பட்டு ஓய்வூதியமும் இல்லாமலாக்கப்பட்டது.

- பிரித்தானிய நிர்வாக முறையின் கீழ் கிராமப் பிரதேசங்கள் வகனிக்கப்படாமல் விடப்பட்டன.

- இதனை உணர்ந்து கொண்ட ஆளுநர்கள் அடிக்கடி இலங்கையின் மாகாணங்களின் எண்ணிக்கையைக் கூட்டினர்.

  உ-ம்: வடமேல் மாகாணம்
  வடத்திய மாகாணம்
  ஊவா மாகாணம்
  சபரகமுவ மாகாணம்

- பிரதேச நிர்வாகம் கச்சேரிகளை மையமாகக் கொண்டு நடைபெற்றது

  பிரதேச நிர்வாக அமைப்பு

  அரசாங்க அதிபர் - கச்சேரி

  உப அரசாங்க அதிபர்

  கிராம சேவகர்

- உள்ளூராட்சி மன்றங்களும் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

  உ-ம்: 1865 - மாநகர சபை

  1871 - கிராமசபை

  1897 - நகர சபை

செயற்பாடு 11.1.1

தேர்ச்சி மட்டம்: இலங்கையில் நிலவிய குறையாடுகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட பிரித்தானியர் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்ட விதத்தை விளக்குவார்.

செயற்பாடு: "ஆங்கிலேயர் இலங்கையில் தமது அதிகாரத்தை நிறுவிய முறையைத் தேடுவோம்."

நேரம்: 120 நிமிடங்கள்

தர உள்ளீடுகள்:

- இணைப்பு இல 11.1.1.1
- இணைப்பு இல 11.1.1.2
- இணைப்பு இல 11.1.1.3
- பாடப் புத்தகம்
- எழுதும் தாள்

கற்றல் கற்பித்தல் செயற்பாடு:

படி 11.1.1.1:

- இணைப்பு இலக்கம் 11.1.1.இல் காணப்படும் பிரித்தானியாவின் தேசியக் கொடியை வகுப்பில் காட்சிப்படுத்தவும்.
- இந்தக் கொடி (சுமங்கல தேரர் கீழிறங்கியது) எந்த நாட்டுக்குரியது?
- அந்த நாடு எந்தக் கண்டத்தைச் சேர்ந்தது?
- பிரித்தானியர் கீழைத் தேசத்திற்கு வருவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் யாவை?
- முதலிய கேள்விகளை எழுப்பி கீழ்வரும் விடயங்கள் வெளிப்படும் வண்ணம் கலந்துலையாடுக.

• போர்த்துக்கேயர், ஒல்லாந்தரைப் பின்பற்றி ஆங்கிலேயரும் கீழைத்தேச வர்த்தகப் போட்டியில் பங்குபற்றினர். • ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி கீழைத்தேச வர்த்தக உரிமையைப் பெற்றுக்கொண்டது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- கீழைத்தேச பிரான்சிய வர்த்தக சங்கத்தை நிறுவிக் கொண்ட பிரான்சியரும் ஆங்கிலேயருடன் வர்த்தகப் போட்டியில் ஈடுபட்டனர்.

- சென்னை ஆங்கிலேயரின் வர்த்தக மத்திய நிலையமாக மாறியது.

(05 நிமிடங்கள்)

படி 11.1.1.2:
- வகுப்பு மாணவர்களை உரிய முறைப்படி குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 11.1.1.2.ஐ குழுக்களுக்கு வழங்கவும்.
- ஒரு குழுவுக்கு ஒரு தலைப்பில் மாத்திரம் வினாக்களைத் தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கவும்.
- ஒவ்வொரு முக்கியமான விடயமும் உள்ளடங்குமாறு வினாக்களைத் தயாரிக்குமாறு அறிவூட்டவும்.
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

(20 நிமிடங்கள்)

படி 11.1.1.3:
- வினாக்களைத் தயாரித்த பின்னர் மாணவர் குழுக்களை மீண்டும் அழைக்கவும்.
- இணைப்பு 11.1.1.3 இன்படி மாணவர்களை இரு அணிகளாகப் பிரிக்கவும்.
- இவ்விரு அணிகளுக்கும் தலைவர்களை நியமிக்குமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவும்.
- இணைப்பு 11.1.1.3இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கின்படி மிகப் பொருத்தமான வினாக்களை வரிசைப்படுத்திக கொள்ளுமாறு ஆலோசனை வழங்கவும்.

(15 நிமிடங்கள்)

படி 11.1.1.4:
- ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் மாணவர் அணிகள் இரண்டுக்குமிடையில் வினா-விடைப் போட்டியை மாணவர்களைக் கொண்டே நடாத்தவும்.
- வினா-விடைப் போட்டி முடிவில் உரிய கேள்விகளையும் அதற்குரிய பதில்களையும் தமது பயிற்சிக் கொப்பியில் எழுதிக் கொள்ளுமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவும்.

(40 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 11.1.1.5: • குழுச் செயற்பாட்டின் மூலம் மாணவரின் குறைகளையும், நிறைகளையும் இனம் காண்க.

• மாணவர்கள் மறந்த விடயங்களையும் வலியுறுத்தி, கீழ்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு தொகுப்புரை செய்க.

- 17ம் நூற்றாண்டில் இந்து சமுத்திர வர்த்தகத்தைக் கைப்பற்றுவதில் பிரித்தானியரும் பிரான்சியரும் போட்டியிட்டனர்.
- இந்தியாவின் பலவீனமான அரசியல் பின்னணியைப் பயன்படுத்திக் கொண்டு பிரிதானியரும் பிரான்சியரும் இந்தியாவைத் தமது உடமையாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டனர்.
- இந்து சமுத்திரத்தில் தமது வர்த்தக ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு இலங்கையை மத்திய நிலையமாக வைத்திருப்பதில் ஆங்கிலேயரின் கவனம் திரும்பியது.
- ஐரோப்பியாவில் ஏற்பட்ட அரசியல் செயற்பாடுகளின் விளைவாக இலங்கையில் கரையோரப் பிரதேசங்கள் ஆங்கிலேயருக்குச் சொந்தமானது.
- 1796 பெப்ரவரி மாதம் முதல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின் நிர்வாகம் வர்த்தகக் கம்பனிக்கு உரிமையானது.
- கரையோரப் பிரதேசங்களில் வரி சேகரிப்பதற்காக சென்னையிலிருந்து தருவிக்கப்பட்ட அவுமில்தார்களின் செயற்பாடு காரணமாக 1796இல் கரையோரப் பகுதிகளில் ஆங்கிலேய ராட்சிக்கு எதிரான கிளர்ச்சி ஏற்பட்டது.
- வர்த்தகக் கம்பனியின் திறமையற்ற நிர்வாகம் காரணமாக கரையோரப் பகுதி நிர்வாகியாக 1798இல் ஆளுநர் பிரட்ரிக் நோர்த் அனுப்பப்பட்டார்.
- 1798 முதல் 1802 வரை கரையோரப் பிரதேசங்களில் இரட்டை ஆட்சி முறை நிலவியது.
- 1801 இல் ஐரோப்பிய சமாதானத்துக்காக ஏமியன்ஸ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.
- 1802 இல் இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டது.
- 1803இல் கரையோரம் பிரித்தானிய ஆளுநரால் மட்டுமே ஆட்சி செய்யப்பட்டது.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பகுதியில் தமது ஆட்சியை நிறுவிய விதத்தை விளக்குவார்.
- ஆங்கிலேயரால் கரையோரப் பகுதி கைப்பற்றப்பட்ட விதம் பற்றிய கேள்வி-பதில் போட்டியொன்றை ஒழுங்கமைப்பார்.
- சுதந்திரமான இனமொன்றாக வாழ்வதன் முக்கியத்துவத்தை மதிப்பிடுவார்.
- குழுச் செயற்பாடொன்றில் ஈடுபடும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.
- தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.

பின் தொடர் வேலை:

- ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரங்களில் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்ட விதம் பற்றி பத்திரிகைச் செய்தி ஒன்றை தயாரிக்கவும்.

இணைப்பு 11.1.1.1.



பிரித்தானிய தேசியக் கொடியின் படம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு 11.1.1.2.

செயற்பாட்டுப் பத்திரம்

வினா - விடைப் போட்டிக்காக கீழ்வரும் தலைப்புகளில்ஒவ்வொரு குழுவினரும் வினாக்களைத் தயாரிக்கவும்.
குழு இலக்கம் I பிரித்தானியர் கீழைத்தேச வர்த்தகப் போட்டியில் பங்குகொள்ளுதல்
குழு இலக்கம் II பிரித்தானியரின் கவனம் இலங்கை மீது திரும்புதலும் கரையோரங்களைக் கைப்பற்றுதலும்
குழு இலக்கம் III சென்னை வர்த்தக சங்கத்தின் நிர்வாகமும் 1797 கிளர்ச்சியும்
குழு இலக்கம் IV இரட்டையாட்சி முறையும் இலங்கை பிரித்தானியாவின் முடிக்குரிய நாடாதலும்.

இணைப்பு 11.1.1.3.

ஆலோசனைப் பத்திரம்

- வகுப்பிலுள்ள மாணவர்களை எனும் இரு அணிகளாகப் பிரிக்கவும்.
- பாடப் புத்தகத்தின் தலைப்பு ஒழுங்கில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 20 வினாக்களை தலைவர்களுக்கு வழங்கவும்.
- அணித் தலைவர்களைக் கொண்டு கேள்வி-பதில் போட்டியை ஆரம்பிக்கவும்.
- வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் கலந்து கொள்ளும் வகையில் போட்டி நிகழ்ச்சியை அமைக்கவும்.
- புள்ளி வழங்கும் திட்டம்
  உரிய மாணவர் விடையளித்தால் 10 புள்ளிகள்
  அதே அணியில் வேயொருவர் விடையளித்தால் 5 புள்ளிகள்
  கேள்வியைக் கேட்ட அணியினரே விடையளித்தால் 2 புள்ளிகள்
- மேற்கூறப்பட்ட ஒழுங்கில் புள்ளிகளைப் பதிவு செய்வதில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.
- மாணவர்களின் குறைகளை களையும் வகையில் ஆலோசனை வழங்கி வினா-விடைப் புதிர்ப் போட்டியை ஒழுங்கமைக்கவும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயற்பாடு 11.1.2

தேர்ச்சி மட்டம்: சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆங்கிலேயராட்சிக்கு எதிராக சுதேச மக்கள் எழுச்சியடைந்த விதம் பற்றி விளக்குவார்.

"செயற்பாடு : வெல்லஸ்ஸ கிளர்ச்சி"

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள்:

- இணைப்பு இல:11.1.1.1.
- இணைப்பு இல:11.1.2.2
- பாடப்புத்தகம்
- எழுதும் தாள்
- இலங்கையின் முதலாவது சுதந்திரப் போராட்டமான வெல்லஸ்ஸ கிளர்ச்சி பற்றி தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய புத்தகங்களைப் பற்றி முதல்நாள் மாணவரை அறிவூட்டவும்.

கற்றல், கற்பித்தல் செயற்பாடு:

படி 11.1.2.1

- இணைப்பு 11.1.2.1. இல் குறிப்பிட்ட படி ஏற்கெனவே பயிற்சியளிக்கப்பட்ட ஒரு மாணவனை அல்லது மாணவினைப் பெயர் குறிப்பிடாது கெப்பட்டிபொல எனும் கதாபாத்திரமாக வகுப்பறையில் தோன்றச் செய்யவும்.

- இக் கதாபாத்திரத்திற்குரியவர் யார்?

- இவரது தலைமையில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டம் எது?

- அக்கிளர்ச்சி எப்பிரதேசத்தில் ஆரம்பமானது?

முதலிய கோள்விகளுடன் பாடப் பிரவேசம் செய்து கீழ்வரும் விடயங்கள் உள்ளடங்கும் வகையில் பாடத்தைத் தொடரவும்.

- 1815இல் ஆங்கிலேயர் முழு இலங்கையையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்.

- 1815-மார்ச் 2ம் திகதி கண்டி கொலுமண்டபத்தில் வைத்து செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைப் படி கண்டியின் மரபுகளைப் பேணுவதற்கு ஆங்கிலேயர் உடன்பட்டனர்.

- ஆயினும் ஆங்கிலேயரின் ஆட்சி ஒப்பந்தத்தில்கூறியவாறு அமையவில்லை.

- பிரித்தானியர் ஆட்சியில் அதிருப்தியடைந்த மலையகத் தலைவர்கள் தமது முதலாவது சுதந்திரப் போராட்டத்தை ஊவா வெல்லஸ்ஸ பகுதியில் ஆரம்பித்தனர்.

(10 நிமிடங்கள்)

படி 11.1.2.2

- வகுப்பு மாணவர்களை உரிய முறையில் குழுக்களாகப் பிரித்துக் கொள்ளவும்.

- இணைப்பு 11.1.2.2ஐ பல பிரதிகள் எடுத்து, (மாணவர் ஒப்படை பத்திரங்கள்) குழுக்களுக்கு வழங்கவும்.

- இணைப்பு 11.1.2.2இல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களைத் தொகுத்து உரிய தலைப்பிட்டு இலங்கையின் முதலாவது சுதந்திரப் போராட்டம் பற்றிய விபரப் பத்திரம் ஒன்றைத் தயாரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கவும்.

- தேவையான சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்கு ஆலோசனை கூறி செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

(30 நிமிடங்கள்)

படி 11.1.2.3:

- ஒவ்வொரு குழுவும் தொகுத்த விபரங்களை வகுப்பறையில் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.

- ஒரு குழுவினால் முன் வைக்கப்படும் தகவல்கள் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்கு ஏனைய குழுவினருக்கு சந்தர்ப்பம் வழங்குக.

- இலங்கையின் முதலாவது சுதந்திரப் போராட்டம் பற்றி வெளியிடப்படும் தகவல்களை தமது பயிற்சிக் கொப்பியில் குறித்துக் கொள்ளுமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவும்.

- தேவையான சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கி செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும்.

(30 நிமிடங்கள்)

படி 11.1.2.3

- ஒவ்வொரு குழுவினரும் திரட்டிய தகவல்களை வகுப்பில் முன் வைப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கவும்.
- முன்வைப்புச் செய்யும் தகவல்கள் பற்றி ஏனைய குழுக்களுக்கு கருத்துத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- இலங்கையின் முதலாவது சுதந்திரப் போராட்டம் பற்றி முன்வைக்கப்படும் தகவல்களைத் தமது அப்பியாசக் கொப்பியில் குறித்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கவும்.
- குழுச் செயற்பாடுகளின் போது மாணவர்களின் குறை, நிறைகளை இனங்கண்டு கொள்ளவும்.
- கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக தொகுப்புரை செய்யவும்.

- இலங்கையின் முதலாவது சுதந்திரப் போராட்டம் ஊவ வெல்லஸ்ஸயில் ஆரம்பமானது.
- மொனரவில கெப்பட்டிப்பொல, மடுகல்ல, பூட்டாவ ரட்டேரால ஆகியோர் சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கினர்.
- 1818 சுதந்திரப் போராட்டத்துக்கான காரணிகள்:
  1. கண்டி ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி பௌத்த சமயத்துக்கு உரிய கௌரவம் வழங்கப்படாமை.
  2. கண்டிப் பிரதானிகளின் பதவிகள், அதிகாரங்கள், சலுகைகள் என்பவற்றைப் பாதுகாப்பதாக ஒப்பந்தத்தில் கூறப்பட்டாலும், பின்னர் அவை உதாசீனம் செய்யப்பட்டமை.
  3. ஆங்கில அதிகாரிகள் பிராதனிகளையும் பிக்குகளையும் புறக்கணித்தமை.
  4. கண்ணுக்குப் புலப்படாத அரசரின் ஆட்சியின் கீழ் வாழ நேர்ந்தமை.
  5. ஊவா-வெல்லஸ்ஸப் பகுதிக்கு ஹஜ்ஜி மரிக்கார் எனும் முஸ்லிம் முகாந்திரத்தை ஆங்கிலேயர் நியமித்தமை.
- 1817 நடுப்பகுதியில் கண்டி ஆட்சி உரிமை தனக்குரியதென்ற வில்பாவே துரைசாமி என்பவன் கண்டிப் பகுதியில் நடமாடினான்.
- ஊவா வெல்லஸ்ஸப் பகுதியில் ஆரம்பித்த சுதந்திரப் போராட்டம் மலையகம் எங்கும் பரவியது.
- மொல்லிகொட, எஹலபொல எனும் பிரதானிகள் சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவில்லை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- 1818 சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்:

  1. போராட்டம் சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப் படாமை.
  2. சிங்களத் தலைவர்களிடையே தனிப்பட்ட விரோதங்கள் நிலவியமை
  3. வில்பாவே துரைசாமி போலியானவன் என்பது வெளிப்பட்டமை
  4. புனித தந்தம் ஆங்கிலேயர் வசமானமை.
  5. ஆங்கிலேயர் சிங்களக் கிராமங்களில் அழிவு நாசங்களை ஏற்படுத்தியமை.
  6. 1818 பிரகடனத்தில் சரணடையும் கிளர்ச்சியாளர்களுக்கு மன்னிப்பு வழங்குவதாக அறிவித்தமை.

- கெப்பட்டிபொலவும், மடுகல்லவும் கண்டி போகம்பரயில் வைத்து சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

- எஹலபொல உள்ளிட்ட குழுவினர் மொரீசியஸ் தீவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- முதலாவது சுதந்திரப் போராட்டம் பற்றி விளக்குவார்.
- எமது நாட்டின் முன்னைய தலைவர்கள் நாட்டுக்காக முன்வந்து போராடியமையை பெருமையுடன் நினைவுகூருவார்.
- முதலாம் சுதந்திரப் போராட்டம் பற்றி விபரப்பத்திரமொன்றைத் தயாரிப்பார்.
- குழு ரீதியாக செயற்படும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.
- தரவுகளை முன்வைக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.

பின் தொடர் வேலை:

- ‘‘ஊவா வெல்லஸ்ஸ சுதந்திரப் போராட்டம்’’ எனும் தலைப்பின் கீழ் பாடசாலை சுவர் பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று எழுதுக.

இணைப்பு 11.1.2.1

பாடப் பிரவேசத்துக்கான கூற்று

பின்வரும் கூற்றை ஒரு மாணவனை அல்லது மாணவியைக் கொண்டு வாசிக்கச் செய்யவும்.

> "நான் மரணத்துக்குப் பயந்தவன் அல்ல. நானே ஊவா வெல்லஸ்ஸ போராட்டத்துக்குத் தலை வகித்தேன். நான் புனித தந்துதாது வணக்கத்துக்கான சுலேகத்தை சொல்லி முடித்தவுடன் ஒரே வெட்டில் எனது தலையை உடம்பைவிட்டு வேறாக்கிவிடு. இவ்வாறானதொரு மரணம் ஏற்படுமளவுக்கு நான் எப்பாவமும் செய்கிலேன். இலு எனது பூர்வஜென்ம விதி என நான் கருதுகிறேன்."

இணைப்பு 11.1.2.2

செயற்பாட்டுப் பத்திரம்

இலங்கையின் முதலாவது சுதந்திரப் போராட்டம் தொடர்பாக கீழ்வரும் அம்சங்கள் உள்ளடங்கும் வகையில் செயற்பாட்டுப் பத்திரம் ஒன்றைத் தயாரிக்கவும்.

- முதலாம் சுதந்திரப் போராட்டத்துக்கான காரணங்கள்
- முதலாம் சுதந்திரப் போராட்டத்தின் ஆரம்பமும் பரவலும்.
- சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியோர்.
- முதலாம் சுதந்திரப் போராட்டம் தோல்வியடைவதற்கான காரணங்கள்
- முதலாம் சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயற்பாடு 11.1.3.

தேர்ச்சி மட்டம்: பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றி விளக்குவார்.

செயற்பாடு: "பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றி ஆராய்வோம்"

நேரம்: 7 பாட வேளைகள்

தர உள்ளீடுகள்:
- இணைப்பு இல 11.1.3.1
- இணைப்பு இல 11.1.3.1
- இணைப்பு இல 11.1.3.1
- பாடப் புத்தகம்
- சமூகக் கல்வியும் வரலாறும் (10ம் ஆண்டு பரைய புத்தகம்)
- வரலாறு தரம் - 11 (பழைய புத்தகம்)
- டிமை தாள்
- பெல்ட் பேனை

கற்றல், கற்பித்தல் செயற்பாடு:

படி 11.1.3.1:
- இணைப்பு 11.1.3.1ஐ வகுப்பறையில் காட்சிப் படுத்துக.
- இங்கு சித்தரிக்கப்படும் படம் யாருடையது?
- புராதன காலத்தில் நாடு யாரால் ஆட்சி செய்யப்பட்டது?
- இலங்கையில் மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி முறை ஆரம்பமானது எப்போது?

முதலிய வினாக்களுக்கு விடை காணும் வகையில் பாடப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள விடங்கள் வெளிப்படும் வண்ணம் மாணவர்களுடன் கலந்துரையாடுக.

- எந்தொவரு நாட்டினதும் ஆட்சி முறையானது சட்டம், நீதி, நிர்வாகம் எனும் முத்துறைகளினூடாக செயற்படுத்தப்படும்.
- பண்டைய இலங்கையில் இம்முத்துறைகளும் அரசனிடமே காணப்பட்டன.

- இலங்கை பிரித்தானியரின் குடியேற்ற நாடாக்கப்பட்ட பின்னர் அவ்வதிகாரங்கள் பிரித்தானிய ஆளுநரால் செயற்படுத்தப்பட்டன.

- 1833 கோல்புறூக் யாப்பு பிரதிநிதித்துவ ஆட்சிகாகான விதை இலங்கையில் இடப்பட்டது.

- பிரதிநிதித்துவ ஆட்சிமுறையின் முறையான வளர்ச்சி பாராளுமன்ற ஆட்சியாக மலர்ந்தது.

(10 நிமிடங்கள்)

படி 11.1.3.2

- வகுப்பு மாணவர்களை ஏற்றவகையில் குழுக்களாகப் பிரித்துக் கொள்ளவும். ஒரு குழுவுக்கு பிரித்தானியர் ஆட்சியின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு யாப்புச் சீர்திருத்தம் வீதம் வழங்கவும்.

- இணைப்பு 11.1.3.2. குழு ஒப்படைப் பத்திரத்தை குழுவுக்கு ஒன்றாக வழங்கவும்.

- செயற்பாடு பற்றி மாணவர்களை அறிவூட்டவும்.

- மாணவர்களை குறிப்பிட்ட செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

- தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரியர் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கவும்.

(30 நிமிடங்கள்)

படி 11.1.3.3.

- ஒரு யாப்புச் சீர்திருத்தத்துக்கு ஒரு பாடவேளையை ஒதுக்கிக் கொள்ளவும்.

- இணைப்பு 11.1.3.3. ஐ வகுப்பில் காட்சிப்படுத்துக. ஒவ்வொரு மாணவருக்கும் அதில் ஒவ்வொரு பிரதி எடுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தவும்.

- முதலாம் குழுவினருக்கு கோல்புறூக் சீர்திருத்த ஆலோகனைகள் பற்றித்தாம் பொகுத்தவற்றை வகுப்பறையில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குக.

- ஒரு குழு முன்வைத்த தரவுகள் பற்றி ஏனைய குழுக்களும் கருத்துத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- முதலாம் குழு முன்வைத்த தரவுகளுக்கு ஏற்ப மாணவர் செயற்பாட்டுப் பத்திரத்தை பூர்த்தி செய்வதில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

- ஒரு யாப்புச் சீர்திருத்தத்துக்கு ஒரு பாடவேளையை ஒதுக்கி வரிசைக் கிரமமாக மாணவர் செயற்பாட்டுப் பத்திரத்தை நிரப்பச் செய்யுங்கள்.

- குழுச் செயற்பாடுகளின் போது மாணவரின் குறை, நிறைகளை இனங்காணுங்கள்.

- ஒவ்வொரு பாடவேளையின் முடிவிலும் அல்லது மாணவர் செயற்பாட்டுப் பத்திரம் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கும் வகையில் தொகுப்புரை செய்க.

- 1833 கோல்புறூக் யாப்புச் சீர்திருத்தம் மூலம் இலங்கையில் பிரதிநிதித்துவ ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1912 மக்கலம் யாப்புச் சீர்திருத்தம் மூலம் இலங்கையரில் 4% ஆனோருக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டது.
- சேர்.பொன்னம்பலம் இராமநாதன் சட்டவாக்க சபைக்கு தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலாவது கல்வி கற்ற இலங்கையராவார்
- 1921 மனிங் யாப்புச் சீர்திருத்தம் மூலம் மாகாண ரீதியான பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் உத்தியோக சார்பற்ற அங்கத்தவர் தொகையும் அதிகரிக்கப்பட்டது.
- 1924 மனிங் - டிவன்சயர் சீர்திருத்தத்தின் கீழ் உத்தியோக சார்பற்ற உத்தியோகத்தர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்ட போதிலும் ஆட்சியில் இலங்கையர் எவருக்கும் எவ்விதப் பொறுப்புக்களும் வழங்கப்படவில்லை.
- 1931 டொனமூர் யாப்புச் சீர்திருத்தம் மூலம் இலங்கையருக்கு அரைகுறை பொறுப்பாட்சி வழங்கப்பட்டது.
- டொனமூர் யாப்பு மூலம் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1947 இல் சோல்பரி யாப்புமூலம் இரு மன்றங்களை உடைய பாராளுமன்ற ஆட்சி முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இலங்கையரின் யாப்புச் சீர்திருத்தக் கோரிக்கைகள் மூலமே பாராளுமன்ற ஆட்சி முறையொன்று படிப்படியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- இலங்கையின் யாப்புத்திட்ட வளர்ச்சி படிப்படியாக வளர்ந்து வந்த விதத்தை விபரிப்பார்.
- சர்வசன வாக்குரிமை கிடைத்தமை இலங்கையரின் அரசியல் அனுபவத்தை விரிவுபடுத்தியதை மதிப்பார்.
- சட்டவாக்க சபையின் வளர்ச்சியை அட்டவணை மூலம் விளக்குவார்.
- குழுச் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.
- தகவல்களை முன்வைக்கும் திறனை வளர்த்துக் கொள்வார்.

பின்தொடர் வேலை:

- ''பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையரின் அரசியல் அதிகாரம் வளர்ச்சியடைந்த விதம்'' எனும் தலைப்பில் பத்திரிகைக்கு அறிக்கை ஒன்று எழுதவும்.

இணைப்பு 11.1.3.1



இலங்கைப் பாராளுமன்ற அமர்வை சித்தரிக்கும் படம்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு 11.1.3.1

குழுச் செயற்பாட்டுப் பத்திரம்

11ம் தரத்துக்கான வரலாறு பாடநூல், சமூகக் கல்வியும் வரலாறும் 10ம் தரம் (பழைய) பாடநூல், வரலாறு 11ம் தரம் (பழைய) பாடநூல் முதலிய நூல்களின் உதவியுடன் உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் யாப்புச் சீர்திருத்தம் பற்றி பின்வரும் அம்சங்கள் அடங்கும் வகையில் விபரப் பத்திரம் ஒன்றை தயாரிக்கவும்.

- யாப்புச் சீர்திருத்தத்தின் பெயர்:
- நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு
- யாப்பில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள்
- யாப்புக்கு வழங்கப்பட்ட பெயர்
- யாப்புச் சீர்திருத்தத்தின் முக்கியத்துவம்
- யாப்பில் காணப்படும் குறைபாடுகள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு 11.1.3.3

மாணவர் செயற்பாட்டுப் பத்திரம்

இலங்கையில் பிரதிநிதித்துவ ஆட்சி முறையின் வளர்ச்சி

யாப்புச் சீர்திருத்ததின் பெயர்	யாப்புச் சீர்திருத்தம் செயற்படுத்தப்பட்ட ஆண்டு	யாப்புச் சீர்திருத்த ஆலோசனைகள்	யாப்பின் பெயர்	சீர்திருத்த ஆலோசனைகளின் முக்கியத்துவம்	யாப்பில் காணப்பட்ட குறைபாடுகள்

11.2 பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக, பொருளாதார மாற்றங்கள்

பாடவேளைகள் 16

அறிமுகம்

ஒல்லாந்தரின் கீழிருந்த இலங்கையின் கரையோரப் பகுதிகள் கி.பி.1796இல் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டதுடன் கி.பி.1815ஆம் ஆண்டு மலைநாட்டு இராச்சியமும் கைப்பற்றப்படடது. 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த காலம் வரை பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இந்நாட்டில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்களைப் பற்றி இவ்வத்தியாயம் விளக்குகின்றது.

பிரித்தானியரால் பின்பற்றப்பட்ட முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கை காரணமாக இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை பரவிய விதம் பற்றியும் அதன் காரணமாக பாரம்பரியமான விவசாயப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்தமையைப் பற்றியும் இது ஆராய்கின்றது. அதேபோன்று பிரித்தானியர் இந்நாட்டில் நடைமுறைப்படுத்திய நிர்வாக மறுசீரமைப்புகளுக்கு எதிராக அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைக் கோரி தேசிய வாதிகள் செய்த போராட்டங்களைக் இவ்வாறு விளக்குகின்றது.

அரசியல் அம்சங்களை மட்டுமன்றி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள், தமது சமயம், கலாசாரம் ஆகியவற்றிற்குப் புத்துயிர் அளிப்பதற்காக மேற்கொண்டவை பற்றியும் இது விளக்குகிறது.

தேர்ச்சி :

- பிரித்தானியர் ஆட்சியால் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்களை விவரிப்பார்.

தேர்ச்சி மட்டங்கள் :

- பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் பரம்பலால் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிப்பார்.
- பிரித்தானியர் ஆட்சியினால் இலங்கைச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் விளக்குவார்.
- பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இலங்கையின் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிப்பார்.
- பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட சமய, பண்பாட்டு எழுச்சியைப் பரிசீலிப்பார்.

11.2 பாட உள்ளடக்கம்:

பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள்

11.2.1 நில உரிமை, கட்டாய சேவை இராசகாரிய முறை என்பவை நீக்கப்பட்டமை

- பண்டைக்காலத்தில் நில உரிமை முறை நிலவிய விதம்

  - காணிகளின் உரிமையாளர் அரசனாவார்

  - அரச பணிகளை புரிகின்ற அலுவலர்களுக்கு வேதனத்திற்குப் பதிலாக காணிகள் வழங்கப்பட்டமை.

  - அரச பணியாளர்கள் அக்காணிகளில் பயிர்ச் செய்கைக்காக சாதாரண பொதுமக்களை ஈடுபடுத்தியமை.

  - அவ்வாறு சாதாரண மக்கள் அனுபவிக்கும் காணிகளுக்காக அதன் உரிமையாளர்களான அரசனுக்கும், பிரதானிகளுக்கும் நிலவரி செலுத்தியமை.

  - அத்துடன் கட்டாய இராசகாரிய பணிகளையும் மேற் கொண்டமை.

  - இதன்படி சகல வயதுவந்த ஆண்களும் வருடத்தில் குறிப்பிட்ட தினங்கள் ஊதியமில்லாது கட்டாயமாக அரசனுக்குச் சேவகம் செய்தல் வேண்டும் என்றிருந்தமை.

- பிரடெரிக் நோர்த் எனும் ஆளுநர் தேசிய நிலமானிய முறையையும் இராசகாரிய முறையையும் ஒழிப்பதற்குக் காரணமாயிருந்தமை
- எனினும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியாமற் போனமை.
- தோமஸ் மெயிற்லன்ட் எனும் ஆளுநர் கட்டாய சேவையான இராசகாரிய முறையை மீண்டும் நடைமுறைப்படுத்தியமை.
- 1833இல் கோல்புறூக் ஆணைக்குழுவின் பரிந்துரைப்பு களுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின் கீழ் கட்டாய இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமையும் அரசினால் இலவசமாக காணி வழங்கப்படுதல் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக காணிகளை விற்பனை செய்யும் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டமையும்.
- கோல்புறூக் சீர்திருத்தங்களிடையே

  - சட்ட நிர்வாக சபை, சட்ட நிரூபண சபை என்பவற்றை அமைத்ததன் மூலமாக ஆளுநரின் ஏகபோக அதிகாரம் குறைக்கப்பட்டமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- கட்டாய சேவையான இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமை

- ஐரோப்பியர்கள் இந்நாட்டிற் குடியேற அனுமதி வழங்கப்பட்டமை

- காணி விற்பனைக் கொள்கையைப் பின்பற்றியதன் மூலமாக வெளிநாட்டு மூலதனம் இந்நாட்டிற்கு வருவதற்கு வழிவகுக்கப்பட்டது. இதன்மூலம் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை உயிரூட்டப்படுவதற்கு வழியேற்பட்டமை.

11.2.1 பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் தோற்றமும் அதன் பரம்பலும்

- கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்த போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் காட்டில் இயற்கையாக வளரும் கறுவாவைப் பெற்று வியாபாரம் செய்தமை.

- அவர்கள் பெரும் வர்த்தகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் கொள்கையைப் பின்பற்றாமை.

- ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் கறுவா பயிரிட முயற்சித்தமை.
  (தற்போதுள்ள கொழும்பு கறுவாத்தோட்டம் அப்படியான இடமொன்றாகும்.)

- கி.பி. 1833இல் கோல்புறூக் ஆணைக்குழுவின் ஆலோசனை களினால் புதிய பொருளாதாரக் கோலங்களுக்கான அடிப்படைகள் உருவானமை.

- அரசாங்கத்தின் அனுசரணையுடன் கோப்பிப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டமை
- கோல்புறூக் பரிந்துரைப்புகளின்படி சிவில் சேவையாளர்கள் தனிப்பட்ட தொழில்கள் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டமை.
- சிற்றளவில் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிப் பயிர்ச்செய்கை 1840ஆம் ஆண்டளவில் மலைநாட்டுப் பகுதிகளில் பாரிய தோட்டங்களாகப் பரவியமை
- கோப்பிச் செய்கை பரவுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்:

  - இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கோப்பிக்காக அறவிடப்பட்ட தீர்வை வரி குறைக்கப்பட்டமை.

  - மேற்கிந்திய தீவுகளில் கோப்பிச்செய்கை அழிவுற்றமை.

  - கோப்பிப் பயிர்ச்செய்கையில் முதலீடு செய்த உற்பத்தியாளர்கள் அதிக இலாபம் ஈட்டியமை.

- அதன் காரணமாக "கோப்பி வெறி" என வருணிக்கப்படும் வகையில் கோப்பிப் பயிர்ச்செய்கை விரிவடைந்தமை.

- வெற்றிகரமான பயிர்ச்செய்கை முறைகள் பின்பற்றப்பட்டமை.

- குறைந்த வேதனத்தில் தென்னிந்தியாவிலிருந்து தமிழ்த் தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டமை.

- கோப்பிப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான காணிகளின் கேள்வி அதிகரித்ததனால் அரசின் நிலங்களை அதிகளவில் விற்பதற்காக 1840இல் இல.12 கொண்ட தரிசுநிலச் சட்டம் உருவாக்கப்பட்டமை.

- இதன் காரணமாக மலைநாட்டு மக்களுக்கு உரித்தாகவிருந்த காணிகளும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக வெளிநாட்டவருக்கு விற்பனை செய்யப்பட்டமை.

- இந்த வேகமான வளர்ச்சி 1847ஆம் ஆண்டு பாதிப்படைந்தமை.

- 1853ஆம் ஆண்டளவில் கோப்பிச் செய்கை மீண்டும் முன்னேற்றம் கண்டபோதிலும் 1867இல் கோப்பிச் செடிகளுக்கு வெளிறல் நோயொன்று (ஹெம்லியா வெஸ்ராரிக்) பரவியமையால், கோப்பிப் பயிர்ச்செய்கை நாசமடைந்தமை.

- கோப்பிச் செய்கையின் பின்னர் கொக்கோ, சிங்கோனா பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவற்றினாற் பெறப்பட்ட இலாபம் குறைவாகக் காணப்பட்டமை.
- கி.பி. 1890ஆம் ஆண்டளவில் தேயிலைப் பயிர்ச்செய்கை பரவியமைக்கான காரணங்கள்:

  - லண்டன் வணிகச் சந்தையில் தேயிலையின் விலை அதிகரித்தமை
  - பசளையின் உபயோகம் அதிகரித்தமை
  - புகையிரம் மற்றும் ஏனைய போக்குவரத்துத் துறைகள் விருத்தியடைந்தமை
  - கொழும்புத்துறைமுகம் அபிவிருத்தியடைந்தமை
  - தென்னிந்தியத் தொழிலாளர்களைக் கொண்டு வர முடிந்ததால் உழைப்பை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிந்தமை.

- 1920ஆம் ஆண்டளவில் புதிய காணிகளில் தேயிலை பயிரிடப்பட்டமையினால் இலாபம் அதிகரித்ததுடன் 1929 இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார வீழ்ச்சியுடன் தேயிலை ஏற்றுமதியின் அளவு குறைவடைந்து, தேயிலையினால் பெற்ற இலாபம் குறைவுற்றமை

- 1910ஆம் ஆண்டளவில் தெங்குப் பயிர்ச்செய்கைக்கான முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஐரோப்பியர் விருப்பு காட்டாவிட்டாலும் சுதேசிகள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியமை.

- தெங்கு உற்பத்தியில் அரைப்பங்கு உள்நாட்டு நுகர்வுக்கு பயன்படுத்தப்பட்டமை.

- 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இறப்பர் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டமை.

- இறப்பர் பயிர்ச்செய்கையின் பரம்பலுக்கான காரணிகள்:

  - முதலாம் உலகப் போர் காலப்பகுதியில் இறப்பரின் விலை அதிகரித்தமை.
  - ஐக்கிய அமெரிக்க அரசு இந்நாட்டிலிருந்து அதிகளவிலான இறப்பரைக் கொள்வனவு செய்தமை.
  - பிரித்தானிய மோட்டர் வாகனக் கைத்தொழில் விருத்தி யுற்றமை.

- 1929இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக இறப்பர் விலை வீழ்ச்சியுற்றமை

- இவ்வாறு இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பொருளாதார முறையானது பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முறையை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதி இறக்குமதி பொருளாதார முறையாக மாற்றமடைந்தமை.

11.2.3 பாரம்பரிய விவசாயம்

- பிரித்தானிய அரசு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் முக்கியமாக ஈடுபட்டிருந்தமையினால் தேசிய விவசாயத்துறையில் அக்கறை காட்டாமை.

- கோல்புறூக் சீர்திருத்தத்தின் கீழ் உள்நாட்டு விவசாய நடவடிக்கைகள் இடம்பெற உதவியாக அமைந்த கட்டாய சேவையான இராசகாரிய முறை நீக்கப்பட்டதனால் விவசாய நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தமை.

- விவசாய நடவடிக்கைகளுக்கு அரசின் அனுசரணைகள் கிடைக்கப் பெறாமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு காணிகள் வழங்கப் பட்டமையினால் மலையக நெற்பயிர்ச் செய்கை அழிவுற்றமை.

- ஆங்கிலேயர் பாரம்பரிய விவசாயத்தைப் புறக்கணித்தமை காரணமாக விவசாயிகள் இன்னல்களுக்கு உட்பட்டதுடன் 1848இல் ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சிக்கு அது காரணமாகவும் அமைந்தமை.

- 19ஆம் நூற்றாண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் சில பிரித்தானிய ஆட்சியாளர்கள் பாரம்பரிய விவசாயத்தை முன்னேற்றுவதற்கான அக்கறையைக் காட்டியமை.

- பழைய நீர்ப்பாசன முறைகளைச் சீரமைத்து உலர்வலயத்தில் மக்களைக் குடியேற்றுவதில் அவர்கள் கூடிய கவனம் செலுத்தியமை.

- 1900இல் நீர்ப்பாசனத் திணைக்களத்தையும் 1912இல் விவசாயத் திணைக்களத்தையும் நிறுவியமை காரணமாக உள்நாட்டு விவசாயம் ஓரளவு முன்னேற்றமடைந்தமை.

- ஹென்றி வோட், ஹேர்க்கியூலிஸ், றொபின்சன், வில்லியம் கிறகரி, ஆர்தர் கோட்டன், வெஸ்ட் ரிஜ்வே ஆகிய ஆளுநர்கள் காலத்தில் நீர்ப்பாசனத் துறை வளர்ச்சிக்காகச் சேவைகள் செய்யப்பட்டன.

- கூட்டுறவு கடன் வழங்கல் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டமையும், அதனால் விவசாயிகளுக்குச் சேவைகள் கிடைக்கப் பெற்றமையும்.

11.2.4 நவீனமயமாதலும் மேலைத்தேயமயமாதலும்

நடுத்தர வகுப்பினர் உருவாதல்:

- கோல்புறூக் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வியின் காரணமாக ஐரோப்பிய கலாசாரத்தை மதிக்கும், தேசிய கலாசாரத்தை ஒதுக்கும் செல்வந்தர்களின் குழுவொன்று உருவானது.

- தேசிய செல்வந்த வகுப்பினர் மது விற்பனை செய்தல், நேந்தை கொள்வனவு செய்தல், பெருந்தோட்டத் தொழிலுக்கான உபசேவைகள் தேவையான பொருள்கள் என்பவற்றை வழங்குதல் என்பவற்றை மேற்கொண்டனர். சிலர் பெருந்தோட்ட உரிமையாளர்களாகிச் செல்வத்தைப் பெருக்கியமை.

- அவர்கள் தங்கள் செல்வத்தை தோட்டங்களைக் கொள்வனவு செய்தல், வர்த்தகப் பயிர்களை உற்பத்தி செய்தல், தமது பிள்ளைகளுக்கு உயர் படிப்பைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.

- 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான போராட்டங்களில் முன்னணி வகித்த இவர்கள் தேசிய நடுத்தர வர்க்கத்தினர் ஆயினர். இவர்கள் ஐரோப்பிய ஆட்சிமுறையின் காரணமாக உருவான புதிய அதிகார சக்தியாகியமை.

- ஆங்கிலக் கல்வியைப் பெற்று மேலைத்தேய நாகரிகத்திற்குப் பழக்கப்பட்டோர் உருவாகியதுடன் அவர்களிடம் செல்வம், கல்வி என்பவை இருந்தபோதிலும் ஆட்சியதிகாரம் இல்லாதிருந்தமை.

தொழிலாளர் இயக்கம்:

- தேசிய வழக்கத்தின்படி அரச பணிகளுக்கான உழைப்பைப் பெற்றுக்கொண்டது. இலவசமாக வழங்கப்பட்ட கட்டாய சேவையான இராஜகாரிய முறை காணப்பட்டமை.

- பிரித்தானியரின் கீழ் இந்நாட்டில் பெருந்தோட்டப்பயிர்ச்செய்கை ஆரம்பமானதுடன் உழைப்பைப் பணத்திற்கு விற்கும் முறை ஆரம்பமானது. இதன் காரணமாக தொழிலாளர் வகுப்பொன்று உருவானமை.

- பெருந்தோட்டத்திற்குத் தேவையான உழைப்பை இந்நாட்டில் பெற்றுக்கொள்ள இயலாமையினால் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களைப் பெற்றுக்கொண்டமை.

- ஆரம்பத்தில் மத்திய மலைநாட்டுப் பெருந்தோட்டப் பகுதிகளுக்கான உழைப்பாளர்களாகவும், 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கொழும்பு நகரில் பயிற்றப்படாத தொழிலாளர்களாகவும் தென்னிந்தியாவிலிருந்து வருகைதந்த தொழிலாளர்கள் இலங்கையின் மக்கள் சமுதாயத்தில் தனியானதொரு மக்கள் தொகுதியினராக உருவாகியமை.

- 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட நகரவாக்கம் காரணமாக பொருள் ஏற்றுதல், பொருள் இறக்குதல், சலவை செய்தல், வண்டி இழுத்தல், கப்பல் சீரமைத்தல் போன்ற பல்வேறு தொழில்களில் சிங்களவர்களும் ஈடுபட்டனர்.

- இவ்வாறான நகரத்தொழிலாளர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் என்று வெவ்வேறுபட்ட இரு தொழிலாளர் வகுப்பினர் உருவானமை.

- 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மத்திய வகுப்பினரின் ஒத்துழைப்புடன் பல வேலை நிறுத்தங்களை இவர்கள் மேற்கொண்டமை.

  - அச்சுத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டம்.
  - வண்டித் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டம்.
  - வெள்ளவத்தை ஆடைத்தொழிற்சாலை வேலை நிறுத்தப் போராட்டம்.
  - சலவை செய்வோரின் வேலைநிறுத்தம்.

  ஆகியவை பிரதானமானவையாக அமைந்தமை.

தொழிற்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டமை.

- தொழிலாளர்களின் தொழில் நிலைமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் ஊதிய உயர்வை ஏற்படுத்திக் கொள்ளவும் போராட்டங்களை மேற்கொள்ளவதற்காக தொழிற்சங்கங்களாக ஒன்றிணைந்தது 1920 களிலேயாகும். அதற்குத் தலைமை வகித்தவர் திரு. ஏ.ஈ. குணசிங்க ஆவார்.

- தோட்டத்தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கமாக ஒன்றிணைந்தது 1935இன் பின்பாகும். அவர்களுக்கு தலைமை வகித்தவர் நடேச ஐயராவார்.

- லங்கா சமசமாசக் கட்சி உருவாக்கப்பட்டதன் பின்னர் அக்கட்சி நகரத் தொழிலாளர்களை மட்டுமன்றி பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் ஒன்றிணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டது.

தேசிய இயக்கம்:

- இந்நாட்டின் தேசிய இயக்கம் தோற்றம் பெற்றது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயாகும்.

- சுயமொழி கற்ற மத்தியதர வகுப்பினரில் ஒரு பிரிவினர் அரசியல் அதிகாரம் கோரி போராடிய அதே வேளை மற்றொருபிரிவினர் சமய, கலாசார எழுச்சிக்காக ஒன்றிணைந்தமை.

- சுயமொழி கற்ற மத்தியதர வகுப்பினரால் கலாசார எழுச்சியை ஏற்படுத்துவதற்காக மேற்கொண்ட இயக்கம் இங்கு பிரதான பண்பாக அமைந்தமை.

- 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலம் கற்ற மத்திய தர வகுப்பினர் தேசிய இயக்கத்தில் இணைந்தமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ஏகாதிபத்திய ஆட்சியாளர்களால் நடைமுறைபடுத்தப்பட்ட அரசியல் அமைப்பினுள் தமக்கு அதிகார பலத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதே இவர்களின் தேவையாக இருந்தமை.

- ஆங்கில மொழி மூலமாகக் கற்று மேலைத்தேய நாகரிக மயமான மத்தியதர வகுப்பினருக்கு தேசிய நாகரிகத்திற்கு மீண்டும் உயிரூட்டுவது அவசியமானதாக இருக்கவில்லை.

- அவர்களின் பிரச்சினையாக அமைந்த அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் நாட்டை ஆளும் சந்தர்ப்பம் தமது வகுப்பினருக்கு வழங்கப்பட வேண்டுமென்பதே.

- 1912 மது ஒழிப்பு இயக்கம், 1915 சிங்கள - முஸ்லிம் கலவரம், 1919 இலங்கை தேசிய சங்கம் தோற்றம் பெறல் ஆகியவை தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகளாகியமை.

- 1915 சிங்கள - முஸ்லிம் கலவரத்தில் தேசிய இயக்கத்துடன் தொடர்புடைய தலைவர்கள் கைதிகளாயினர்.
  - டி. எஸ். சேனாநாயக்க
  - எப்.ஆர். சேனாநாயக்க
  - டீ.பீ. ஜயதிலக
  - சீ. படுவன்துடாவ
  - சீ. ஏ. ஹேவாவிதாரண
  - ஏ.ஈ. குணசிங்க

போன்ற தலைவர்கள் கைது செய்யப்பட்டதுடன் விலியம் பேதிரிக் என்பவர் உட்படச் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டமை.

- இந்த அநீதிக்கு எதிராக செயற்படுவதற்காகவே 1919ஆம் ஆண்டு இலங்கை தேசிய சங்கம் உருவாக்கப்பட்டமை.

- அதன் முதலாவது தலைவராக சேர் பொன்னம்பலம் அருணாசலம் இடம் பெற்றமை.

- இந்தத் தேசிய இயக்கத்தின் நெறிப்படுத்தலின் கீழ் 1920, 1924, 1931 ஆகிய வருடங்களில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டமை.

- இந்த தேசிய இயக்கச் செயற்பாட்டின்போது மது ஒழிப்பு இயக்கத்தின் தலைவர்களின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்பட்டமை.

- தேசிய இயக்கம் செயற்படுத்தப்பட்ட போது சட்டவாக்க சபையில் ஆசனங்களைப் பகிர்ந்து கொள்வதில் சிங்கள, தமிழ்த் தலைவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டமை.

- 1947இல் சோல்பரி அரசியல் சீர்திருத்த ஆலோசனைக்கு அமைவாக நடைமுறைபடுத்தப்பட்ட சீர்திருத்தத்தின் பின் 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றமை.

11.2.5 கல்வி:

- இலங்கையில் ஆரம்பகாலத்தில் பௌத்த விகாரைகளை அடிப்படையாகக் கொண்ட பிரிவேனா கல்வி முறை நடைமுறைப்படுத்தப்பட்டமை.

- போத்துக்கேயர், ஒல்லாந்தர் கரையோரப் பிரதேசங்களில் பரிஸ் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கல்வி நிறுவனங்கள் காணப்பட்டமை.

- 1812 றொபேட் பிறவுண்றிக் தேசாதிபதி இலங்கைக்கு வருகை தந்ததுடன் மி'னரிகள் இந்த நாட்டின் கல்வியில் ஈடுபட்டமை.

- இலண்டன் பப்டிஸ்ட், வெஸ்லியன் மிசன், அமெரிக்கன் மி'ன் ஆகிய அமைப்புக்களின் பணிகள்

- சோல்புறூக் ஆணையாளரின் இலங்கைக்கான வருகையின்போது கல்வி வளர்ச்சிக்குச் செய்த முன்மொழிவுகள்

  - கல்வி நிர்வாகத்திற்கென பாடசாலை ஆணைக்குழுவை நிறுவியமை
  - ஆங்கில மொழிமூல பாடசாலைகளை ஏற்படுத்தியமை.
  - ஆங்கிலம் கற்ற இலங்கையரை அரச பணிகளில் இணைத்துக்கொண்டமை.

- மக்கன்சி ஆளுநர் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்வி மறுசீரமைப்புக்கள்:

  - தாய்மொழிமூல பாடசாலை ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை
  - சுயமொழி பாடசாலைகள், இருமொழிப் பாடசாலைகள் என்பன உருவாக்கப்பட்டமை
  - உதவி பெறும் பாடசாலைகள் உருவாக்கப்பட்டமை.
  - மத்திய கல்லூரி முறை உருவாக்கப்பட்டமை
  - பிரதான நகரங்களில் மகளிர் பாடசாலைகள் உருவாக்கப்பட்டமை
  - கொழும்பு அக்கடமி (Royal College) என்னும் பெயரில் உயர் தொழிலுக்கு மாணவரைப் பயிற்றுவிக்கும் மத்திய நிலையம் உருவாக்கப்பட்டமை.

- 1865இல் மோர்கன் ஆளுநரின் மும்மொழிவு.

  - பொது போதனா திணைக்களம் உருவாக்கப்படல்
  - கல்வியின் பொறுப்பு அரசுக்கு உரித்தாக்கப்படல்

- 1920ஆம் ஆண்டு மனிங் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் கல்வித் திணைக்களம் உருவாக்கப்பட்டு நிருவாக நடவடிக்கைகள் பொறுப்பேற்கப்பட்டமை.

- 1921இல் பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்பட்டமை

- 1931இல் டொனமூர் ஆளுநர்களின் கீழ் கல்வி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அரசுக் கழத்தின் நிருவாகக் குழு தலைவராகவிருந்த சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கர அவர்களால் இந்நாட்டின் இலவசக் கல்விக்கு வழிபிறந்தமை.

  - தாய்மொழியில் கல்வி வழங்கப்படுதல்
  - கட்டாயக் கல்வி
  - பாலர் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை இலவசமாகக் கல்வி வழங்கப்படல்.
  - கிராமங்களின் கல்வி நிலைமை உயர்த்தும் பொருட்டு ஹந்தெஸ்ஸ முறையை நடைமுறைப்படுத்தல்.
  - மதிய உணவு வழங்கல்
  - தேசிய பரீட்சை முறையை உருவாக்குதல்
  - இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல்
  - பாடசாலையில் சமய பாடம் கட்டாயமாக்கப்படல்
  - ஆசிரியர் பயிற்சிக்காக விசேட நிறுவனங்களை ஏற்படுத்துதல்

- இந்த முன்மொழிவுகளின் படி பாடசாலைக்காலத்தை நிறைவு செய்யும் போது உயர் கல்வியோ அல்லது தொழில்நுட்பக் கல்வியோ கிடைக்கப்பெறுதல், அல்லது பாடசாலைக் கல்வியின் நிறைவில் நாட்டின் தேவைக்கேற்ப விதத்திலான தொழிலை வழங்குவது நோக்கமாக அமைந்தமை.

11.2.6 சமய, கலாசார மறுமலர்ச்சி

- பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் மி'னரி அமைப்புக்களால் இந்நாட்டின் கல்வி பரவலாக்கப்பட்டமை

- கிறிஸ்தவ குருமார்கள் தேசிய மொழிகளைக் கற்று பாடசாலைகளில் கல்விப் பணியாற்றியமை

- கிறிஸ்தவ மி'னரி பாடசாலைகளில் சிங்கள, தமிழ் மொழிகளில் கிறிஸ்தவ மத விடயங்களில் அடங்கிய புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டமை. அது தேசிய சமயங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட மிக மோசமான சவாலாக அமைந்தது. இச் சவால்களை விளங்கிக்கொண்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் 1860ஆம் ஆண்டளவில் பல்வேறு இயக்கங்களை ஆரம்பித்தமை.

- பௌத்தத்தின் எழுச்சிக்கு துணைபுரிந்த பிக்குகள்:

  - வலானே சித்தார்த்த தேரர் - 1839 இரத்மலானையில் பரமதர்ம சைத்திய பிரிவெனாவை ஆரம்பித்தமை

  - கிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் - 1873இல் மாளிகாகந்தையில் வித்யோதயா பிரிவெனாவை ஆரம்பித்தமை

  - இரத்மலானை தர்மிலோக தேரர் - 1875இல் பேலியாகொட வித்தியாலங்கரா பிரிவெனாவை ஆரம்பித்தமை

  - மீகெட்டுவத்தை குணாநந்த தேரர் - ஐம்பெரும் விவாதங்களில் ஈடுபட்டமை

  இந்த விவாதங்கள் மூலம் கிறிஸ்தவ குருமாருக்கு சவால்கள் ஏற்படுத்தப்பட்டமை
  - 1864 - பத்தேகம விவாதம்
  - 1865 - வராகொட விவாதம்
  - 1866 - உதம்விட விவாதம்
  - 1871 - கம்பளை விவாதம்
  - 1873 - பாணந்துறை விவாதம்

  பாணந்துறை விவாதத்தைப் பற்றி பத்திரிகை வாயிலாகக் கேள்வியுற்ற ஹென்றி ஸ்டீல் ஒல்கோட் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்தமை.

  ஹென்றி ஒல்கொட் அவர்களின் சமயப்பணிகள்:

  - அவர் பௌத்தரானமை
  - பரம விஞ்ஞார்த்த பௌத்த சங்கத்தை உருவாக்கியமை அச்சங்கத்தால் ''சரசவி சந்தரச ரெஸ்'' எனும் பத்திரிகையைத் தொடங்கி பௌத்தர்களை ஒன்றுபடுத்தியமை.
  - ஞாயிற்றுக்கிழமை தர்ம பாடசாலைகளைத் தொடங்கியமை வெசாக் பூரணை தினத்தை விடுமுறை நாளாக்கியமை
  - பௌத்த பாடசாலைகளை நிறுவியமை - கண்டி, தர்மராஜா கல்லூரி, கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, காலி மகிந்தா கல்லூரி போன்றவை

- பெண்களின் கல்விக்காக கொழும்பு விசாகா வித்தியாலயத்தையும், மியூசியஸ் மகளிர் வித்தியாலயத்தையும் ஆரம்பித்தமை

- அனகாரிக தர்மபாலாவினால் உருவாக்கப்பட்ட மகாபோதி சங்கத்தின் சேவை, டீ.டயிள்யு.ஜெயதிலக அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட பௌத்த இளைஞர் சங்கம் என்பவற்றின் பணிகளைப் போற்றுதல்.

இந்து மத மறுமலர்ச்சி:

- இந்து கலாசாரம், இந்து சமயம் என்பவற்றின் மறுமலர்ச்சிக்காக ஆறுமுக நாவலர், பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோர் பங்காற்றியமை
- யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நகரில் சைவப் பாடசாலை நிறுவப்பட்டமை
- சைவ பரிபாலன சபையை நிறுவி பொன்னம்பலம் இராமநாதன் இந்து மதத்தை மேம்படுத்தியமை

இஸ்லாமிய மறுமலர்ச்சி:

- இஸ்லாமிய மதத்தின் மறுமலர்ச்சிக்காக சித்திலெப்பை அவர்கள் முன்னின்று பணியாற்றியமை.
- சாகிராக் கல்லூரியை நிறுவியமை
- அராபிய மொழிக் கற்பித்தலை விரிவாக்கியமை
- 'மதரிஸா' எனும் சமயக் கல்விப் பாடசாலைகளை உருவாக்கியமை
- "முஸ்லிம் நேசன்" பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டமை.

சமய மறுமலர்ச்சியுடன் கலாச்சார மறுமலர்ச்சியும் ஏற்பட்டமை

- சிங்கள, பாளி, கலாசார நூல்கள் பதிக்கப்பெறல், சிங்களப் பத்திரிகை அச்சிடப்படல், நாவல் எழுதப்பெற்றமை என்பவற்றால் சிங்கள மக்களிடையே தேசப்பற்று உருவாகியமை.

  - 1862 - லக்மினி கிரன, லக்மினி பகன, அருணோதய
  - 1866 - ஞானார்த்த பிரதீபய
  - 1880 - சரசவி சந்தரெச
  - 1902 - சிங்கள ஜாதிய
  - 1909 - தினமின பத்திரிகை போன்ற பத்திரிகைகள் வெளியாகியமை

- சமய, வரலாற்று நிகழ்வுகளை வெளிக்கொணரும் நாடகங்களும், கண்காட்சிகளும் நடைபெற்றமை.
- இந்துக்களால் இந்து சாதனம், வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டமை.

- இவ்வாறான முயற்சிகளூடாக பிரித்தானியர்களுக்கு எதிராக நாட்டு மக்கள் செயற்பட்டனர்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயற்பாடு 11.2.1

தேர்ச்சி மட்டம் : பிரித்தானியர் ஆட்சி காரணமாக இலங்கையர் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குவார்.

செயற்பாடு : "மலையகக் காணி உரிமையின் பண்புகளை ஆராய்வோம்".

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 11.2.1.1 நிந்தக முறைப்படி மக்கள் வேலை செய்வதை சித்தரிக்கும் படம்.
- இணைப்பு 11.2.1.2 பண்டய இலங்கையில், மலையகக் காணி உரிமைமுறைகளின் இயல்புகளைக் கூறும் ஒரு பந்தி
- இணைப்பு 11.2.1.3 மாணவர் செயற்பாட்டுப் பத்திரம்.
- பாடநூல்
- இது தொடர்பான வேறு நூல்கள்.

கற்றல் கற்பித்தல் செயன்முறை:

படி 11.2.1.1:

- இணைப்பு 11.2.1.1ஐ மாணவர்க்குக் காட்சிப்படுத்தவும்.
- அதனை மாணவர்கள் அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- படத்தில் உள்ள உருவங்கள் மூலம் சித்திரிக்கப்படும் விடயம் யாது என மாணவர்களிடம் வினவவும்.
- மாணவர்களது துலங்கலை மதிப்பீடு செய்து கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடவும்.

• பண்டைய இலங்கையில் அரசனுக்குச் சொந்தமான நிலத்தில் மக்கள் சம்பளமின்றி வேலை செய்தனர். • அரசனுக்கு இலவசமாக மக்கள் செய்த வேலையானது இராஜகாரிய முறையின் ஒரு பண்பாகும்.

(10 நிமிடங்கள்)

படி 11.2.2 :

- மாணவர்களை குழுக்களாக பிரிக்கவும்.
- இணைப்பு 11.2.1.2ஐ குழுவுக்கு ஒன்று வீதம் வழங்கவும்.
- இணைப்பு 11.2.1.3 செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்கவும்.
- செயற்பாட்டைச் சுருக்கமாக விளக்கவும்.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

(30 நிமிடங்கள்)

படி 11.2.1.3

- குழுக்களின் அறிக்கையை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- மாணவர் துலங்கலை மதிப்பீடு செய்யவும்.
- கீழ்வரும் விடயங்கள் பற்றிக் கவனம் எடுத்து மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுக.

- பண்டைய இலங்கையில் மலையக இராச்சியத்தில் நிலங்கள் யாவும் அரசனுக்கு சொந்தமாக இருந்தது.
- அரசாங்க சேவையில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு சம்பளத்துப் பதிலாகக் காணிகள் வழங்கப்பட்டன.
- அவை ''நிந்தகம்'' எனப்பட்டன.
- விவசாயம் செய்யும் பொருட்டு பொது மக்களுக்கு அதிகாரிகள் காணிகள் வழங்கினர்.
- பொது மக்கள் விளைச்சலின் ஒரு பகுதியை அரசனுக்கும் பிரதானிகளுக்கும் வரியாகச் செலுத்தினர்.
- அனைத்து ஆண்களும் வாரத்தில் சில நாட்கள், கட்டாய சேவையான இராசகாரியத்தில் ஈடுபட்டனர்.
- பிரித்தானியரின் வருகையின் பின்னர் இம்முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன.

(40 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

மதிப்பீடும் கணிப்பீடும்

- முன்பு மலைநாட்டில் அரசாங்க காணிகளின் உரிமையிலும் அவற்றைப் பயன்படுத்துவதிலும், காணப்பட்ட பிரதான பண்புகளை விளக்குவார்.
- நிலத்தைப் பயன்படுத்தும் முறையில் காணப்பட்ட பண்புகளை மதிப்பார்.
- முற்கால நிலப் பயன்பாட்டு முறையின் பண்புகளை அட்டவணைப்படுத்துவார்.
- ஒன்றுபட்டு வேலை செய்வதற்கு தூண்டப்படுவார்.
- தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வதற்குத் தூண்டப்படுவார்.

இணைப்பு 11.2.1.1



மலையக இராச்சியத்தில் மக்கள் கட்டாய இராசகாரிய சேவையில் ஈடுபடும் படம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு 11.2.1.2

தகவற் பத்திரம்

நிலப்பயன்பாட்டு முறை

இலங்கையில் மலைநாட்டில் அரசனே நிர்வாகத்தின் தலைவனாவான் அவனுக்குத் துணையாக இருந்த நிர்வாகிகளாக அதிகாரம், திஸாவை, ரடேரால, மொஹட்ட ரால, கோரளை, அத்துக்கோரளை, முலாதானி என்போர் இருந்தனர். மலைநாட்டில் நிலத்தின் உரிமை அரசனையே சாரும். மலைநாட்டில் நிலவிய நில உரிமையையும், பயன்பாட்டையும் அடிப்படையாக வைத்து பல்வேறு பிரிவுகளாக வகுத்து காண்பிக்கலாம். அரசனின் பயன்பாட்டிற்கு இருந்த நிலம் கபடாகம் என்றும் அதிகாரம், திஸாவை போன்ற உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட நிலம் நிந்தகம் என்றும் குறிப்பிடப்பட்டது. கபடாகம், நிந்தகம் என்பவை விவசாயம் செய்வதற்காக மக்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டிருந்தது. பயன்படுத்திய நிலத்திற்காக அவர்கள் அரசனுக்கோ பிரதானிகளுக்கோ சேவை வழங்கவோ உற்பத்திப் பொருட்களிலிருந்து வரி ஒன்றை வழங்கவோ கடமைப்பட்டிருந்தனர். அவர்கள் தமது கிராமப் பிரதேசங்களில் பொதுச் சேவைகளில் வருடத்தில் குறிப்பிட்ட நாட்களுக்கு இலவசமாக சேவையாற்ற வேண்டியிருந்தது. அது கட்டாய இராசகாரிய முறை எனப்பட்டது.

இணைப்பு 11.2.1.3

மாணவர் செயற்பாட்டுப்பத்திரம்

வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரத்திலிருந்து மலைநாட்டில் நிலத்தைப் பயன்படுத்தும் முறையில் காணப்பட்ட பண்புகளைப் பட்டியற்படுத்துவதே மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வேலையாகும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயற்பாடு 11.2.2

தேர்ச்சி மட்டம் : பிரித்தானியர் ஆட்சியின் காரணமாக இலங்கையர் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்வார்.

செயற்பாடு : "1929 - 1935 காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார, சமூக மாற்றங்களில் காணப்பட்ட பண்புகள் தொடர்பாக வினாக்கொத்தொன்றை உருவாக்குவோம்"

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :

- இணைப்பு 11.2.2.1 வில்லியம் கோல்புறூக், சார்ள்ஸ் கமரன் ஆகியோரின் பெயர் பதித்த பலகை
- இணைப்பு 11.2.2.2. தகவற் பத்திரம்
- இணைப்பு 11.3.2.3 செயற்பாட்டுப் பத்திரம்
- பாடநூல்

கற்றல் கற்பித்தல் செயன்முறை

படி 11.2.1.1.

- இணைப்பு 11.2.2.1ஐ மாணவருக்குக் காட்டி பிரித்தானிய அதிகாரிகள் பற்றி நீங்கள் அறிந்தவற்றைக் கூறுக என வினவுக.
- மாணவரின் துலங்கல்களைக் கேட்டு முக்கியமான தகவல்களைக் கரும்பலகையில் நிரற்படுத்துக.
- பின்வரும் சம்பவங்களில் கவனஞ் செலுத்தக்கூடியதாக சுருக்கமான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

• பிரடெரிக் நோர்த் ஆளுநர். தேசிய நிலவுரிமை முறையையும் இராசகாரிய முறையையும் நீக்கியமை இலங்கைச் சமுதாயத்திலும் பொருளாதார முறையிலும் மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தமை. • தோமஸ் மெயிற்லன்ட் ஆளுநர் மீண்டும் இராசகாரிய முறையை அங்கீகரித்தமை. • வில்லியம் கோல்புறூக் அவர்கள் மீண்டும் இராசகாரிய முறையை ஒழித்துப் பழைய இலங்கையின் சமுதாய, பொருளாதார முறைகளில் மாற்றத்தை ஏற்படுவதற்குக் காரணமானமை.

(10 புள்ளிகள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

11.2.1.2.2

படி 2 :

- மாணவர்களைக் குழுக்களாக்குக.
- இணைப்பு 11.2.2.2 ஐ குழுவுக்கு ஒன்று வீதம் வழங்குக.
- மாணவர் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குக.
- வினாக்கொத்து, விடைகள் என்பவற்றை உருவாக்கும் முறை பற்றி மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குக.
- மாணவரைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி மதிப்பிடுவதற்கான நியதிகளைக் கைக்கொள்க.

(30 நிமிடங்கள்)

11.2.1.2.3 மாணவர் செயற்பாட்டை வகுப்பில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.

- ஏனைய குழுக்கள் இது தொடர்பான கருத்துக்களைக் கூற சந்தர்ப்பமேற்படுத்துக.
- பின்வரும் தகவல்களை வலியுறுத்தும் வகையிற் கலந்துரையாடலை மேற்கொள்க.

• பிரித்தானிய ஆட்சியின் கீழ் இலங்கையின் சமுதாய, பொருளாதார மாற்றங்களில் கோல்புறூக் சீர்திருத்தம் முக்கியத்துவம் பெற்றமை.
• கட்டாய சேவையான இராசகாரிய முறை நீக்கப்பட்டமையால் கிராமிய வாழ்க்கைமுறை மாற்றமடைந்தமை.
• ஐரோப்பியர் இந்நாட்டில் குடியேறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டமையால் இந்நாட்டின் சமூக, பொருளாதார அம்சங்களில் மாற்றங்கள் ஏற்பட்டமை.
• வெளிநாட்டு நிறுவனங்களுக்குக் காணி விற்பனை செய்யப்படும் கொள்கை ஏற்படுத்தப்பட்டமையால் வெளிநாட்டு முதலீடுகள் இந்நாட்டிற்கு அதிகளவில் கிடைத்தமை.
• இதனால், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை விருத்தியடைய வாய்ப்பேற்பட்டமை.

40 நிமிடங்கள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கணிப்பீடும் மதிப்பீடும்

- கோல்புறூக் அரசியலமைப்பு ஆலோசனைகளைக் குறிப்பிடுவார்.
- கோல்புறூக் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் காரணமாக 1832 இலிருந்து 1834 வரையான காலத்தில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டமையை ஏற்றுக்கொள்வார்.
- கோல்புறூக்கின் முன்மொழிவை சமூக, பொருளாதார முன்மொழிவாக அட்டவணைப்படுத்துவார்.
- கூட்டாகச் செயற்பட்டு குழுவுணர்வை விருத்தி செய்துகொள்வார்.
- தலைமைத்துவப் பண்பை விருத்தி செய்துகொள்வார்.

இணைப்பு 11.2.2.2

தகவற்பத்திரம்

இலங்கை முழுவதும் ஆங்கிலேயருடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டதையடுத்து நாட்டின் ஆட்சிமுறையில் முக்கியமான பல மாற்றங்கள் 1833இன் பின்னர் கொண்டுவரப்பட்டன. கோல்புறூக் ஆணைக்குழு, சீர்திருத்தம் குறித்துத் தெரிவித்த ஆலோசனைகளே இவற்றுக்கு அடிப்படையாக அமைந்தன. பிரித்தானியரின் ஆட்சியின் ஆரம்ப காலத்திலிருந்து இலங்கை அரசாங்கத்தின் செலவுகள் வருவாயை விட அதிகமாக இருந்தமையும் பிரித்தானியப் பாராளுமன்றத்திலே அது கண்டிக்கப்பட்டமையுமே கோல்புறூக் ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டமைக்குரிய முக்கியமான காரணங்களாகும்.

ஆயின் இந்த ஆணைக்குழுவின் விடயப்பரப்பு நிதித் துறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை. 1829இல் இலங்கைக்கு வந்த வில்லியம் கோல்புறூக் இலங்கையின் நிருவாகம், வருவாய், அரச தாபனங்கள், இராசகாரிய முறை ஆகிய முக்கியமான விடயங்கள் பற்றி ஆராய்ந்து ஆலோசனைகள் சமர்ப்பித்தார். 1830இல் வந்த சாள்ஸ் ஹே கமறான் என்பவர் நீதித்துறை பற்றி அறிக்கை சமர்ப்பித்தார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இந்த ஆணைக்குழுக்கள் சமர்ப்பித்த ஆலோசனைகளிலே அக்காலத்திற் பிரித்தானியாவில் நிலவிய தாராளவாத (லிபறல்) அரசியற் கொள்கையினதும் பொருளாதாரக் கொள்கையினதும் செல்வாக்குகளைப் பெரிதும் காணக்கூடியதாக இருந்தது. அதுவரை காலமும் வெவ்வேறாக ஆட்சி செய்யப்பட்டு வந்த மலையகப் பகுதிகளும் கரையோரப் பகுதிகளும் ஒருங்கிணைந்த ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட வேண்டுமென்பதே நாட்டின் யாப்புமுறை, நிருவாகம் ஆகியன சம்பந்தமாக ஆணைக்குழு தெரிவித்த முக்கியமான ஆலோசனையானது. அதுவரை காலமும் 16 நிருவாகக் கூறுகள் மூலம் நாடு ஆட்சி செய்யப்பட்டு வந்தது. இதனால், அரசாங்கத்துக்கு அதிக செலவு ஏற்பட்டது. எனவே இந்த நிருவாக்க கூறுகளின் எண்ணிக்கையைக் குறைத்து நாடு முழுவதும் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டது. இவை கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய நகரங்களை மையங்களாகக் கொண்டமைக்கப்பட்டு மேல்மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம், வட மாகாணம் கீழ் மாகாணம் எனப்பட்டன. இவ்வாறு பிரித்தபோது அதுவரை கண்டி இராச்சியத்தைச் சேர்ந்திருந்த சில பகுதிகள் கரையோரப் பகுதிகளுடன் இணைக்கப்பட்டன. மலையகப் பகுதிகளுக்கிடையில் இருந்துவந்த ஒருமைப்பாட்டை நீக்கிவிடுவதே இதன் நோக்கமானது. ஆயின், கோல்புறூக்கினுடைய இந்த மாகாணப் பிரிப்புமுறை நிருவாகத்தைப் பொறுத்தமட்டில் ஏற்புடையதல்ல எனக்காணப்பட்டமையினால் அந்த நூற்றாண்டின் இறுதியிலே இலங்கையை ஒன்பது மாகாணங்களாகப் பிரிப்பதற்குரிய நடவடிக்கைகள் பிரித்தானியரால் மேற்கொள்ளப்பட்டன.

லிபறல் (தாராள) யாப்பு முறையைப் பெரிதும் ஒத்த ஒரு யாப்புமுறை சிபாரிசு செய்யப்பட்டமை, இந்த ஆணைக்குழுவின் மற்றுமொரு முக்கியமான ஆலோசனையாகும். கரையோரப் பகுதிகளை ஆட்சிசெய்வதில் ஆளுநருக்கு உதவியாக ஆலோசனைச் சபை ஒன்று இருந்ததாயினும் முழுமையாக நோக்கியவிடத்து ஆளுநருக்கு எல்லையற்ற ஆட்சி அதிகாரங்கள் இருந்தனவாகத் தோன்றியது. இந்த நிலைமையை மாற்றும் நோக்கத்துடன் ஆளுநருக்கு உதவியாகச் சட்டவாக்க சபை, சட்ட நிரூபண சபை என இரு கழகங்கள் அமைக்கப்பட வேண்டுமெனக் கோல்புறூக் ஆலோசனை கூறினார்.

மேலும், செலவினத்தைக் குறைப்பதற்குரிய நடைமுறைகள் பலவற்றையும் கோல்புறூக் சிபாரிசு செய்தார். அதாவது பல திணைக்களங்கள் மூடப்பட வேண்டுமெனவும், சிற்சில திணைக்களங்கள் ஒன்றிணைக்கப்பட வேண்டுமெனவும், சிவில் சேவை அதிகாரிகளின் சம்பளம் குறைக்கப்பட வேண்டுமெனவும், ஓய்வூதியச் சம்பளம் ஒழிக்கப்பட வேண்டுமெனவும், சிவில் சேவைக்கு இலங்கையர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமெனவும், கோல்புறூக் சிபாரிசு செய்தார். சிவில் சேவை அதிகாரிகளின் சம்பளத்தைக் குறைப்பதனாலும் ஓய்வூதியச் சம்பளத்தை ஒழிப்பதனாலும் அவர்களுக்கு ஏற்படக்கூடும் நட்டத்தை நிவர்த்தி செய்தற்பொருட்டுப் பயிர்ச்செய்கை போன்ற தனிப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் எனச் சிபாரிசு செய்த கோல்புறூக் இலங்கையர் சிவில் சேவையிற் சேர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு ஆங்கிலக் கல்வி பரவலாக்கப்பட வேண்டுமென ஆலோசனை கூறினார். அத்துடன் நாட்டிலே புதிய ஒரு பொருளாதாரப் பாணியை உருவாக்குவதற்குரிய பல ஆலோசனைகளையும் கோல்புறூக் கூறினார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

அதுவரை காலமும் பொருளாதாரத் துறையிலே அரசாங்கத்துக்கு இருந்த ஆதிக்கத்தை ஒழித்துத் தனியார் முயற்சிகளுக்கும் சுதந்திர வர்த்தகத்துக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டுமெனவும் இவர் எடுத்துரைத்தார். இந்த முயற்சிகளுக்குத் தேவையான மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வெளிநாட்டு முதலீட்டாளரை இந்த நாட்டுக்குக் கவருவதற்கான வழிமுறைகள் சிலவற்றையும் இவர் எடுத்துரைத்தார். இந்த வழிமுறைகளுள், சிற்சில தீர்வைகளையும் வரிகளையும் மாற்றியமைத்தல், காணிகளை விற்பனை செய்வதற்குத் தடையாக இருந்த சில சட்ட திட்டங்களைத் தளர்த்தல். போன்றன முக்கியமானவையாகும். அவ்வாறே இம்முயற்சிகளுக்கு வேண்டிய தொழிலாளரைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும் முகமாக இராச சேவைமுறை ஒழிக்கப்பட வேண்டுமெனவும் இவர் சிபாரிசு செய்தார். இராசசேவை முறையானது பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் எல்லை மீறிச் செயற்பட்டதையும் அது மக்களுக்குப் பெரும் துன்பம் விளைவிப்பதையும் கண்ட கோல்புறூக் அந்த முறை ஒரு சுதந்திர சமுதாயத்துக்குப் பொருத்தமற்றதென எடுத்துக் காட்டினார். மேலும் அப்போது நாட்டிலே இருந்த கிராமசபை முறை தொடர்ந்து இருக்க வேண்டுமெனவும் இவர் கூறினார். நீதித் துறைப் புனரமைப்புப் பற்றிக் கமறன் ஆலோசனை கூறுகையில், மேல் நீதிமன்றம் நாட்டினது நீதித்துறையின் உயர் தாபனமாக இருக்க வேண்டுமெனச் சிபார்சு செய்தார். இதன் மேற்பார்வையின் கீழ் மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டுமெனவும் இவர் கூறினார். இங்கிலாந்தின் நீதிமன்றமுறையை ஒத்த ஒரு நீதிமன்ற முறையை இங்கு அமைப்பதே இவருடைய நோக்கமானது.

கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் யாப்பு முறை 1833 இல் பிரித்தானிய அரசாங்கத்தினால் மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி சட்டவாக்க சபை சட்ட நிரூபண சபை என இரு கழகங்கள் அமைக்கப்பட்டமை இலங்கையின் யாப்புமுறை வளர்ச்சியின் முக்கியமான ஒரு கட்டமெனலாம். இந்தப் புனரமைப்பின் கீழும் நாட்டின் ஆட்சி, நிதி சம்பந்தமான இறுதிப் பொறுப்புகள் ஆளுநரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஆயினும் புதிதாக அமைக்கப்பட்ட இரு கழகங்கள் காரணமாக அதுவரை ஆளுநருக்கு இருந்துவந்த அதிகாரங்கள் ஓரளவுக்குக் குறைக்கப்பட்டன. சட்டவாக்கக சபையில் 15 பேர் அங்கத்துவம் வகித்தார்கள். இவர்களுள் 9 பேர் பதவி வழி நியமிக்கப்பட்ட அரசாங்க அலுவலராவார்கள். ஏனைய ஆறு பேரும் ஒவ்வொரு தேசிய இனத்தினதும் பிரதிநிதிகளாக ஆளுநரால் நியமிக்கப்பட்டார்கள். இந்தப் பதவி சாராத ஆறு உறுப்பினருள் மூன்று பேர் ஐரோப்பியரின் பிரதிநிதிகளாகவும் எஞ்சிய மூன்றுபேரும் சிங்களவர், தமிழர் எனப்பட்ட இனத்தவர்களின் பிரதிநிதிகளாகவும், நியமிக்கப்பட்டார்கள். நாட்டின் மிக்க உயர் மட்டச் சிவில், இராணுவ அதிகாரிகள் ஆறுபேர் நிரூபண சபை அங்கத்தவர்களாக இருந்தார்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு 11.2.2.3

செயற்பாட்டுப் பத்திரம்

கோல்புறூக் சீர்திருத்தத்தினைப் பற்றிய தெளிவை ஏற்படுத்திக் கொள்வதற்கான வினாக்கொத்தையும், விடைகளையும் உருவாக்குவதே உங்களுக்கு இடப்பட்ட பணியாகும். இதற்காக இணைப்பு 11.2.2.2. தகவற் பத்திரத்தைப் பயன்படுத்துக.

- எளிய வினாக்களை எழுப்புக.
- சுருக்க விடைகளைப் பெற்றுக்கொள்ள முயலுக.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயற்பாடு 11.2.3

தேர்ச்சி மட்டம் : தோட்டப் பயிர்ச்செய்கை காரணமாக இலங்கையில் சமூக, பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிப்பார்.

செயற்பாடு : தோட்டப் பயிர்ச்செய்கையின் ஆரம்பமும் பரம்பலும் பற்றிய தகவல் படிவமொன்றை தயாரிப்போம்.

நேரம் : 80 நிமிடங்கள்.

தரஉள்ளீடுகள் :
- பின்னிணைப்பு 11.2.3.1 தேயிலை, இறப்பர் பயிர்ச்செய்கையை காட்டும் படம்.
- பின்னிணைப்பு - 11.2.3.2மாணவர் செயற்பாட்டுப்பத்திரம்.
- பாடநூல் - இரண்டாம் பாடம்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறை

படி.11.2.1.1 :
- பின்னிணைப்பு 11.2.3.1 படத்தைக் காட்சிப்படுததுவதோடு அங்கு காட்டப்படும் பொருளாதார நடவடிக்கைகள் பற்றி வினவுங்கள்.
- மாணவர்களின் துலங்கல்களைத் திருத்திப் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - படத்தினாற் காட்டப்படுவது இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பைச் செலுத்துகின்ற பயிர்களாகும்.
> - தேயிலைப் பயிர்ச்செய்கை மத்தியமலைநாட்டிலே பரவியுள்ளது.
> - இலங்கையின் சமூக, பொருளாதார வேறுபாடுகளில் தோட்டப் பயிர்ச்செய்கை செல்வாக்குச் செலுத்தி உள்ளது.

(10 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி.11.2.2.2 :

- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- பின்னிணைப்பு 11.2.3.2 மாணவர் செயற்பாட்டுப் பத்திரத்தைக் கொடுங்கள்.
- பாடநூலில் இரண்டாவது பாடத்தையும் ஏனைய மூலாதாரங்களையும் பெற்றுக் கொடுங்கள்.
- குழுச்செயற்பாட்டை மேற்பார்வை செய்யுங்கள்.

(30 நிமிடங்கள்)

படி 11.2.2.3 :

- மாணவர்கள் செயற்பாட்டுப்பத்திரத்தை வகுப்பில் முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அங்குள்ள பொருளடக்கம் அதன் பூரணத்துவம் பற்றி மதிப்பீடு செய்யுங்கள்.

பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பின்னர் இலங்கையில் புதிய பொருளாதாரக் கோலமொன்றுக்கு அத்திவாரமிடப்பட்டது.
- பிரித்தானியர்களின் அனுசரணையினால் கோப்பிப் பயிர்ச்செய்கை ஏற்பட்டது.
- 1840ஆம் ஆண்டளவில் மலைநாட்டில் பெரிய அளவில் கோப்பிப் பயிர்ச்செய்கை பரவியது.
- 1840ஆம் ஆண்டு 12ம் இலக்க தரிசு நிலச்சட்டம் மூலம் பெருந் தோட்டப் பயிர்ச்செய்கைக்கு பெருமளவு காணி பயன்படுத்தப்பட்டது.
- மலைநாட்டு மக்களுக்கு உரித்தாகவிருந்த காணிகளும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- 1867ஆம் ஆண்டு கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு பங்கசு நோய் ஏற்பட்டதால் கோப்பிப் பயிர்ச்செய்கை அழிந்தது.
- 1890ஆம் ஆண்டளவில் தேயிலைப் பயிர்ச்செய்கை பரவியது.
- தேயிலைச் செய்கையின் பரம்பலுக்குப் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தின.
- கூலியாட்களைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமத்தை நீக்க இந்தியத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டனர்.
- 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இறப்பர் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது.
- தேயிலை, இறப்பர் பயிர்ச் செய்கை பரவியதால் ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரமுறை ஏற்பட்டது.

(40 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பிரித்தானியர்களின் கீழ் இலங்கையில் தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டமையை விபரிப்பார்.
- இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குத் தோட்டப் பயிர்ச்செய்கை பங்களிப்புச் செய்தமையை ஏற்றுக்கொள்வார்
- இலங்கையின் தோட்டப் பயிர்ச்செய்கை பற்றிய தகவல்களை அடங்கிய தகவற் பத்திரமொன்றை தயாரிப்பார்.
- ஒத்துழைப்புடன் செயற்பட்டு அனுபவங்களைப் பெற்றுக்கொள்வார்.
- ஏனையவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப் பழகுவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பின்னிணைப்பு - 11.2.3.1.

தேயிலை, இறப்பர் பயிர்ச்செய்கைகளைக் காட்டும் படம்

பின்னிணைப்பு - 11.2.3.2

செயற்பாட்டுப்பத்திரம்

உங்களுக்கு வழங்கப்படும் செயற்பாடாக அமைவது தோட்டப்பயிர்ச் செய்கையின் ஆரம்பம் பரம்பல் பற்றிய தகவல்கள் அடங்கிய விளக்கப் பத்திரமொன்றைத் தயாரிப்பதாகும். அதற்காக பாடநூலில் இரண்டாம் பாடத்தையும் வேறு உரிய நூல்களையும் உபயோகப்படுத்துங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயற்பாடு 11.2.4

தேர்ச்சி மட்டம் : பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை பொருளாதாரத்தில் ஏற்படுத்திய மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்வார்.

செயற்பாடு : பாரம்பரிய விவசாயம் தொடர்பாக வினா - விடைப் புத்தகமொன்றை ஆக்குவோம்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- இணைப்பு 11.2.4.1 பிரவேசத்திற்காகப் பயன்படுத்தும் வினா
- இணைப்பு 11.2.4.2 தகவற் பத்திரம்
- இணைப்பு 11.2.4.3 செயற்பாட்டுப் பத்திரம்
- பாடப் புத்தகம்

கற்றல் கற்பித்தல் செயன்முறை

படி 11.2.3.1:
- இணைப்பு 11.2.4.1இலுள்ள வினாக்களை மாணவரிடம் முன்வைக்கவும். அவற்றுக்குக் கிடைக்கும் சரியான விடைகளைக் கரும்பலகையில் எழுதவும்.

  பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையிலான கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவும்.

• பண்டைக்கால இலங்கையில் முன்னேற்றமடைந்து காணப்பட்ட விவசாயம் பின்னடைவு பெற்றமைக்கு பல்வேறு காரணிகள் ஏதுவாயின. உதாரணம்: வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, நீர்ப்பாசனக் கால்வாய்கள் சேதமடைந்தமை. • மேனாட்டாரின் வருகையின் பின் பணப்பயிர்ச் செய்கைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமை. • பிரித்தானியர் இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்ததோடு இலங்கையின் பொருளாதாரமும் மாற்றமடைந்தது.

(10 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 11.2.3.2 :

- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- இணைப்பு 11.2.4.2 மற்றும் பாடப்புத்தகத்தையும் வழங்குங்கள்
- இணைப்பு 11.2.4.3 செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்கவும்.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்

(30 நிமிடங்கள்)

படி 11.2.3.3:

- மாணவர்களின் செயற்பாட்டை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்தவும்.
- மாணவர்களின் முன்வைப்பிலுள்ள குறை, நிறைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் தொகுப்புரையை நிகழ்த்தவும்.

- பிரித்தானிய ஆட்சியாளர் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் கவனஞ் செலுத்தியமையால் விவசாயத்தில் கவனஞ் செலுத்தாமை.
- இராசகாரிய முறை இரத்துச் செய்யப்பட்டமையால் உள்ளூர் விவசாய நடவடிக்கைகள் கைவிடப்பட்டமை.
- பாரம்பரிய விவசாய நடவடிக்கைகளுக்கு அரச அனுசரணை கிடைக்காமை.
- பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு காணிகள் பயன் படுத்தப்பட்டமையால் மலைநாட்டு விவசாயிகளுக்கு காணிப்பிரச்சினை ஏற்பட்டமை.
- விவசாயத்திற்கு நிலமின்மையால் 1848இல் ஆங்கிலேயருக்கு எதிராக விவசாயிகள் கிளர்ந்தெழுந்தமை.
- 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாரம்பரிய விவசாயத்தை முன்னேற்றுவதில் பிரித்தானியர் கவனஞ் செலுத்தினர்.
- ஹென்றிவோட், ஹர்கியூலஸ், றொபின்சன், வில்லியம் கிறகெரி போன்ற ஆளுநர்கள் இதன் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

40 நிமிடங்கள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கணிப்பீடும் மதிப்பீடும்

- இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் போது பாரம்பரிய விவசாயம் அழிவடைந்தமைக்கான காரணிகளை விளக்குவார்.
- பண்டைக் காலத்தில் நிலவிய உள்நாட்டு விவசாய நடவடிக்கைகள் நலிவுற்றமைக்கு மேனாட்டார் வருகையே காரணம் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- பிரித்தானிய ஆளுநர்களையும், உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்த அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அட்டவணைப்படுத்துவார்.
- குழுக்களில் ஒத்துழைப்புடன் கருமமாற்றுவார்.
- ஒத்துழைப்பின் ஊடாக அனுபவங்களை வளர்த்துக் கொள்வார்.

இணைப்பு 11.2.4.1

பிரவேசத்திற்கான வினாக்கள்

- புராதன இலங்கையில் நிலவிய விவசாயம் நலிவுற்றமைக்கு ஏதுவான காரணிகள் யாவை?
- மேனாட்டாரின் வருகையுடன் விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு 11.2.4.2

தகவற் பத்திரம்

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் பாரம்பரிய விவசாயம்

பிரித்தானியர் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்ததுடன் பாரம்பரிய விவசாயத்துறை நலிவுற்றது. பாரம்பரிய விவசாயத்திற்குக் கிடைத்த அரச அனுசரணை தடைப்பட்டது. மலைநாட்டின் பாரம்பரிய வயல் நிலங்கள் விவசாயிகளிடமிருந்து பறிபோயின. 1848இல் ஆங்கிலேயருக்கெதிரான கிளர்ச்சிக்கு விவசாயம் புறக்கணிக்கப் பட்டமையே காரணமாகும். இந்நிலையை விளக்கிக் கொண்ட ஆட்சியாளர் 19ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் கிராமிய விவசாய முன்னேற்றம் தொடர்பாக கவனஞ் செலுத்தினர். ஆளுநர் ஹென்றி வோட் (1855-1860) காலப்பகுதியில் புராதன நீர்ப்பாசன முறைமை மறுசீரமைக்கப்படத் தொடங்கியது. நீர்ப்பாசனக் குழு அமைக்கப்பட்டு பாரம்பரிய சட்டதிட்டங்கள் மீண்டும் அமுல்படுத்தப்பட்டன. ஹேர்கியூலிஸ் றொபின்சன் ஆளுநரின் காலத்தில் (1865 -1872) நீர்ப்பாசன புனரமைப்பு தொடர்பாக விசேட கவனஞ் செலுத்தப்பட்டது. 1872 - 1877 காலப்பகுதியில் இராஜரட்டைப் பிரதேசத்தில் நீர்ப்பாசனத்துறை தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட்டது. கம்சபாவின் கீழ் குளக்கட்டுக்களை அமைத்தல், புனரமைத்தல் போன்ற பணிகள் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டதுடன் இவற்றுக்கு அரச அனுசரணையும் கிட்டியது.

படி 11.2.4.3

குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

முக்கியமான விடயங்களை மாணவர்களுக்குக் குறிப்பெடுக்க ஆலோசனை வழங்குங்கள்

மாணவர்களின் செயற்பாட்டைக் கணிப்பிட்டு, கீழ்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடலை நடத்துங்கள்.

பிரித்தானியர் ஆரம்பித்த பெருந்தோட்டத்துறைக்குப் பெருந்தொகைத் தொழிலாளர்கள் தேவைப்பட்டமை.

தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தொழிற்சங்கங்கள் உருவானமை

தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

A.E. குணசிங்க அவர்கள் தொழிலாளர் இயக்கத்தின் பலம்வாய்ந்த தலைவரானமை.

இலங்கைத் தொழிலாளர் கட்சியை ஆரம்பித்த A.E. குணசிங்க அவர்கள் தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடியமை

1935இன் பின்னர் மலைநாட்டுத் தோட்டங்களிலும் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை அமைத்துக்கொண்டு உரிமைகளை வென்றெடுப்பதற்குச் செயற்பட்டமை

(40 நிமிடங்கள்)

மதிப்பீடும் கணிப்பீடும்

இலங்கையில் தொழிலாளர் வர்க்கம் தோற்றம் பெற்ற விதத்தை விளக்குவார்.

தொழிற் சங்கங்களின் மூலம் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுத்தனர் என்பதை ஒப்புக்கொள்வார்.

தொழிலாளர் இயக்கத் தலைவர்களைப் பற்றிக் கட்டுரை ஒன்று எழுதுவார்.

குழு உணர்வுடன் செயற்பாட்டில் ஈடுபடுவார்.

தாம் கண்டறிந்த விடயங்களை வகுப்பில் ஏனைய மாணவர்களின் முன்வைப்பார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயற்பாடு 11.2.5

தேர்ச்சி : பிரித்தானிய ஆட்சியால் இலங்கையர் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குவார்.

செயற்பாடு : மத்தியதர வகுப்பினரை அறிந்து கொள்வோம்

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- இணைப்பு 11.2.5.1. பிரவேசத்திற்கான பாடப் பத்திரம்
- இணைப்பு 11.2.5.2 செயற்பாட்டுப் பத்திரம்
- இணைப்பு பாடநூல்

கற்றல் கற்பித்தல் செயன்முறை

படிமுறை 11.2.5.1 :
- இணைப்பு 11.2.5.1. பிரவேசத்திற்கான பாடப் பரப்பை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துங்கள்.
- அதனை ஆராய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்
- இவற்றினூடே மத்தியதர வகுப்பினர் யாவர் என்று வினவுவதுடன் அது தொடர்பான வினாக்களைக் கேளுங்கள்.

உதாரணமாக:

1. மத்தியதர வகுப்பினர் எனப்படுவோர் யாவர்?
2. அவர்கள் பணத்தை எவ்வாறு ஈட்டிக் கொண்டனர்?
3. அவர்களால் ஆற்றப்பட்ட சேவைகள் எத்தகையவை?

- அவர்களுடைய விடைகளிலிருந்தும், கீழ்வரும் விடயங்கள் துலங்கும் வண்ணமும் கலந்து ரையாடவும்.
  - 19ஆம் நூற்றாண்டில் மத்தியதர வகுப்பினர் தோற்றம் பெற்றமை
  - அவர்கள் அரசியலமைப்புச் சீர்திருத்தப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியமை
  - அவர்களுள் பெரும்பாலானோர் வியாபாரிகளாயிருந்தமை

(10 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 11.2.5.2 :
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 11.2.5.2.ஐ குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்
- மாணவர்களுக்குச் செயற்பாடு பற்றி விளக்கமளியுங்கள்
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்

(30 நிமிடங்கள்)

படி 11.2.5.3 :
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்
- மாணவர் செயற்பாட்டைக் கணிப்பீட்டிற்குட்படுத்துங்கள்
- முக்கியமான விடயங்களைக் குறிப்பெடுத்துக்கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்
- மாணவர்களின் இயலுமையையும் இயலாமையையும் அறிந்து கொண்டு கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் துலங்கும்வண்ணம் தொகுப்புரையை நிகழ்த்துக.

• ஆங்கில மொழிக் கல்வியைத் தொடர்ந்து மேனாட்டு நாகரிகத்தை மதிக்கும் ஒரு கூட்டத்தினர் தோன்றினர. • இதனால் தேசிய கலாசாரச் சீரழிவிற்கு வழியேற்பட்டமை • புதிய பணக்கார வர்க்கமொன்று தோற்றம் பெற்றமை • அவர்களிடம் செல்வமும் கல்வியும் இருந்தபோதும் அரசியல் பலம் இருக்கவில்லை. • இலங்கையில் சமூக, பொருளாதாரத்திற்கும் பொருளாதார மாற்றங்களுக்கும் இவர்களின் பங்களிப்புக் கிட்டியமை.

(40 நிமிடங்கள்)

மதிப்பீடும் கணிப்பீடும்

- இலங்கையில் மத்திய வகுப்பாரின் தோற்றத்தைப் பற்றி விளக்குவார்.
- அரசியல் சீர்திருத்தக் கோரிக்கைகளை முன்வைப்பதில் இவர்கள் முன்னணி வகித்ததை ஏற்பார்.
- அரசியல் சீர்திருத்த விடயங்களுக்குப் பங்களித்தவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரிப்பார்.
- கூட்டுணர்வுடன் செயற்படுவார்.
- ஆளுமைப் பண்புகளை விருத்திசெய்து கொள்வார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு 11.2.5.1

பிரவேசத்திற்காக

19ம் நூற்றாண்டில் இலங்கையில் ஆங்கிலக் கல்விமுறை பரவவியதுடன் மத்திய தர வகுப்பினர் தோற்றம் பெற்றனர். பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையாலும் அது தொடர்பான நடவடிக்கைகளாலும் பணத்தைச் சேகரித்துக் கொண்ட அவர்கள், பணம் படைத்தோராயினர். 19ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இருந்து அரசியல் சீர்திருத்த கோரிக்கைப் போராட்ட நடவடிக்கைகளில் அவர்கள் சம்பந்தப்பட்டனர்.

இணைப்பு 11.2.5.2

செயற்பாட்டுப்பத்திரம்

பாடநூலைப் பயன்படுத்தி, இலங்கை மத்தியதர வகுப்பினர் பற்றி கீழ்வரும் தலைப்பில் பாடசாலை இலக்கிய கழகத்தில் சொற்பொழிவு ஒன்றை ஆற்றுவதற்காக, சம்பந்தப்பட்ட விடயங்களை முறையாகத் தொகுப்பதே உங்களுக்கு வழங்கப்பட்ட பணியாகும்.

மத்தியதர வகுப்பினரின் தோற்றம்
வளர்ச்சி
பொருளாதார நிலை

அவர்கள் ஆற்றிய சேவைகள்

ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு மாணவரைத் தெரிவுசெய்து அவ்வுரையை ஆற்றச் செய்க.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயற்பாடு 11.2.6

தேர்ச்சி மட்டம் : பிரித்தானியர் ஆட்சியால் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குவார்.

செயற்பாடு : தொழிலாளர் வர்க்கத்தைத் தெரிந்து கொள்வோம்

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- இணைப்பு 11.2.6.1 பிரவேசத்திற்கான படம்
- இணைப்பு 11.2.6.2 செயற்பாட்டறிக்கை
- இணைப்பு 11.2.6.3. செயற்பாட்டறிக்கை
- பாடநூல்

கற்றல் கற்பித்தல் செயன்முறை

படி 11.2.6.2 :
- இணைப்பு 11.2.6.1. பிரவேசச் சித்திரத்தை மாணவர்களுக்குக் காண்பியுங்கள்.
- இச்சித்திரம் எதனைக் குறிக்கிறது என வினவுங்கள்
- சரியான விடைக்குப் பாராட்டு வழங்கி, கீழே தரப்பட்டுள்ள விடயங்களை உள்வாங்கி கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

• பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் தொழிலாளர் இயக்கம் ஆரம்பமானமை. • பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையின் ஆரம்பத்துடன் உழைப்பைப் பணத்திற்கு விற்கும் நிலை தோன்றியமை.

(10 நிமிடங்கள்)

படி 11.2.4.2. :
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 11.2.6.2.ஐ குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்
- இணைப்பு 11.2.6.3. செயற்பாட்டறிக்கையையும் பாடநூலையும் வழங்குங்கள்.
- செயற்பாட்டைச் சுருக்கமாக விளக்குங்கள் மாணவர்களை செயற்படச் செய்யுங்கள்.

(30 நிமிடங்கள்)

இணைப்பு 11.2.6.1

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு 11.2.6.2

செயற்பாட்டறிக்கை

A.E. குணசிங்க (1891 -1964)

இலங்கைத் தொழிலாளர் இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படும் அலெக்ஸாண்டர் ஏகநாயக்க குணசிங்க அவர்கள் 1891இல் பிறந்தார். அவர் கண்டி தர்மராஜ வித்தியாலயத்திற் கல்வி பயின்றார். சிறு வயதிலிருந்தே தேசிய உணர்வு மிக்க வாலிபரான அவர் அரச எழுதுவினைஞர் சேவையிலிருந்து விலகி, பொதுச் சேவையில் புகுந்தார். அக்கால சிங்களத் தலைவர்கள் பலரையும், போல அவரும் மது ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபடலானார். 1915 இனக் கலவரத்தின் போது கைதான தேசியத் தலைவர்களில் இவரும் ஒருவராவார். அதன் பிறகு அரசியலில் ஈடுபட்ட குணசிங்க அவர்கள், அரச அதிகாரிகளிடமும் முதலாளிகளிடமும் சிக்குண்டு எவ்வித உரிமைகளும் இன்றி நிர்க்கதியான, நிலையில் துன்பமயமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த தொழிலாளர்களை இயக்க ரீதியில் ஒன்று திரட்டுவதில் ஈடுபட்டார். இதற்காக 1923ல் இலங்கைத் தொழிலாளர் இயக்கத்தை ஆரம்பித்தார். அது இலங்கையின் முதலாவது தொழிலாளர் இயக்கமாகும். இத்தொழிற் சங்கத்தின் கீழ் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வேலைநிறுத்தப் போராட்டங்கள் பலவற்றை நடத்தினார். 1927இல் துறைமுக தொழிலாளர் வேலை நிறுத்தம், 1929இல் கொழும்பு நகரினுள் போக்குவரத்திலீடுபட்ட ஐரோப்பிய கம்பெனி ஒன்றுக்குச் சொந்தமான 'ட்ராம் கார்' தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் என்பன இவற்றுள் முக்கியமானவைகளாகும். இதில் தொழிலாளர்கள் வெற்றி பெற்றார்கள். இது தொழிலாளர் பலத்தைக் காட்டக்கூடிய ஒரு சந்தர்ப்பமாகும். பலம்வாய்ந்த முறையில் அமைப்பு ரீதியாகச் செயற்பாட்டு, சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமானபோது வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவதன் மூலம் ஐரோப்பிய முதலாளிமாரிடமிருந்தும் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை இத்தொழிற் சங்க நடவடிக்கைகளால் தொழிலாளர்களுக்கு உணர்த்தினார்.

பெருந் தோட்டத் துறைக்கும் ஏனைய தொழில்களுக்கும் இந்தியத் தொழிலாளர்களை இந்நாட்டுக்குக் கொண்டுவருவதற்கு எதிராகவும் இங்கு இருப்போரை வெளியேற்றுவதற்காகவும் குரல் கொடுத்தார். அவ்வாறு செய்வதன் மூலம் இலங்கை மக்களின் தொழிற் பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம் என்பது அவரது நோக்கமாகும். இப்போராட்டத்தின் பிரதிபலனாக இலங்கைக்கு இந்தியர்களைத் தருவிப்பது பெருமளவுக்குக் குறைந்தது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இதற்கிடையில் அவர் தொழிலாளர் கட்சியை ஆரம்பித்தார். அது அக்காலத்தில் தொழிலாளர்களுக்கு என்று இருந்த ஒரேகட்சியாகும். 1928இல் டொனமூர் குழுவின் முன்னால் சாட்சியமளித்த குணசிங்க அவர்கள், சர்வசன வாக்குரிமையைக் கோரிநின்ற ஒரே அரசியல் கட்சித் தலைவராவார். 1931இல் மத்திய கொழும்பிலிருந்து அவர் அரசுக்குக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். அவர் கொழும்பு மாநகர சபைத் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். 1947இல் மத்திய கொழும்பிலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் வெளிநாட்டுத் தூதுவராகவும் கடமையாற்றியுள்ளார்.

இக்காலகட்டத்தில் இடதுசாரி தொழிலாளர் இயக்கங்களின் வளர்ச்சியால் குணசிங்க அவர்களின் புகழ் மங்கத் தொடங்கியது என்றாலும் தொழிலாளர் இயக்கத்தின் முன்னோடியாக அவர் கருதப்படுகிறார். 1964இல் அவர் காலமானார்.

இணைப்பு 11.2.6.3.

செயற்பாட்டுப் பத்திரம்

இலங்கைத் தொழிலாளர் இயக்கத்தைப் பற்றிப் பத்திரிகையிற் பிரசுரிப்பதற்காக சிறிய கட்டுரை ஒன்றை எழுதுவது உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்படையாகும்.

செயற்பாடு - 11.2.7

தேர்ச்சி மட்டம் : பிரித்தானிய ஆட்சி காரணமாக இலங்கையின் சமூக, பொருளாதார துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குவார்.

செயற்பாடு : இலங்கைத் தேசிய இயக்கத்தின் முன்னோடிகளை இனங்காண்போம்.

நேரம் : 80 நிமிடங்கள்.

தரவிருத்தி உள்ளீடுகள்:
- பின்னிணைப்பு - 11.2.7.1
- பின்னிணைப்பு 11.2.7.2
- பின்னிணைப்பு 11.2.7.3 - செயற்பாட்டுப் பத்திரம்.
- பாடப்புத்தகம்
- உரிய வேறு நூல்கள்.

கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படி 11.2.4.3 :
- பின்னிணைப்பு 11.2.7.1 ஐக் காட்சிப்படுத்துங்கள்
- படத்தில் காணப்படும் நபர்கள் யார் என வினவுங்கள்.
- இவ்வாறான நபர்கள் சிலரைக் குறிப்பிடுங்கள்.
- மாணவர்களின் சரியான துலங்கல்களைக் கரும்பலகையில் குறிப்பிடுங்கள்.
- மாணவர்களின் துலங்கலை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதோடு பின்வரும் விடயங்கள் வெளிவரக் கூடியவாறு கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்

• இலங்கையின் தேசிய இயக்கத்தில் முக்கியமான நபர்கள் பலர் இருந்தார்கள் • அனகாரிக தர்மபால அவர்கள் ஸ்ரீ லஸ்ரீஆறுமுக நாவலர் அவர்கள், சித்திலெப்பை அவர்கள், பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள், எப்.ஆர்.சேனநாயக அவர்கள், சேர்.டி.பீ. ஜெயதிலக்க அவர்கள், ஈ.டபிள்யூ.பெரெரா அவர்கள், ஏ.ஈ.குணசிங்க அவர்கள், எஸ். டபிள்யூ ஆர்.டீ பண்டாரநாயக்க அவர்கள் ஆகியோர் அவர்களில் சிலராவார்.

(10 நிமிடங்கள்.)

படி 11.4.3.2 :

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- பின்னிணைப்பு11.2.7.2ஐக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- பின்னிணைப்பு11.2.7.3ஐக் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- செயற்பாட்டைச் சுருக்கமாக விபரியுங்கள்.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவர்களின் செயற்பாட்டை அவதானியுங்கள்.

(30 நிமிடங்கள்)

படி 11.2.4.3 :

- மாணவர்களின் செயற்பாட்டை வகுப்பில் முன் வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களின் இயலுமைகளையும், இயலாமை களையும் இனங்காணுங்கள்.
- முக்கியமான தகவல்களைக் குறித்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிவரக் கூடியவாறு பின்னூட்டல் வழங்கி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- சுயமொழி கற்ற மத்திய வகுப்பினரும் ஆங்கிலமொழி கற்ற மத்திய வகுப்பினரும் தேசிய இயக்கத்தில் இணைந்து இருந்தார்கள்.
- அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளவும் சமய, கலாசார உரிமைகளுக்காகவும் இயக்கங் களாகச் சேர்ந்தனர்.
- அரசியல் யாப்புத் திருத்தங்களினூடாக நாட்டின் நிருவாகத்தில்பங்காளிகளாக ஆவதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தார்கள்.

- மது ஒழிப்பு இயக்கம், (1919ஆம் ஆண்டு) இலங்கை தேசிய சங்கம், இலங்கைத் தொழிலாளர் கட்சி போன்ற சங்கங்களை அமைத்து நோக்கங்களை அடைய முயற்சி செய்த தமது குழுவினர் இருந்தார்கள்.

- சுதந்திர போராட்டத்தின் முன்னோடிகளில் சிலர் 1919ஆம் ஆண்டு சிறைத் தண்டனை அனுபவிக்க நேர்ந்தது.

- 1924 - 1931 அரசியலரமைப்பு சீர்திருத்தங்களைப் பெறுவதற்குச் கொள்வதற்கு சுதந்திர இயக்கத்திற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

- தேசிய இயக்கம்செயற்படும் போது சட்டவாக்க சபையில் ஆசனங்களைப் பகிர்ந்து கொள்வதை அடிப்படையாகக் கொண்டு சிங்கள, தமிழ் தலைவர்களுக்கிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

(40 நிமிடங்கள்)

கணிப்பீடும் மதிப்பீடும் நியதிகள்

- தேசிய இயக்கத்துடன் தொடர்புடைய தலைவர்களைப் பெயரிடுவார்.
- இலங்கைச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க அவர்கள் செய்த சேவையை மதிப்பார்.
- தேசியத் தலைவர்கள் பற்றிய தகவல்களை அறிக்கைப்படுத்துவார்.
- ஒன்றுசேர்ந்து செயற்படுவதற்கு ஊக்குவிக்கப்படுவார்
- ஆளுமை விருத்திக்கு தேசிய தலைவர்களின் நடவடிக்கைகளின் பண்புகளை ஆதாரமாகக் கொள்வார்.

பின்னிணைப்பு 11.2.7.1

அனகாரிக தர்மபால	ஸ்ரீமத் பொன்னம்பலம் ராமநாதன்	எம்.சீ.சித்திலெப்பை

11.2.7.2 தகவற் பத்திரம்

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் சீரழிந்த உள்நாட்டு சமயக் கலாசார புனர்வாழ்வுக்கு சுயமொழி கற்றவர்கள் பல்வேறு இயக்கங்களை செயற்படுத்தினர். அதே போன்று அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைப் பெறுவதற்கு ஆங்கிலம் கற்ற மத்திய வகுப்பினர் போராட்டங்களை நடத்தினர். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில, சிங்கள பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன இந்த இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அனுசரணை காட்டின. 1910ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மக்களம் சீர்திருத்தங்களினால் சட்டவாக்கக் கழகத்திற்கு படித்த இலங்கையர்களின் வாக்குகளினால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் திரு.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களாகும்.

அப்போது செயற்பட்டுக்கொண்டிருந்த மது ஒழிப்பு இயக்கத்திலிருந்த சுயமொழி கற்றவர்களும் ஆங்கிலம் கற்ற வகுப்பினரும் தேசிய இயக்கத்தில் ஒன்று சேர்ந்தனர். 1915ஆம் ஆண்டு சிங்கல, முஸ்லிம் கலவரத்தின் போது தேசிய இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட தலைவர்கள் சிலர் சிறைப்படுத்தப்பட்டனர்.

டீ.எஸ்.சேனநாயக்க அவர்கள்

இவர் 1884ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மீரிகம போத்தலே என்னும் ஊரில் பிறந்தார். பிரித்தானியர் ஆட்சியாளர்கள் உள்நாட்டு விவசாயம், நீர்ப்பாசனம் என்பன பற்றி முயற்சி எடுக்காத யுகத்தில் விவசாய குடியேற்றத்திட்டங்கள் ஊடாக உணவை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி எடுத்து ஒரு முன்னோடியாகச் செயற்பட்டவர் இவரே ஆகும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

1912ஆம் ஆண்டு நாடு பூராகவும் மதுபான விற்பனை சாலைகளை உண்டாக்குவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு எதிராக எழுந்து நின்ற மது ஒழிப்பு இயக்கத் தலைவர்களிடையே டீ.எஸ்.சேனநாயக்க அவர்களும் ஒருவராவர். 1915ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக மதுஒழிப்பு இயக்கத் தலைவர்களுடன் இவரும் சிறைப்படுத்தப்பட்டார். சிறையில் தனக்கு அனுபவிக்க நேரிட்ட துன்பங்களையும் தனது இனத்தவர்களுக்கு ஏற்பட்ட அநீதிகளையும் பற்றிச் சிந்தித்து இலங்கை தேசிய சங்கத்துடன் இணைந்து சுதந்திரப் போராட்டத்தின் செயற்பாடுகளில் முன்னணி வகித்தார். 1924ஆம் ஆண்டு சட்டவாக்கக் கழகத்துக்கு நீர்கொழும்பு மாவட்ட உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 1931ஆம் ஆண்டு டொனமுர் அரசியல் யாப்பின் கீழ் அரசுக் கழகத்தின் விவசாய நிர்வாக செயற்குழுவின் விவசாய அமைச்சர் பதவியை வகித்தார். அரசுக் குழுவின் விவசாய அமைச்சராக இருக்கும் போது பிரித்தானியாவால் அங்கீகரிக்கப்பட்ட தரிசு நிலச்சட்டத்தை செயலிழக்கச் செய்து புதிய காணி அபிருத்திச் சட்டமொன்றை அங்கீகரித்துக் கொண்டார். சோல்பரி ஆணைக்குழு முன்வைத்த புதிய அரசியல் யாப்புக்கமைய 1947ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியை ஆரம்பித்து பொதுத்தேர்தலில் போட்டியிட்டு இலங்கையின் முதலாவது பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். 1948ஆம் ஆண்டின் இந்திய வம்சாவளிச் சட்டம், கல்லோயா குடியேறறத் திட்டம் என்பன இவருடைய முக்கியமான இரு சேவைகளாகும்.

எப்.ஆர். சேனநாயக்க அவர்கள்

பெட்ரிக் ரிச்சட் சேனநாயக்க அவர்கள் கி.பி.1882இல் மீரிகம போத்தலே என்னும் ஊரில் பிறந்தார். பிரித்தானியாவில் கல்வி கற்ற சட்டவறிஞரான இவர் வழக்கறிஞர் தொழிலில் விருப்பம் காட்டாமையினால் அதிலிருந்து விலகி சமூக சேவையில் ஈடுபட்டார். 1912ஆம் ஆண்டு பிரித்தானியர்களினால் உருவாக்கப்பட்ட மதுவரிச் சட்டத்துக்கமைய நாடு பூராகவும் மதுபான விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கத் தொடங்கின. மதுவினால் ஏற்படும் தீமையை உணர்ந்த இவர் மக்களை இதிலிருந்து மீட்டிக் கொள்வதற்கு இலங்கை மது ஒழிப்பு இயக்கத்தை ஆரம்பித்தார். 1915ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது எப்.ஆர். சேனநாயக்க அவர்கள் உட்பட மது ஒழிப்பு இயக்கத் தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். இவ்வாறு வழக்கு விசாரணையின்றிச் சிறைச்சாலையில் வைக்கப்படுவது போன்ற அநியாயமான செயற்பாடுகள் காரணமாக தமது நாட்டு அலுவல்களைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமல் போனமையினால் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களிடமிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காகத் தனது பணத்தையும், உழைப்பையும் செலவு செய்தார். 1915ஆம் ஆண்டு சிங்கள - முஸ்லிம் கலவரம் பற்றிய விபரங்களைப் பிரித்தானிய அரசுக்கு முன்வைப்பதற்கு அனுப்பப்பட்ட குழுவினருக்குரிய செலவை இவரே ஏற்றுக் கொண்டார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

சேர். டீ பீ ஜயதிலக்கா அவர்கள்

படித்தவர் என்ற வகையில் சிங்களமொழிக்கும், இனப்பற்றுள்ளவர் என்ற வகையில் இனத்துக்கும், பௌத்த உபாசகர் என்ற வகையில் சமயத்துக்கும் சேவையாற்றித் தமது பிறந்த பூமிக்குப் பெருஞ் சேவையாற்றிய சேர் தொன் பாரன் ஜயதிலக்கா அவர்கள் 1912ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 13ஆம் திகதி களனி வராகொடவில் பிறந்தார். ஜோன் டேனியல் ஜயதிலக்கா அவர்கள் இவருடைய தகப்பனாராவார்.

தமது பிள்ளைகளைக் கல்விக்காகக் கிறிஸ்தவப் பாடசாலைகளுக்கு அனுப்பும் அக்காலப் பழக்கத்துக்கு ஏற்ப ஜயதிலக்காவும் ஊரின் கிறிஸ்தவப் பாடசாலை மூலம் தமது கல்வியை ஆரம்பித்தார். அவருடைய பெற்றோர் பௌத்த பக்தியாளர்கள் என்பதனால் பௌத்த சமயத்தையும் கீழைத்தேய மொழிகள் பற்றிய அறிவையும் விருத்திசெய்துகொள்வதற்கு அவர் பெப்பிலியாகொடை வித்தியாலங்கார பிரிவேனவுக்கு அனுப்பப்பட்டார்.

பின்னர் கொழும்பு வெஸ்லி கல்லூரியிலிருந்து மேற்கத்திய மொழிகள் பற்றிய அறிவையும் பெற்றுக் கொண்டார்.

ஓல்கொட் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த கல்வியின் மறுமலர்ச்சி மீது அவரது மனம் கடுமையாக ஈர்க்கப்பட்டதால் ஜயதிலக்கா தமது 22ஆம் வயதில் கண்டி தர்மராஜ கல்லூரியிலும் பின்னர் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் சேவையாற்றிய காலத்தில் பௌத்த இளைஞர்களை ஒன்று சேர்த்து பௌத்த சமயத்தையும், பௌத்த கலாசாரத்தையும் மேம்படுத்துவதற்காக பௌத்த இளைஞர் சங்கத்தை 1898ஆம் ஆண்டு அமைத்து தமது ஆயுட்காலம் பூராவும் அதன் தலைவராக செயற்பட்டுக் கொண்டு அதன் வழிகாட்டியாகக் கடமையாற்றினார்.

1910ஆம் ஆண்டு ஆனந்தாக் கல்லூரியின் அதிபர் பதவியிலிருந்து விலகிய அவர் உயர் கல்விக்காக இங்கிலாந்துக்குச் சென்று ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் கலை முதுமாணி (M.A) பட்டத்தைப் பெற்றார். இங்கிலாந்திலேயே அவர் உயர் வழக்கறிஞர் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

மீண்டும் இலங்கைக்கு வந்த ஜயதிலக்கா அவர்கள் சிறிது காலம் வழக்கறிஞர் பதவியில் ஈடுபட்டு பின்னர் அதிலிருந்து நீங்கி பொதுச் சேவையில் முற்றுமுழுதாக ஈடுபடுத்திக்கொண்டார். மது ஒழிப்பு இயக்கத்துடன் சம்பந்தப்பட்டு அதன் ஏனைய தலைவர்களுடன் சிறையிலிடப்பட்டார். அதிலிருந்து விடுதலை பெற்ற பின்னர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள், ஈ.டப்ளியூ. பெரேரா அவர்கள் ஆகியவர்களுடன் பிரித்தானியாவுக்குச் சென்று அக்காலத்தில் நாட்டில் இருந்த பிரித்தானிய ஆட்சியாளர்களின் அநீதியான செயற்பாடுகள் பற்றிய விடயங்களை முன்வைத்தார். அதன் பிறகும் இரண்டு முறை பிரித்தானியாவுக்குச் சென்று இலங்கை தேசிய சங்கத்தின் பிரதிநிதிகள் கூட்டத்தின் செயலாளராக அவர் கடமையாற்றினார்.

1924ஆம் ஆண்டு சட்டவாக்கக் கழக உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட ஜயதிலக்கா அவர்கள் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களின் மரணத்தின் பின் அதன் உபதலைவராக நியமனம் பெற்றார். டீ.எஸ்.சேனநாயக்கா அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். 1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பு முறையின் கீழ் உள்நாட்டலுவல்கள் அமைச்சராகவும், சபை முதல்வராகவும் பதவிவகித்தார். அப்போது இலங்கையர்களின் அரசியல் தலைவராக அவரை எல்லோரும் ஏற்றுக் கொண்டதனால் அரசியலமைப்பைச் சீர்திருத்துவதற்காக பிரித்தானியாவுடன் கலந்துரையாடுவதற்கான குழுவிற்கு அவர் தலைமை தாங்கினார்.

அரசியல் அலுவல்களில் ஈடுபட்டதோடு பௌத்த அலுவல்களிலும், கல்வி அலுவல்களிலும் அவர் ஈடுபட்டார். பழைய சிங்கள இலக்கிய நூல்களை பதிப்பித்ததின் மூலம் சிங்கள இலக்கியத்துக்கு பெருஞ் சேவையாற்றினார். ஜேர்மனி நாட்டு புகழ்பெற்ற பண்டிதரான வில்ஹெல்ம் கைகர் அவர்களுடன் இணைந்து சிங்கள அகராதியைத் தயாரிக்க முற்பட்டார்.

1942ஆம் ஆண்டு அரசியல் அலுவல்களில் இருந்து நீங்க வேண்டியேற்பட்டதால் இவர் இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவராகக் கடமையாற்ற அங்கு சென்றார். 1944ஆம் ஆண்டு அங்கு நோய்வாய்ப்பட்டு மீண்டும் தமது தாய் நாட்டுக்கு வரும்போது மரணமடைந்தார்.

ஈ.டப்ளியூ. பெரேரா அவர்கள்

“கோட்டை சிங்கம்” என்னும் புனைபெயரையுடைய ஈ.டப்ளியூ. பெரேரா அவர்கள் கி.பி.1875ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி பிறந்தார். கொழும்பு பிரபல வழக்கறிஞரான ஈ.டப்ளியூ.பெரேரா அவர்கள் இவருடைய தந்தையாவார். அவர்களுடைய வீடு கோட்டையில் அமைந்திருந்ததோடு ஈ.டப்ளியூ.பெரேரா அவர்கள் கொழும்பு றோயல் கல்லூரியிற் கல்வி பெற்றார். பின்னர் சட்டக் கல்லூரியில் இணைந்து சட்டம் பயின்று உயர் வழக்கறிஞரானார் உயர் வழக்கறிஞராகத் தொழிலில் ஈடுபடுவதற்கு விருப்பம் காட்டாத அவர் இளைஞர் காலத்திலிருந்தே சமூக சேவை அலுவல்களில் ஈடுபட்டார். ஓய்வு கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் புத்தகம் வாசிப்பதில் ஈடுபட்ட அவர் வரலாறு, சிங்கள இலக்கியம் என்பன பற்றிக் கற்றார்.

1915ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட கலவரத்தின் போது ஆங்கில ஆட்சியாளர்களினால் சிங்கள இனத்தவர்கள் அதிக இன்னல்களுக்கு உட்பட்டனர். இங்கு சிங்களப் பிரமுகர்கள் சிறைப்பிடிக்கப்பட்டதுடன் சிலர் சுட்டும் கொல்லப்பட்டனர். அரசின் இந்தப் போக்குக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு அவர் கோட்டேயிலுள்ள தமது வீட்டுக்கு மக்கள் தலைவர்களை அழைத்தார். இங்கு எடுத்திக் கொண்ட தீர்மானங்களின்படி ஈ.டப்ளியூ.பெரேரா அவர்கள், சேர்.பொன்னம்பலம் இராமநாதன், டி.பீ. ஜயதிலக்கா ஆகியோருடன் குடியேற்ற நாடுகளுக்குப் பொறுப்பான பொதுச் செயலாளரைச் சந்திப்பதற்காக இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு முன்வைப்பதற்கு எடுத்துச் சென்ற மனுவை இந்நாட்டு ஆங்கில ஆட்சியாளர்களுக்கு மறைப்பதற்காக வேண்டி தமது சப்பாத்து அடியில் மறைத்துக் கொண்டு சென்றார். இங்கிலாந்துக்குச் சென்ற ஈ.டப்ளியூ. பெரேரா அவர்கள் அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு இந்நாட்டின் இனக் கலவரம் பற்றி ஏற்பட்ட இந்நிகழ்வுகள் பற்றி இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினர்.

பின்னர் இலங்கை அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் பற்றி கூடிய கவனம் செலுத்திய ஈ.டப்ளியூ. பெரேரா அவர்கள் மேல் மாகாணத்தின் ''பீ'' பிரிவின் பிரதிநிதியாகச் சட்டவாக்கக் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். 1926ஆம் ஆண்டு இலங்கை தேசிய சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட அவர் டொனமூர் ஆணைக்குழு முன்னிலையில் சங்கத்துக்காக வேண்டி சாட்சியமளித்த குழுவின் தலைவராகக் கடமையாற்றினார். அங்கு சர்வசன வாக்குரிமை இலங்கைக்கு வழங்கப்படுவது யோக்கியமற்றதெனக் கருத்துத் தெரிவித்தார்.

முதலாவது அரசுக் கழகத்துக்கு ஹொரண தேர்தல் தொகுதியின் உறுப்பினராக நியமனம் பெற்ற அவர் மேலும் செய்யப்பட வேண்டிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றி ஆர்ப்பாட்டம் செய்தார். 1936ஆம் ஆண்டு ஹொரண தேர்தல் தொகுதியில் இருந்தும் பின்னர் களனி தேர்தல் தொகுதியில் இருந்தும் தோற்கடிக்கப்பட்ட அவர் அரசியலிருந்து நீங்கினார். பிற்காலத்தில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஈ.டப்ளியூ. பெரேரா அவர்கள் 1953ஆம் ஆண்டு மரணமடைந்தார்.

இவர் இங்கிலாந்துக்குச் சென்ற சந்தர்ப்பத்தில், இலங்கையிலிருந்து பிரித்தானியர் 1815ஆம் ஆண்டு கொண்டு செல்லப்பட்ட தேசிய கொடியை அந்நாட்டில் தேடிப்பெற்ற பெருமை இவருக்கே உரியது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பின்னிணைப்பு 11.2.7.3

செயற்பாட்டுப் பத்திரம்

தேசிய இயக்கத்துடன் தொடர்புடைய நபர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய பத்திரமொன்றைத் தயாரிப்பதே உங்களுக்கு வழங்கப்பட்ட செயற்பாடாகும். தேசிய இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிப் பின்வரும் தலைப்புக்களில் தகவல்களைச் சேகரியுங்கள்.

- உரியவர் பெயர்
- தேசிய இயக்கத்துடன் தொடர்புபட்டுச் செய்த செயல்கள்
- வென்றெடுத்த உரிமைகள்
- சுதந்திரப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு அவர் செய்த சேவைகள்

செயற்பாடு 11.2.8

தேர்ச்சி மட்டம்	:	பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட சமய, கலாசார மறுமலர்ச்சியை விமர்சிப்பார்.
செயற்பாடு	:	பிரித்தானிய ஆட்சியின்போது சமய மறுமலர்ச்சியை இனங் காண்போம்.
நேரம்	:	80 நிமிடங்கள்.
தர உள்ளீடுகள்	:	• பின்னிணைப்பு - 11.2.8.1 • பின்னிணைப்பு - 11.2.8.2 செயற்பத்திரம் • பாடப் புத்தகம் • உரிய வேறு நூல்கள்

கற்றல் - கற்பித்தல் செயற்பாடு

படி.11.2.6.1 :

- பின்னிணைப்பு 11.2.8.1ஐ மாணவர்களுக்குக் காட்சிப் படுத்துங்கள்.
- அதனை அவதானிப்பதற்கு நேரத்தை வழங்குங்கள்.
- அங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் உருவாவதற்கு முன்னோடிகளாக இருந்தவர்கள் யார் என விசாரியுங்கள்.
- மாணவரின் துலங்கல்களைப் பாராட்டிப் பின்வரும் விடயங்கள் வெளிவரக் கூடியவாறு மாணவர்களுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.

> - பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் போது சமய, கலாசார மறுமலர்ச்சிக்காக பௌத்த, இந்து, இஸ்லாம் சமயத் தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள்.
> - சமய, கலாசார மறுமலர்ச்சியின் பெறுபேறாக பிரிவேனாப் பாடசாலைகள், பத்திரிகைகள், சமய மத்திய நிலையங்கள் என்பன உருவாகின.

(10 - நிமிடங்கள்)

படி 11.2.6.2 :

- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்
- பின்னிணைப்பு 11.2.8.2 செயற்பாட்டுப்பத்திரத்தைப் பங்கிட்டுக் கொடுங்கள்
- பாடப்புத்தகத்தைப் பயன்படுத்த அறிவுறுத்தல் கொடுங்கள்
- மாணவர்களை உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்

(30 - நிமிடங்கள்)

படி 11.2.6.3 :

- குழு அறிக்கையை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுங்கள்.
- மாணவர்களுள் திறமைகளையும், பலவீனங்களையும் இனங்காணுங்கள்.
- மாணவர் துலங்கல்களைப் பாராட்டுங்கள்
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துவதுடன் பின்னூட்டலையும் வழங்கி பாடத்தை கலந்துரையாடுங்கள்

- கிறிஸ்தவ மி'னரி சமய அலுவல்களினால் பௌத்த, இந்து, இஸ்லாம் சமயத்தவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது.
- அந்த அச்சுறுத்தல் காரணமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர்கள் தமது சமய இயக்கங்களை ஆரம்பித்தனர்.
- ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்கள் பௌத்த சமய இயக்கத்தை வளர்க்க பல்வேறு வழிவகைகளை மேற் கொண்டார்.
- அவர் பௌத்த பரம விஞ்ஞானார்த்த சங்கம் ஆரம்பித்தார்.
- ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறிப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. வெசாக் பௌர்ணமி தினம் அரசவிடுமுறை தினமாக ஆக்கப்பட்டது.
- பௌத்த பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- அனகாரிக தர்மபால அவர்கள் மகாபோதி சங்கத்தை ஆரம்பித்தார்.
- பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆரம்பிக்கப்பட்ட தனால் சமய எழுச்சி ஏற்பட்டது.
- ஆறுமுக நாவலர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் முதலாவது சைவப் பாடசாலையை ஆரம்பித்தார்.
- பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சைவ பரிபாலன சபை என்னும் நிறுவனத்தை ஏற்படுத்தினார்.
- சித்தி லெப்பை அவர்கள் ஸஹிராக் கல்லூரியை ஆரம்பித்தார்.

(20 - நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பிரித்தானியர் ஆட்சியில் சமய, கலாசார விழிப்புணர்ச்சிக்கு தோள்கொடுத்த உள்நாட்டுத் தலைவர்களைப் பெயரிடுவார்.
- சமய, கலாசார விழிப்புணர்ச்சிக்கு தோள்கொடுத்த உள்நாட்டுத் தலைவர்கள் விலைமதிக்க முடியாத சேவையைச் செய்துள்ளனர் ஏற்றுக்கொள்வார்.
- சமய, கலாசார விழிப்புணர்ச்சிக்கு தோள்கொடுத்த உள்நாட்டுத் தலைவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- குழுக்களுக்குள் ஒத்துழைப்புடன் செயற்பாடுவார்.
- சமூக நல்வாழ்க்கைக்குப் பங்காளியாகும் வகையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வார்.

பின்னிணைப்பு 11.2.8.2.

செயற்பாட்டுப் பத்திரம்

உங்களுக்கு வழங்கப்படுகின்ற செயற்பாடானது பிரித்தானிய ஆட்சியின்போது ஏற்பட்ட "சமய, கலாசார விழிப்புணர்ச்சி" என்ற தலைப்பின் ஊடாக சுவர்ப் பத்திரிகை ஒன்றுக்குப் பொருத்தமான ஒரு கட்டுரை எழுதுவதாகும். கீழே குறிப்பிடப்படுபவர்கள் பற்றியும் அவர்களால் நடைபெற்ற சேவைகள் பற்றியும் கவனத்தைச் செலுத்துங்கள்.

ஹென்றி ஒல்கொட் அவர்களின் சமயப்பணிகள்:

- அவர் பௌத்தரானமை
- பரம விஞ்ஞார்த்த பௌத்த சங்கத்தை உருவாக்கியமை அச்சங்கத்தால் "சரசவி சந்தர் ரெஸ்ஸ" எனும் பத்திரிகையைத் தொடங்கி பௌத்தர்களை ஒன்றுபடுத்தியமை.
- ஞாயிற்றுக்கிழமை தர்ம பாடசாலைகளைத் தொடங்கியமை செச்க் பூரணை தினத்தை விடுமுறை நாளாக்கியமை
- பௌத்த பாடசாலைகளை நிறுவியமை - கண்டி, தர்மராஜா கல்லூரி, கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, காலி மகிந்தா கல்லூரி போன்றவை
    - பெண்களின் கல்விக்காக கொழும்பு விசாகா வித்தியாலயத்தையும், மியூசியஸ் மகளிர் வித்தியாலயத்தையும் ஆரம்பித்தமை
    - அனகாரிக தர்மபாலாவினால் உருவாக்கப்பட்ட மகாபோதி சங்கத்தின் சேவை, டீ.டயிள்யு.ஜெயதிலக அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட பௌத்த இளைஞர் சங்கம் என்பவற்றின் பணிகளைப் போற்றுதல்.

இந்து மத மலர்ச்சி:

- இந்து கலாசாரம், இந்து சமயம் என்பவற்றின் மறுமலச்சிக்காக ஆறுமுக நாவலர், பொன்னம்பலம் அருணாச்சலம் ஆகியோர் பங்காற்றியமை
- யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நகரில் சைவப் பாடசாலை நிறுவப்பட்டமை
- சைவ பரிபாலன சபையை நிறுவி பொன்னம்பலம் இராமநாதன் மேம்படுத்தியமை

11.3 இருபதாம் நூற்றாண்டின் ஆசிய நாடுகளின் எழுச்சி

அறிமுகம் **12 பாடவேளைகள்**

தற்போதைய உலகின் பலம் பொருந்திய மூன்று நாடுகளில் இந்தியா, யப்பான்,மக்கள் சீனக் குடியரசு போன்ற நாடுகள் உலகத்தின் பலம் பொருந்தியதாக வளர்வதற்குக் காரணியாக இருந்த வரலாற்றுப் பின்னணியைக் கற்றுக் கொள்வது இவ்வலகின் நோக்கமாகும். இலங்கை, இப்பலம் பொருந்திய நாடுகளுடன் அரசியல், பொருளாதார மற்றும் கலாசாரம் போன்ற விடயங்களில் நெருங்கிய சம்பந்தம் உடையதாக இருப்பதனால் இந்த நாடுகள் பெற்றுக் கொண்ட வெற்றிகளைப் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளல் முக்கியமானதாகும்.

இந்தியா நூறு மொழிகளுக்கும் அதிகமாக பேசும் கலாசார முறையில் பல்விதமான பிராந்தியங்களாக பிரிந்து சென்ற நாடாக இருப்பதனால் ஒருங்கிணைந்த நாடாக ஒற்றுமைப்படுத்துதல் மிகக் க'டமான காரியமாகும். மஹாபந்மநந்த, சந்திரகுப்தமௌரியன், சமுத்திர குப்த, ஹர்சவர்தனன், அலாவுத்தீன், பல்ஜி, அக்பர் போன்ற அரசர்கள் இந்தியாவை ஒற்றை ஆட்சியின் கீழ் நடத்துவதற்கு முயற்சித்த போதும் முழு இந்தியாவையும் ஒற்றுமைப்படுத்த அந்த அரசர்கள் எவருக்கும் முடியவில்லை. இந்தியாவில் முழுமையாக ஒற்றையாட்சி முறையை ஏற்படுத்துவதற்குப் பிரித்தானியர்களினால் மாத்திரம் தான் முடிந்தது. இருந்த போதும் இந்த முயற்சி அவ்வளவு வெற்றியளிக்கவில்லை. அரசியற் சுதந்திரம் அடைந்தவுடன் இந்தியா சம்'டி ஆட்சியாக மாறியது.

யப்பானில் பழங்காலந் தொட்டு அரசாட்சி நடைபெற்றது தொகுகாவா, சோகுன் பரம்பரை காலத்தில் ஒருமுறை உலகிற்கு திறந்த கொள்ளையை பின்பற்றிய போதும் மேற்குக் கலாசாரத்தாக்கம் ஏற்பட்ட இடத்தில் இருந்து உலகத்திற்கு மூடிய ஒரு கொள்கையாக மாற்றம் அடைந்தது. திறந்த மற்றும் மூடிய கொள்கையைப் பின்பற்றிய போதிலும் தொகுகாவா சோகுன் காலத்தில் யப்பானின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. அப்படியாக இருந்தபோதிலும் யப்பான் அடைந்த வெற்றி வேகமாக முன்னேறிச செல்லும் உலகத்துடன் ஒப்பிடும் போது போதுமானதாக இருக்கவில்லை. இதனால் ''மெயிஜ்'' மறுசீரமைப்பு யப்பான் திரும்பவும் திரும்பவும் மேற்குஉலகக் கொள்கைக்கு திறந்து விடப்பட்டது. மெயிஜ் மறுசீரமைப்புக் காலத்தில் யப்பான் பொருளாதாரம் ஆச்சரியப்படக்கூடிய விதத்தில் வளர்ச்சியடைந்ததுடன் இரண்டாம் உலக யுத்தகாலத்தில் யப்பான் மேற்குலகின் பலம் பொருந்திய நாடுகளுடன் சமநிலை அடைந்திருந்தது: இரண்டாம் உலக மகாயுத்தம் யப்பானுக்குப் பெரும் அழிவை ஏற்படுத்திய போதும் யுத்தத்திற்குப் பிறகு சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவை போல யப்பான் நவீன உலகத்தின் மிகப் பலம் பொருந்திய நாடாக உருவாகியது. யப்பான் இன்று சனநாயகப் பாராளுமன்ற அரசியல் முறை நடைபெறும் நாடாகும். ஆதிகால அரசாட்சிமுறை நிலவிய போதும் அவ்வதிகாரப்பதவி பெயரளவில் மாத்திரம் இன்றும் நிலவுகின்றது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

4000 வருடங்களுக்கு வரலாற்றுப் பரம்பல் உடைய சீனாவின் வரலாறு, மற்றைய நாடுகளை விட வித்தியாசமானதாகும். கி.மு. 2000ம் ஆண்டுகளில் இருந்து சீனாவில் ஆட்சி அரச பரம்பரை ஆட்சி நடைபெற்றது. பலம் பொருந்திய அரசர்களின் ஆட்சிக்காலத்தில் சீனாவிலும் சீனாவிற்கு வெளிப் பிரதேசங்களிலும் சீன சர்வாதிகார ஆட்சி பரவி இருந்ததோடு சர்வாதிகாரியைச் சுற்றி முழு அதிகாரமும் இருந்தது. பலவீனமான சர்வாதிகாரிகளின் காலத்தில் பிரதேச ஆட்சியாளர்கள் சுதந்திரமாக இயங்கினர். மஞ்சு பரம்பரை சீனாவின் கடைசி அரச பரம்பரையாக இருந்ததோடு அதன்பிறகு மேற்கு உலகின் தாக்கம் சீனாவில் ஏற்பட்டது. அப்படி இருந்தபோதும் சீனா ஒருநாளும் மேற்கு உலக நாடுகளின் அடிமையாகவில்லை. மாஓ.சேதுங்கின் கீழ் உருவாகிய பொதுவுடைமைக் கட்சி 1949ஆம் ஆண்டு மக்கள் சீனக் குடியரசை உருவாக்கியது.

இந்தியா, யப்பான், சீனா ஆகிய நாடுகள் வரலாற்று ரீதியாக அடைந்த பெறுபேறுகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்த போதிலும் இந்த நாடுகள் இன்று ஆசியாவின் பொருளாதாரத்தில் மிக முக்கிய வெற்றியடைந்த நாடுகளாக விளங்குகின்றன.

தேர்ச்சி : இருபதாம் நூற்றாண்டில் ஆசியா நாடுகள் எழுச்சியுற்ற விதத்தை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்.

தேர்ச்சி மட்டம் :

- தமது நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக இந்தியர்கள் எடுத்துக்காட்டாகச் செயற்பட்ட விதத்தை முன்மாதிரியாக மதித்துப் பேசுவார்.
- யப்பான் உலகின் பலம் வாய்ந்த நாடாக வளர்ச்சியடைந்த விதத்தை விவரிப்பார்.
- திட்டமிட்டமிடலுக்கு அமைவாகச் செயற்பட்டு சீனா எழுச்சியடைந்த விதத்தை விவரிப்பார்.

பாட உள்ளடக்கம்

11.3. இருபதாம் நூற்றாண்டின் ஆசிய நாடுகளின் வளர்ச்சி

11.3.1 இந்தியா.

- தேசியஇயக்கம் ஆரம்பம்; 1857 கிளர்ச்சி
- இக்காலத்திற்கு முன்பாகள் 1806,1844,1849,1850,1852 ஆகிய ஆண்டுகளிற் கிளர்ச்சிகள் ஏற்பட்டன.
- 1857ஆம் ஆண்டின் சிப்பாய்க் கலகத்திற்கான காரணிகள் யுத்த மய, அரசியல், மத மற்றும் சமூகக் காரணிகள் ஆகியவையாகும்.
- கிளர்ச்சித் தலைவர்கள் - நானா சாஹிப், காந்தியா கோபி, லட்சுமி பாய் ஆவர்.
- கிளர்ச்சியின் தோல்விக்கான காரணிகள்
- கிளர்ச்சியின் விளைவுகள்: வர்த்தகக் கம்பனியின் கீழ் இயங்கிய எல்லா இந்திய பிரதேசங்களும் முடியின் கீழ் வருதல் (1858ஆம் ஆண்டுச் சட்டம்)
- தேசிய உணர்ச்சியின் வளர்ச்சியும் அதற்கான காரணமும்
- தீவிரவாதம் வளர்ச்சியடைதல், பாலகங்காதர திலகர், ஜாலியன் வாலா பாக் எனுமிடத்தில் நடைபெற்ற படுகொலை.
- தீவிரவாதிகளுக்கும், நடுநிலைவாதிகளுக்கும் இடையிலான இணக்கப்பாடு.

மகாத்மா காந்தி

- தென்னாபிரிக்காவிற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை
- நடுத்தர வாதிகள் பெற்ற வெற்றி (சத்தியாக் கிரகங்கள் மூலம்)
- அணுகுண்டின் பயங்கர விளைவுகளால் எதிர்காலத்தில் பிறந்த பரம்பரைக்கு பாதகமான தாக்கங்கள் ஏற்பட்டமை.

- ஜெர்மனியை கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி என இரண்டாக்கியமை.

- இதுவரையும் உலக வல்லரசுகளென விளங்கிய இங்கிலாந்தும் பிரான்சும் தமது நிலையை இழந்தமை.

- இரண்டாம் உலக மகாயுத்தத்தின் இறுதியில் ஐக்கிய அமெரிக்க அரசுகளும் ருீயாவும் உலகின் தலையாய வல்லரசுகளாக எழுச்சியடைந்தமை.

- ஐக்கிய அமெரிக்க அரசுகள் சனநாயகவாதத்தைப் பாதுகாப்பதாக முன்வந்தமை.

- அதனைப் பின்பற்றி பிரித்தானியா, பிரான்சு பெல்ஜியம் ஒல்லாந்து மேற்கு ஜெர்மனி ஆகிய முதலாளித்துவ பொருளாதார நாடுகள் சனநாயகவாத அதிகார முகாமாக ஒழுங்குபடுத்தப்பட்டமை.

- சோவியத் ருீயாவை அடிப்படையாகக் கொண்டு ஐரோப்பாவில் பொதுவுடமைவாத முகாம் தோன்றியமை.

- போலந்து செக்கஸ்லோவேக்கியா, பல்கேரியா, யூகோஸ்லேவியா கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் இம்முகாமுக்கு உரித்தானமை

- பிரித்தானியா, பிரான்சு மற்றும் ஏனைய நாடுகளுக்கு உரியனவாயிருந்த குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெற்றமை.

- இதனால் பிரித்தானியா, பிரான்சு போன்ற நாடுகளின் பொருளாதார நிலைமை தளர்வுற்றமை.

- ஐரோப்பாவின் குடியேற்ற ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடைந்து கீழைத்தேய நாடுகளில் இனபேதங்கள் எழுச்சியடைந்தமை.

- மத்திய கிழக்கு பிரதேசங்களில் எகிப்து, சிரியா, லெபனான், ஈராக் ஜோர்தான் ஆகிய உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கும், பாதுகாப்பு, மனித உரிமைகள், நீதி நியாயம் சுதந்திரம் என்பவற்றைப் பேணுவதற்கும் நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகள் தாபனம் உருவாக்கப்பட்டமை.

- போரினால் அழிவுற்ற தோல்வியடைந்த நாடுகளின் வளர்ச்சிக்கு ஐக்கிய அமெரிக்க அரசுகள் மாஸ'ல் திட்டத்தை அறிமுகஞ் செய்தமை

- இங்கு மேற்கு ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் மீது விசேட கவனஞ் செலுத்தப்பட்டமை.

(40 நிமிடங்கள்)

கணிப்பீடும் மதிப்பீடும்

- இரண்டாம் உலகப் போருக்கான காரணங்களை விவரிப்பார்.
- இரண்டாம் உலகப் போர் தொடர்பான பல்வேறு மூலாதாரங்களிலிருந்து தகவல்கள் திரட்டி தொடர்பாடல் ஆற்றலை விருத்தி செய்வார்.
- ஹிட்லரின் செயற்பாடுகள் உலகப் போருக்கு காரணமானதொன்பதற்கான தாம் தேடியறிந்த விடயங்களை வகுப்பறையில் ஏனைய மாணவர்களுக்கு முன்வைப்பார்.
- ஐக்கிய நாடுகள் தாபனம் நாடுகளின் சமாதானத்தைப் பேணுவதற்கு எடுத்த நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வார். தேவையான சந்தர்ப்பங்களில் தாமாகவே முன்வந்து செயற்படுவார்.
- ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படும் ஆற்றலை விருத்தி செய்வார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பின் தொடர் வேலை

- உலகப் படத்தில் அச்சு அணிகளுக்கு உரிய நாடுகள் நேச அணிகளுக்கு உரிய நாடுகள் என்பவற்றைக் குறித்துப் பெயரிடுக.
- மூலாதாரங்களைக் கொண்டு தகவல்களைத் திரட்டி சுவர்ப் பத்திரிகைக்கு கடிதம் ஒன்று தயாரிக்குக.

இணைப்பு இல 11.4.2.1

ஹிட்லரும் முசோலினியும்

இணைப்பு இல 11.4.2.2



முதலாம் உலகப் போரின் பின்னர் ஐரோப்பா

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு இல 11.4.2.3

செயற்பாட்டுப் படிவம்

பாடப் புத்தகம் மற்றும் இரண்டாம் உலக யுத்தம் தொடர்பான நூல்களைப் பயன்படுத்தி கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்க.

இரண்டாம் உலகப் போரில் பங்குபற்றிய நாடுகள்	இரண்டாம் உலகப் போருக்கான காரணங்கள்	ஒவ்வொரு நாடும் பெற்ற வெற்றிகள்	இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்

11.5

உலக வலுச்சமநிலை - இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் (12 பாடவேளைகள்)

அறிமுகம்

இரண்டாம் உலகமகாயுத்தத்தின்பின் ஐரோப்பாவில் அதுவரை பலம்வாய்ந்து காணப்பட்ட பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகள் பின்னணிக்குத் தள்ளப்பட்டு, ஐக்கிய அமெரிக்கா சோவியத் ருசியா ஆகிய இரு நாடுகளின் தலைமையில் உலகம் இரு பிரிவுகளாகப் பிளவுண்டது. ஐக்கிய அமெரிக்கா, ஜனநாயக அரசியல் பாணியையும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பையும் பின்பற்றியதுடன் பிரான்சு, இங்கிலாந்து, மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகள் ஐக்கிய அமெரிக்கா தலைமை தாங்கிய பிரிவில் சேர்ந்து கொண்டன. பொதுவுடைமைவாத அரசியல் பொருளாதார பாணியைப் பின்பற்றிய சோவியத் ரூயா தலைமைத்துவம் தாங்கிய பிரிவில் போலந்து, கிழக்கு ஜேர்மனி, செக்கோஸ்லோவாக்கியா, யூகோஸ்லாவியா, கியுபா போன்ற நாடுகள் ஒன்று சேர்ந்தன.

20ம் நூற்றாண்டின் இரண்டாம் அரைவாசிப்பகுதியில் முதலிலிருந்து இறுதிவரை முக்கிய முகாம்களுக்கிடையிலான கொள்கைப் பூசல்களும் அதிகாரத்துக்கான போராட்டங்களும் பனிப்போராக மாறின. அதாவது ஆயுத மோதல் வரம்புக்குக் கொண்டுவரப்பட்டு மூன்று தசாப்தங்களுக்கு இடம்பெற்ற இப்போராட்டம் சோவியத் நாட்டின் வீழ்ச்சியுடன் முற்றுப்பெற்றது. ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் நாடும் உலக வல்லரசுகளாக முன்னேற்றமடைந்து வந்த விதத்தையும் அவையிரண்டுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களும் இறுதியில் சோவியத் ருசியா வீழ்ச்சியடைந்த விதமும் பற்றிய தகவல்களை பகுப்பாய்வு செய்தலும் இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அதிகார முகாம்களின் எழுச்சி, வளர்ச்சி மற்றும் வீழ்ச்சி என்பன இலங்கை வரலாற்றிலும் தாக்கஞ் செலுத்தியுள்ளமையினால் அந்த அதிகார முகாம்கள் பற்றிய கற்கையானது இலங்கையின் வரலாறு வடிவமைக்கப்பட்ட விதத்தைப் பற்றித் தேடியறிய இலகுவாக அமையும்.

அலகு: 11.5

தேர்ச்சி : இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் உலக வலுச் சமநிலைக்காக பிரதான வல்லரசுகள் இரண்டும் அனுசரித்த கொள்கைகள், செயற்பாடுகள் ஒப்பீட்டு ரீதியாக விமர்சிப்பார்.

தேர்ச்சி மட்டம்:
- ஐக்கிய அமெரிக்காவும் சோவியத்ஒன்றியமும் உலக வல்லரசுகளாக எழுச்சியடைந்த விதத்தை விளக்குவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பொதுவுடமைவாத முகாம் இருபதாம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்ததற்கான காரணங்களைத் தேடியறிவார்.

- ஐக்கிய நாடுகள் தாபனத்தின் செயற்பாடு ஆயுதப் போர்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாய் அமைந்த விதத்தை விமர்சிப்பார்.

பாட உள்ளடக்கம்:

11.5. உலக வலுச் சமநிலை - இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர்

11.5.1. ஐக்கிய அமெரிக்கா உலக வல்லரசாக எழுச்சி பெறல்

- எழுச்சி பெற்ற விதம்

- மூன்று நூற்றாண்டு காலமளவான ஐக்கிய அமெரிக்க அரசின் வரலாற்றில், அந்நாடு வெளிநாட்டு நடவடிக்கைகளில் பங்கு பற்றியது 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்துடனாகும்.

- 20ம் நூற்றான்டிண் ஆரம்பத்துடன் உலக நடவடிக்கைகள் ஐரோப்பிய நாடுகளைத் தலைமையாகக் கொண்டே (ஐரோப்பாவைக் கேந்திரமாக) இடம் பெற்றன.

- முதலாம் உலக மகா யுத்தத்திலும் பிரிட்டன், பிரான்சு போன்ற ஐரோப்பாவின் முன்னணி நாடுகள் அடங்கிய நேச நாடுகளுடன் ஐக்கிய அமெரிக்கா இணைந்து கொண்டமை.

- முதலாம் உலக மகா யுத்தத்தில் நேச நாடுகளின் பிரிவு வெற்றி கொண்டதும் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேசத் தோற்றம் மேலும் வெளிப்பட்டது.

- முதலாம் உலக மகா யுத்தத்தின் பின் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட சர்வதேச சங்கம் எனப்படும் சர்வதேச அமைப்பைக் கட்டியெழுப்புவதற்கான யோசனையையும் திட்டத்தையும் முன்வைத்ததும் ஐக்கிய அமெரிக்கா சம்பந்தப்படுதல் தொடர்பாக செனட்சபையின் எதிர்ப்பு காரணமாக அந்நாடு சர்வதேச சங்கத்தில் இணையவில்லை.

- சர்வதேச சங்கத்தின் தோல்வியுடன் இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பமாகியது. அங்கு ஜெர்மனி, இத்தாலி, யப்பான் அடங்கிய அச்சு நாடுகளின் பலமான எழுச்சியை அடக்குவதற்காக, ஐக்கிய அமெரிக்கா, 1945ல் யப்பானில் ஹிரோஷிமா, நாகசாகி முதலிய நகரங்களுக்கு அணுகுண்டைப் போட்டதுடன் முடியுமாக இருந்தது.

- அத்துடன் ஐக்கிய அமெரிக்கா சர்வதேச ரீதியில் முன்னணி நிலைக்கு வந்தது.

- அவ்வாறே 1945யூன் மாதம் சான்பிரான்சிஸ்கோ நகரில் ஐந்து நாடுகளைக் கொண்ட மகாநாட்டில் ஐக்கிய நாடுகள் சாசனம் தயாரிக்கப்பட்டது. அதில் ஐக்கிய அமெரிக்காவினால் மிகவும் தீர்மானமிக்க பணி நிறைவேற்றப்பட்டது.

- 1945 ஒக்டோபர் 24ந் திகதியிலிருந்து ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சாசனம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதில் பிரான்சு, பிரிட்டன், ருசியா, சீனா, ஐக்கிய அமெரிக்கா எனும் நாடுகளுக்கு நிரந்தரப் பிரதிநிதித்துவம் கிடைத்தது. இந்நாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினுள் இரத்து அதிகாரம் (வீட்டோ) கொண்ட ஐந்து வல்லரசு நாடுகளாக மாறின. இங்கு ருசியா தலைமையிலான பொதுவுடமைவாத இயக்கத்தின் தொழிற்பாடுகளை மட்டுப்படுத்துவதில் ஐக்கிய அமெரிக்கா தலைமை தாங்கியது.

- நட்சத்திர யுத்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பொதுவுடமைவாத முகாம்களுக்குப் பலம்வாய்ந்த அச்சுறுத்தலை விடுப்பதற்கு இயலுமான நிலைமைக்கு ஆளாகியது.

- எண்பதாம் தசாப்தங்களில் ருசியாவில் நிகழ்ந்த கிளாஸ்நோஸ்ட், பெரெஸ்த்ரோய்கா மறுசீரமைப்புகளின் பின் சோவியத் நாடு வீழ்ச்சியடைந்ததும் ஐக்கிய அமெரிக்கா உலக நடவடிக்கைகளில் பலம் வாய்ந்த வல்லரசாக மாறியமை.

- ஐக்கிய அமெரிக்கா முதலாளித்துவ முகாமின் தலைமைத்துவத்தை அடைதல்.

- முதலாம் உலக மகாயுத்தத்தின் பின் உலக வல்லரசின் நிலைக்கு வந்துகொண்டிருந்த ஐக்கிய அமெரிக்கா 1917ல் தோன்றிய சோவியத் ருசியாவின் மீது கடும் எதிர்ப்பைக் காட்டியது.

- 1917ன் அக்டோபர் புரட்சியுடன் பொது உடமைவாத சோவியத் ருசியா தோற்றம் பெற்றது. அன்று தொட்டு பொது உடமைவாத முகாமுக்குச் சார்பான நாடுகளை உருவாக்குவதற்கு ஆவன செய்யப்பட்டது. அங்கு சீனா, கியூபா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொது உடமைவாத முகாமின்பாற்பட்டன.

- சோவியத்நாடு, ஐக்கிய நாட்டு பாதுகாப்புச்சபையின் உறுப்பினர் என்ற வகையில் பொது உடமைவாத முகாமிலிருந்த நாடுகளுக்கு எதிராக விடுக்கப்பட்ட பாதகமான பிரரேரணைகளின் போது இரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி சோவியத் முகாமை வலுப்படுத்திக் கொள்வதற்கு முன்வந்தது.

- முதலாளித்துவ முகாமுக்குத் தலைமை தாங்கிய ஐக்கிய அமெரிக்கா பொது உடமைவாத முகாமுக்கு எதிராகச் செயற்பட்டது. பொது உடமைவாத முகாம், பொது உடமைவாதப் பொருளாதாரத்தை கம்யூனிச ஆட்சியைப் பரவலாக்குவதற்கு முயன்றதுடன் முதலாளித்துவ முகாம், முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையையும், ஜனநாயக ஆட்சிமுறையையும் பரவலாக்குவதற்கு முயற்சி செய்துள்ளன.

- ஐக்கிய அமெரிக்கா, முதலாளித்துவ அணியின் தலைவனாக, முதலாளித்துவ அணியை வலுவடையச் செய்வதற்காக 1949இல் ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் வட அத்லாந்திக் ஒப்பந்த அமைப்பை (NATO) அமைத்துக் கொண்டமை.

- 'நேட்டோ' அமைப்பில் போர்த்துக்கல், இத்தாலி, மேற்கு ஜேர்மனி, கிரேக்கம், நெதர்லாந்து அடங்கிய 16 நாடுகள் இருந்ததுடன், அவற்றுக்கு எதிராக வட அமெரிக்காவில் வட அமெரிக்காவில் அல்லது ஐரோப்பாவில் ஆயுதமோதல் ஏதும் ஏற்படின் அது அனைத்து நாடுகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் எனக் கொள்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருத்தல்.

- முதலாளித்துவ நாடுகளுக்கு உதவியாக ஐக்கிய அமெரிக்கா இருந்தது. எடுத்துக்காட்டாக 1948இல் வட,தென் கொரியாக்கள் என்றவாறாக கொரியா இரு பாகங்களாகப் பிளவுண்டதும் முதலாளித்துவ முறையின் சார்பாக ஈர்க்கப்பட்ட பிரிவை ஐக்கிய அமெரிக்கா எடுத்துக் கொண்டது. 1948இல் பேர்லின் பிளவுண்டதும் அங்கும் ஐக்கிய அமெரிக்கா முதலாளித்துவத்துக்குச் சார்பான மேற்கு ஜேர்மனி பக்கம் நின்றது.

- பொது உடமைவாத அரசுகளை வீழ்த்துவதற்கு ஐக்கிய அமெரிக்கா நடவடிக்கைகள் எடுத்துள்ளது. எடுத்துக் காட்டாக கியூபாவின் புரட்சியின்போது அங்கிருந்து தப்பிச் சென்ற நாடு கடத்தப்பட்ட கியூபா நாட்டவரைக் கொண்ட இராணுவத்தை ஐக்கிய அமெரிக்கா பயிற்றுவித்து கட்டியெழுப்பியது. அந்த இராணுவம் 1969இல் பிடெல் காஸ்ரோவின் இராணுவத்துக்கு எதிராகச் சமர் செய்தனர் கியூபாவுக்கு சோவியத் நாட்டின் உதவி கிடைத்தமை யினால் ஐக்கிய அமெரிக்கா அங்கு தோல்வியைத் தழுவியது.

- ஜனநாயகத்துக்கு எதிராகச் செயற்பட்டது என்ற குற்றச்சாட்டின் பேரில் மியன்மார் (பர்மா) இராணுவ அரசின் மீது ஐக்கிய அமெரிக்காவுக்கு அந்தளவுக்கு விருப்பம் இல்லாத போதும் முதலாளித்துவத்தில் நாட்டம் கொண்ட பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளருக்கு உதவி வழங்குகிறது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இவ்வாறாக முதலாளித்துவம் மற்றும் ஜனநாயகம் என்பவற்றை பிரசித்தப்படுத்தும் தலைமைத்துவம் உலக வல்லரசாகக் கருதப்படும் ஐக்கிய அமெரிக்காவுக்கு கிட்டியுள்ளது.

  நேட்டோ தாபனத்துக்கு உரிய நாடுகளையும் வார்சோ அமைப்பைச் சேர்ந்த நாடுகளையும் காட்டும் படம்

11.5.2 சோவியத் ஒன்றியம் உலக வல்லரசாக எழுச்சிபெறல்

அறிமுகம்: இரண்டாம் உலக மகாயத்தத்தின் பின் சோவியத் ருசியாவின் தலைமையில் கமியூனிச நாடுகளிடையே ஒன்றியம் உருவாதல்

காரணங்கள்:

- திறமை வாய்ந்த ஆட்சியாளர் தோன்றியமை
- யோசப் ஸ்டாலின், நிகிதா குருசேவ் போன்ற வினைத்திறன் மிக்க ஆட்சியாளர் அதிகாரத்துக்கு வந்தமை.
- யோசப் ஸ்டாலினின் தலைமையில் அரச நிருவாகம் தளர்த்தப்படக் கூடாது என நம்பியமை.
- பொது உடமைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியமை.

- இரண்டாம் உலக மகாயுத்தத்துக்கு முன் இருந்த நிலைமைக்கு ருசியாவைக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்தமை

- ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தை ஏற்படுத்தியமை.

- சோவியத் ருசியாவில் நான்காம் ஐந்தாண்டுத்திட்டம் 1946இல் ஆரம்பமாதல்.

- 1953 இல் அதிகாரத்துக்கு வந்த குருசேவ் மிகவும் வினைத்திறன் மிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக பிராந்திய பொருளாதார அமைப்புக்களை நிறுவியமை.

- ருசிய மக்கள் வாழ்க்கையை மேம்படச்செய்ய நடவடிக்கை எடுத்தமை.

- விஞ்ஞான தொழில்நுட்பத்துறையை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை.

- இதன் விளைவாக 1961இல் ர்'யரான யூரி ககாரின் முதன்முதலாக விண்வெளியில் பயணித்தமை.

- பொதுவுடமைவாத முகாமின் தலைமைத்துவத்தை அடைந்தமை.

- சோவியத் ருசியாவின் வழிகாட்டலில், கிழக்கு ஜேர்மனி, பல்கேரியா, செக்கொஸ்லவாக்கியா, ஹங்கேரி, போலந்து, யூகொஸ்லாவியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொதுவுடமைவாத பொருளாதார அமைப்பை அனுசரித்தமை.

- கம்யூனிச மேலாதிக்கத்துக்கு எதிராக ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட 'நேட்டோ' அமைப்புக்குப் பதிலடியாக கமியூனிச ருசியா, கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்த்து 1955இல் வார்சோ ஒப்பந்தத்தை ஏற்படுத்தியமை

- 1949இல் சீனப்புரட்சியில் பொது உடமைச்சித்தாந்தம் வெற்றியடைந்ததால் பொது உடமைவாதத் தரப்பு பலமடைந்தமை

- சீனா, கொரியா, ஹங்கேரி, போலந்து, பல்கேரியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய கமியூனிச நாடுகளின் தலைமைத்துவம் சோவியத் ருசியாவுக்குக் கிட்டியமை

- இந்நாடுகளிடையே பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் ஒன்றிணைப்பொன்றைக் காணக் கூடியதாக இருந்தமை.

11.5.3 பனிப்போர்

- ஐக்கிய நாடுகள் தாபனத்தின் செயற்பாட்டினால் ஆயுத மோதலுக்கான வாய்பில்லாமை

- ஐ.நா.தாபனத்தின் முக்கிய குறிக்கோள் சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பை பேணுதலும் அதற்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தவிர்த்தலும், நாடுகளின் சுதந்திரத்தை மதித்தலும், நல்லெண்ண அபிவிருத்தி மற்றும் உலக சமாதானத்தை உறுதிசெய்தலும் பொருளாதார, சமூக, கலாசார அல்லது மனிதம் தொடர்பான சர்வதேச பிரச்சினைகளைத் தீர்ப்பதாகும்.

- இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவையும் சோவியத் ர'யாவையும் தலைமையாகக் கொண்டு முதலாளித்துவ மற்றும் பொதுவுடமைவாதத் தரப்பாரின் முகாம்களின் அதிகாரத்தைப் பரவலாக்கும்போது ஏற்படவிருந்த மோதல்கள் ஐ.நா. தாபனத்தின் தலையீட்டினால் தீர்க்கப்பட்டன.

எடுத்துக்காட்டு

- 1962ல் சோவியத் ருசியாவினால் ஐக்கிய அமெரிக்காவுக்கெதிராக கியூபாவில் எறிகணைகள் நிலைப்படுத்தப்பட்டன. அதற்குப் பதிலடியாக ஐக்கிய அமெரிக்கா ருசியாவுக்குகெதிராக எறிகணைகளை துருக்கியில் நிலைப்படுத்தியது. ஐ.நா. தாபனத்தின் செயலாளர் நாயகம் அமெரிக்க சனாதிபதி ஜோன் கெனடியுடனும், ருசியத் தலைவரான குருசேவுடனும் கலந்துரையாடிப் பிரச்சினைகளைத் தீர்த்தமை.

- எகிப்தின் முன்னாள் சனாதிபதி கமால் அப்துல் நாசரினால் 1956இல் சுயஸ் கால்வாய் தேசிய மயமாக்கப்பட்டது. இதனால் அசௌகரியத்துக்குள்ளான பிரிட்டனும் பிரான்சும் இஸ்ரேலுடன் சேர்ந்து யுத்த பிரகடனம் செய்தன. இங்கு எகிப்துக்கும் அந்நாடுகளுக்குமிடையே ஏற்படவிருந்த ஆயுத மோதல் ஐ.நா. தாபனத்தின் சமாதானப் படை அனுப்பப்பட்டதால் தவிர்க்கப்பட்டது.

- மேலும் ஐ.நா. தாபனத்தின் ஆயுதக் கட்டுப்பாட்டு மற்றும் ஆயுதக்களைப்பு ஒப்பந்தங்களினால் அந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதற்கு இருந்த வாய்ப்புக்கள் தவிர்க்கப்பட்டன. அதன் மூலம் ஆயுத மோதல்கள் தடுக்கப்பட்டன.

எடுத்துக்காட்டு: 1959இல் கைச் சாத்திடப்பட்ட அண்டாக்டிக் ஒப்பந்தத்தின் மூலம் அணு ஆயுத நடவடிக்கைகளுக்காக அண்டாக்டிக்காவை பயன்படுத்தாமலிருப்பதற்கு வல்லரசுகளை இணங்கச் செய்தமை.

- 1963இல் கைச்சாத்திடப்பட்ட விண்வெளியில் நிலத்தின் மேற்பரப்பில் அல்லது நிலத்தின் கீழ் அல்லது வளிமண்டலத்தில் அணு ஆயுதங்களை வைத்துக் கொள்ளுதலை இணக்கப்பாட்டின் மூலம் அந்த ஆயுதப் பரிகரணம் தடை செய்யப்பட்டது.

- 1974இல் ஸோல்ட் I, II ஒப்பந்தங்களின் மூலம் ஆயுதப் பரிகரணம் மட்டுப்படுத்தப்பட்டது.
  (Strategic Arms Linitation Talk - மூலோபாய ஆயுதங்களை மட்டுப்படுத்தும் பேச்சுவார்த்தை)

உலக பொருளாதார பரிபாலனம்:

- சோவியத் ருசியாவானது பொதுவுடைமைவாத பொருளாதாரக் கொள்கையையும் கமியூனிச ஆட்சி முறையையும் பரவலாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தது. அங்கு ருசிய அரசதொழில் முயற்சியாண்மையை முன்னெடுத்து மூடிய பொருளாதார முறையைச் செயற்படுத்தியது. அரசதுறை ஏக உற்பத்தியாளராகச் செயற்பட்டதால் போட்டி உற்பத்தி அல்லது விலை குறித்தலில் போட்டியின்மை

- 1950ம் தசாப்தங்களில் உலகின் அநேகமான அரசுகள் பொது உடைமைவாத பொருளாதாரக் கொள்கையை மதித்தவாறு அரச தொழில் முயற்சிகளை ஏற்படுத்தின. இதற்கென ருசியா, அதற்குரிய தொழில்நுட்ப உதவியை அவ்வந்த நாடுகளுக்கு வழங்கியது.

எடுத்துக்காட்டு: இலங்கைக்கு ரயர், ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம், ஒருவல உருக்குக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்கள் ருசியாவினால் வழங்கப்பட்டன.

பொதுவுடைமைவாதத்தைப் பரவலாக்கும் போது ருசியாவுக்குப் புறம்பாக கிழக்கு ஜேர்மனி, சீனா போன்ற நாடுகளும் அவ்வாறான உதவிகளை மூன்றாம் உலக நாடுகளுக்கும் வழங்கின.

எடுத்துக்காட்டு சீனாவிலிருந்து வேயங்கொட துணித் தொழிற்சாலையும் கிழக்கு ஜேர்மனி யிலிருந்து இலங்கைக்கு துல்கிரிய துணித் தொழிற்சாலையும் வழங்கப்பட்டன.

1950 தசாப்தங்களில் உலகின் அனேகமான நாடுகள் முதலாளித்துவ தனியார் தொழிமுயற்சியாண்மைக்கான வசதி வாய்ப்புக்களைக் குறைத்தன. பெரும்பாலான தனியார்துறை நிறுவனங்கள் தேசிய மயமாக்கப்பட்டன.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

எடுத்துக்காட்டு பிரித்தானிய பிரான்சிய கம்பனிகள் வசமிருந்த சுயஸ் கால்வாய் 1956இல் எகிப்திய அதிபர் நாசரினால் தேசிய மயமாக்கப்பட்டது. இலங்கை போன்ற சிறிய நாடுகள் கூட எரிபொருள், எரிவாயு துறைமுகம் பேரூந்து போன்றவற்றை தேசிய மயமாக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தன.

பொதுவுடைமை வாத முகாம்களில் ஏற்பட்ட சீரழிவுடன் கொமியனூசிய கட்சிகளும் பொதுவுடைமைவாத பொருளாதாரமும் 1980 தசாப்பங்களிலிருந்து சிதறிப்போயின.

மறுபுறமாக ஐக்கிய அமெரிக்கா ஜனநாயக கட்சி முறையும் முதலாளித்துவ பொருளாதாரத்தையும் பரவலாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தது.

அங்கு சர்வதேச நாணயநிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் நிதிநிறுவனங்களின் ஊடே நீண்டகாலக் கடன்களை வறிய நாடுகளுக்கு வழங்கி தனியார் துறையை ஊக்குவித்தல் போன்ற நிபந்தனைகளையும் விதித்தன.

மேலும் அமெரிக்க மற்றும் முதலாளித்துவ முகாம்களின் கம்பனிகள் நீண்ட காலமாக ஏகாதிபத்தியத்தைப் பேணியவாறு வறிய நாடுகளில் தமது கைத்தொழில்களைக் கொண்டு செல்கின்றன.

எடுத்துக்காட்டாக பிரிமா மா ஆலை நீண்டகால தனியுரிமையைக் கொண்டு செல்கின்றது.

முழுமையாக முதலாளித்துவத்துக்கோ, பொதுவுடமை வாதத்துக்கோ செல்ல விரும்பாத கலப்புப் பொருளாதாரத்தை அனுசரிப்பதற்கு உந்தப்பட்டாலும் 1980களின் பின் (ருசியாவின் வீழ்ச்சியின் பின்) ஐக்கிய அமெரிக்காவினதும் முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையைச் செயற்படுத்தும், நிறுவனங்களினதும் நிபந்தனைகளுக்கு இணங்குவதற்கு அனேக நாடுகளுக்கு நேரிட்டது.

மேற்குலக நாடுகளின் இக்கொள்கை காரணமாக வறிய நாடுகள் பொருளாதார ரீதியாக பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இதனால் நிதி உதவிகளில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. நிதியுதவி வழங்கும் நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்குமிடையே அடிக்கடி கலந்துரையாடல் நடைபெறுகின்றன.

சோவியத் ருசியாவின் வீழ்ச்சி:

- 1980 தசாப்தங்களின் இறுதி அரைப்பாகத்தில் ருசியாவின் அப்போதைய அதிபர் மிகாயில் கொர்பசோவினால் அறிமுகஞ் செய்யப்பட்ட கிளாஸ்நோஸ்ட், பெரெஸ்த்ரோய்கா எனும் பொருளாதார மறுசீரமைப்புக்கள் பொரிஸ் யெல்ஸ்டினால் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டன.

- இதன் விளைவாக ருசியாவினுள் பொருளாதார மறுசீரமைப்பு தொழிற்பட்டு பொருளாதார சுதந்திரம் கிடைத்ததாகக் கூறப்படுகிறது.

- சுதந்திர பொருளாதார கொள்கையைப் பின்பற்றியதால் பொது வுடமைவாத பொருளாதாரக் கொள்கைகள் அகன்றன.

- அத்துடன் பொதுவுடைமைவாத சோவியத் ஒன்றியம் (சோவியத்நாடு) வீழ்ச்சியுற்றது. சோவியத்து ஒன்றியத்துக்குள் இருந்த கஸகாஸ்தான், உக்ரேன், உஸ்பகிஸ்தான், பெலோருசியா, லிதுவேனியா போன்ற பிரதேச அரசுகள் சுதந்திரமடைந்தன.

- உலகில் நிலவிய வல்லரசு முகாம்கள் இரண்டின் அதிகாரப் போட்டியும் (பனிப்போர்) சோவியத் ருசியாவின் வீழ்ச்சியுடன் முடிவுக்கு வந்தது.

- சோவியத் ருசியாவின் வீழ்ச்சியின் பின்னர் வார்சோ அமைப்பும் கலைக்கப்பட்டது.

அணிசேரா இயக்கம்

* இரண்டாம் உலக மகாயுத்தின் பின்:- உலகில் தோன்றிய பொது உடமைவாதம் மற்றும் முதலாளித்துவம் எனப்படும் வல்லரசு முகாம்கள் இரண்டில் ஒன்றிலேனும் சாராது இருந்த அரசுகள் பின்பற்றிய கொள்கைகள் அணிசேராக் கொள்கைகள் (Non aligned Police) என அழைக்கப்பட்டது.

* இரண்டாம் உலக மகாயுத்தின் பின் மேற்குலக ஆதிக்கத்தி லிருந்து சுதந்திரமடைந்த மூன்றாம் உலக நாடுகளாகக் கருதப்படும் ஆசியாவினதும், ஆபிரிக்காவினதும் நாடுகள் அணிசேரா இயக்கத்தின் உறுப்பினர்களாவர்.

* சோவியத் மற்றும் அமெரிக்க வல்லரசு முகாம்கள் இரண்டின் தலைவர்கள் புதிதாக சுதந்திரமடைந்த அரசுகளை இயன்றளவு தமது அணிகளுக்கு ஈர்த்துக் கொள்ள முயலுகையில் நீண்டகாலம் ஏகாதிபத்தியவாதத்தின் கீழிருந்து சுதந்திரமடைந்த அரசுகள், தமது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டு, எவ்விதமான பலம்வாய்ந்த வல்லரசுக்கும் தலை சாய்க்காத சுயாதீனமான கொள்கை ஒன்றைப் பின்பற்றுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. இதற்கமைய அணிசேராநாடுகளின் இயக்கம் தோற்றம் பெற்றது.

* அணிசேராக் கொள்கை எனப்படுவது, வல்லரசு அணிகள் இரண்டையும் விட்டுவிலகி தனியாக இருக்காது சுதந்திரம், பாதுகாப்பு, சமாதானம், ஒத்துழைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

  அதாவது,
  - வல்லரசுகளுக்குத் தலைசாயாது, அணிசேராத தமது நாடுகளுக்குரிய கொள்கைகளை செயற்படுத்தக்கூடிய நிலையொன்றைக் கட்டியெழுப்புவது
  - யுத்த உடன்படிக்கைகளுக்கு தம் எதிர்ப்பைக் காட்டுதலும் எந்த வகையிலாயினும் ஏகாதிபத்தியவாதத்துக்கு எதிராகவிருத்தல்
  - அணிசேரா இயக்கத்தை உலகின் பலம்வாய்ந்த சமாதான இயக்கங்களில் ஒன்றாக ஆக்குதல்

* 1955 இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் நடத்தப்பட்ட மகாநாட்டில் அணிசேரா இயக்கத்தின் அங்குராப்பணம் நடந்தது.

* இந்த மகாநாட்டுக்கமைய இந்த ஆபிரிக்க-ஆசிய நாடுகள் தமது நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கையைப் பிரகடனம் செய்தன.

* இந்த நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கை பஞ்சசீலக் கொள்கை என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

* 1956ல் யூகோஸ்லாவிய தலைநகரான பெல்கிரேடில் நடைபெற்ற மகாநாட்டில் இந்த பஞ்சசீலக் கொள்கைக்க நடைமுறையான அடிப்படையொன்று தரப்பட்டது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பஞ்சசீலக் கொள்கை



* முதற் செயலமர்வின்போது 23 ஆசிய நாடுகளும் 7 ஆபிரிக்க நாடுகளும் கலந்துகொண்டதுடன், நாளுக்குநாள் அதிகரித்த அதன் உறுப்பினர்களின் தொகை தற்போது 108 நாடுகளைக் கொண்டுள்ளது.

* அணிநோ நாடுகளின் முதலாவது தலைவர் மகாநாடு 1961இல் பெல்கிரேடில் நடைபெற்றது.

* 1976இல் கொழும்பில் ஐந்தாம் அணிசேராநாடுகளின் தலைவர் மகாநாடு நடைபெற்றது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

11.5.1 செயற்பாடு: ஐக்கிய அமெரிக்கா உலக வல்லரசாக எழுச்சி பெற்றமை

செயற்பாடு : "அமெரிக்கா உலக வல்லரசாகிய விதத்தைத் தேடிப் பார்ப்போம்"

நேரம் : 80 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடு
- இணைப்பு 1 - ★ ஐக்கிய அமெரிக்கா நாட்டின் தேசியக் கொடி
- இணைப்பு 2 - ★ உலக தேசப்படம்
- இணைப்பு 3 - ★ ஐக்கிய அமெரிக்க உலக வல்லரசாக ஆவதற்கு ஏதுவான காரணங்களைக் காட்டும் பந்திகள்
- இணைப்பு 4 - ★ செயலாற்றல் படிவம்
- பாடநூல்

கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு

படி 11.5.1.1.
- இணைப்பு 1 இல் காட்டப்படும் தேசிய கொடிக்குச் சொந்தமான நாடு எது? எனும் வினாவை மாணவரிடம் விடுத்து, பாடநூலையும் துணையாகக் கொண்டு பின்வரும் தவல்களில் கவனத்தைச் செலுத்தியவாறு கலந்துரையாடலை நடாத்தவும்.
- 20ம் நூற்றாண்டு ஆரம்பமாகும்போது ஐக்கிய அமெரிக்க வெளிநாட்டு நடவடிக்கைகளில் பங்கேற்றது.
- 20ம் நூற்றாண்டில் உலக நடவடிக்கைகள் ஐரோப்பாவை முதன்மையாகக் கொண்டு இடம்பெற்றன.
- முதலாம் உலக மகாயுத்தத்தில் ஐரோப்பாவின் நேசநாடுகளான பிரிட்டன், பிரான்சு இருந்த தரப்பில் ஐக்கிய அமெரிக்காவும் இணைந்து கொண்டது.
- முதலாம் உலக மகாயுத்தத்தில் நேசநாடுகள் வெற்றி பெற்ற உடனே உலக வல்லரசு நாடாக ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேசத்தோற்றம் மிகவும் வெளிப்பாடாக இருந்தது.

(10 நிமிடங்கள்)

படி 11.5.1.2.

- வகுப்பின் மாணவரை விரும்பியவாறு 4 குழுக்களாகவும்
- இணைப்பு 2இல் குறிப்பிடப்படும் செயலாற்றல் படிவத்தில் அடங்கியுள்ள முதலாம் பந்தியை 1ம் 2ம் குழுக்களுக்கும் 3ம் 4ம் குழுக்களுக்கு இரண்டாம் பந்தியையும் பகிர்ந்து கொடுத்து அதனைக் கற்பதற்கு வாய்ப்பளிக்கவும்.
- இணைப்பு 3இல் குறிப்பிடப்படும் செயலாற்றல் படிவத்தை குழுக்களுக்கு வழங்கவும் (வினா இல 1ம் அதற்கான வினாக்களையும் 1ம் 2ம் குழுக்களுக்கும் 2ம் இல. வினாவையும் அதற்கான வினாக்களையும் 3ம் 4ம் குழுக்களுக்கும் கிடைக்குமாறு செய்யவும்.)
- 4 குழுக்களையும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும்.
- மாணவருக்குத் தேவையான அறிவுறுத்தல்களையும் வளங்களையும் வழங்கவும்.

(30 நிமிடங்கள்)

படி 11.5.1.3

- குழுக்களுக்கு தமது செயற்பாடுகளை வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கவும் (குழுச் சமர்ப்பணமும் ஏற்றது)
- ஏனைய குழுக்களுக்குத் தம் கருத்துக்ககளைத் தெரிவிப்பதற்கு இடமளிக்கவும்.
- குழுக்களின் திறமைகள், நலிவுகள் மற்றும் குறிப்பானவற்றைப் பற்றிக் கலந்துரையாடவும்
- திறமைகளை மதிக்கவும்
- குழுக்கள் முன்வைத்த விடயங்களைப்பற்றி அவதானமாக இருந்து பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு மீளாய்வில் ஈடுபடவும்.
- முதலாம் உலக மகாயுத்தத்தினால் விளைந்த நாசங்கள் காரணமாக உலக சமாதானத்தின் தேவை வல்லரசு நாடுகளுக்கு விளங்கியது.
- ஐக்கிய அமெரிக்காவினால் உலக சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் சர்வதேச சங்கத்தை அமைப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

- ஐக்கிய அமெரிக்காவின் செனட் சபையின் எதிர்ப்பு காரணமாக ஐக்கிய அமெரிக்காவுக்கு சர்வதேச சங்கத்தில் இணைய முடியாமற் போயிற்று.

- இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஜெர்மனி. இத்தாலி, யப்பான் ஆகிய அச்சு நாடுகள், வலுவாக எழுச்சி பெற்றதை அடக்குவதற்கு ஐக்கிய அமெரிக்காவுக்கு முடியுமாக இருந்தது.

- 1945இல் ஐக்கிய அமெரிக்காவினால் துாரகிழக்கில் வல்லரசாவதற்கு முயன்ற யப்பானின் ஹிரோிமா, நாகசாகி நகரங்களுக்கு அணுகுண்டை வீசி அது நலிவாக்கப்பட்டது.

- அத்துடன் ஐக்கிய அமெரிக்கா சர்வதேச மட்டத்தில் மிகவும் பலம்வாய்ந்த நிலையை அடைந்தது.

- உலக சமாதானத்துக்காக இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சாசனத்தைத் தயாரிப்பதில் ஐக்கிய அமெரிக்கா மிகவும் தீர்மானமிக்க செயற்பணியில் ஈடுபட்டது.

- ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரம் கொண்ட ஐந்து வல்லரசு நாடுகளில் ஒன்றாக ஐக்கிய அமெரிக்கா மாறியமை.

- விண்வெளிப் பயணங்களில் நட்சத்திர யுத்தத்தின் மூலம் பொது உடைமைவாத முகாம்களுக்கு பலத்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

- 1980 தசாப்தங்கள் ஆகும் போது சோவியத் ருசியாவில் முகாம்கள் வீழ்ச்சியடைதல் தொடர்பாக ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து அழுத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன.

- ஐக்கிய அமெரிக்காவானது முதலாளித்துவ முகாமின் தலைமைத்துவத்தை அடைந்தது.

- இங்கிலாந்து, பிரான்சு, மேற்கு ஜெர்மனி, என்பன ஐக்கிய அமெரிக்காவைப் பின்பற்றிய நாடுகளாகும்.

- முதலாளித்துவ முகாமை மிகவும் வலுவுள்ளதாக்க ஐக்கிய அமெரிக்கா தலைமையில் 'நேட்டோ' அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

(40 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கணிப்பீடும் மதிப்பீடும்

- இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் அமெரிக்கா உலக வல்லரசாகிய விதத்தை விபரிப்பார்.
- உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் தாபனத்தைக் கட்டியெழுப்ப ஐக்கிய அமெரிக்கா முன்னின்று செயற்பட்டதை மதிப்பார்.
- முதலாளித்துவ முகாமைச் சேர்ந்த நாடுகளை உலக மாதிரித் தேசப்படத்தில் அடையாளமிட்டுப் பெயரிடுவார்.
- குழு உணர்வுடன் செயற்படுவார்.
- இரண்டாம் உலக மகாயுத்தத்தின் முன்னரும் பிறகும் ஐக்கிய அமெரிக்கா, முதலாளித்துவ முகாமைப் போசிப்பதற்காக பங்களிப்புச் செய்த விதத்தைக் கிரமமாகக் கூறுவார்.

இணைப்பு இல: 11.5.1.1

ஐக்கிய அமெரிக்கத் தேசியக் கொடி



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு இல 02



உலக தேசப்படம்

இணைப்பு இல 03

Iம் IIம் குழுக்களுக்குரிய தகவற் படிவங்கள்

1776இல் பிரித்தானியாவிலிருந்து சுதந்திரமடைந்த தேசிய அரசாக எழுச்சியுற்ற ஐக்கிய அமெரிக்கா 20ம் நூற்றாண்டை அடையும்போது அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம் எனும் அனைத்து துறைகளிலும முன்னிலையை அடைந்தது.

ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் 20ம் நூற்றாண்டின் முதல் அரைவாசிப் பகுதியில் உலகப் புகழ்பெற்ற பனாமாக் கால்வாயைக் கட்டியதுடன் அதன் மூலம் தன் நாட்டைச் சுற்றியிருந்த பிரதேசங்கள் பூராவிலும் தனது ஆதிக்கத்தைப் பரப்புவதில் அது வெற்றிகண்டது. இக்காலத்தில் ஐக்கிய அமெரிக்கா அடைந்திருந்த மாபெரும் சக்தி உலகுக்குத் தெரியவந்தது, உலக மகாயுத்த காலத்திலாகும். முதலாம் உலக மகாயுத்தத்தின் போது மிதவாதப் போக்கைப் பின்பற்றிய ஐக்கிய அமெரிக்கா தனக்குச் சொந்தமான லுசிடேனியா எனும் பயணிகள் கப்பல் ஜேர்மனியரால் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தின் காரணமாக 1915இல் யுத்தத்தில் இணைந்து கொண்டது. எந்த ஒரு வெளிநாட்டு யுத்தத்துடனும் சம்பந்தப்பட்டிராதிருந்ததுடன் 2 மிலியன் அளவான காலாட்படை, கடற்படை அணி அதனிடம் இருந்தது. பொருளாதார மட்டத்தில் உலகில் முக்கிய இடத்தைப்பெற்றிருந்த அந்நாட்டில் பெருமளவு உணவு, போராயுதங்கள், யுத்த மூலோபாயங்கள் இருந்தன. இக்காரணங்களினால் ஐக்கிய அமெரிக்கா, ஜெர்மானியப் படைகளுக்கு எதிராக முக்கூட்டு நேச நாடுகளுக்கு அவர்களது வெற்றிக்காக போரை வழிநடாத்தியது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

போரின் முடிவில் உருவான சர்வதேச சங்கத்தின் ஸ்தாபகராக விளங்கியதும் அக்காலத்தில் அமெரிக்காவின் சனாதிபதியாகவிருந்த வூட்ரோ வில்சன் ஆவார். இது உலக சமாதானத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச அமைப்பாகவிருந்தது. அவ்வாறே ஐக்கிய அமெரிக்கா முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற்றிய நாடாகவும் இருந்தது. முதலாளித்துவத்தை உலகம் பூராகவும் பரப்புவதற்கு பெருமளவான நடவடிக்கைகள் இந்நாட்டில் நிகழ்ந்தன. முதலாளித்துவ பொருளாதார கொள்கைகளைச் செயற்படுத்தும் நாடுகளை எழுச்சி பெறச் செய்வது, அந்நாடுகளுக்கு கடன் வசதிகளை வழங்குதல், பொது உடைமைவாத நாடுகளுக்குப் பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தி முதலாளித்துவத்தின் பால் அந்நாடுகளைக் கவரச் செய்தல் போன்றன ஐக்கிய அமெரிக்காவின் செயல்களுள் பிரசித்தமாக விளங்கிய பண்புகளாக இருந்தன.

IIIம் IVம் குழுக்களுக்கான செயலாற்றல் படிவம்

20ம் நூற்றாண்டளவில் உலகின் மிகப்பலம் வாய்ந்த நிலையிலிருந்த ஐக்கிய அமெரிக்க நாடு தனது பலத்தை உரசிப் பார்ப்பதற்காகக் கிடைத்த முதலாவது வாய்ப்பு 1939இல் ஏற்பட்ட 2ம் உலக மகாயுத்தமாகும். இந்த யுத்தத்தினால் நேச நாடுகள் பெரும் தோல்வியைத் தழுவுவதற்கு அண்மித்ததாக இருந்த வேளையில் யுத்தத்தில் இணைந்து கொண்ட ஐக்கிய அமெரிக்கா நேச நாடுகளின் வெற்றிக்குக் காரணமாகியது. நேச நாடுகளுக்கு எதிராக போரில் ஈடுபட்ட அச்சு வல்லரசுகளில் யப்பானின் செயற்பாட்டினால் கோபமுற்ற ஐக்கிய அமெரிக்கா யப்பானுக்கு எதிராக அணுகுண்டை வீசியதன் மூலம் ஐக்கிய அமெரிக்காவின் பலத்தை உலகம் காணக்கூடிய வாய்ப்புகிட்டியது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் இறுதியில் உருவான ஐ.நா. தாபனத்துக்குத் தலைமையை வழங்கியதும் ஐக்கிய அமெரிக்காவாகும். இத்தாபனத்தினுள் உள்ள பாதகாப்புச் சபை உறுப்பினருள் ஐவர் உலக மகா வல்லரசுகளாவர். அவர்களுள் தாம் மிகவும் பெரிய வல்லரசாகும் என்பதை உலகுக்குக்காட்ட ஐக்கிய அமெரிக்காவுக்கு முடிந்தது. ஐக்கிய நாடுகள் சபை உருவாகியதன் பின்னர் உலக அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் பெரும் வல்லரசுகளுக்கு முடியுமாக இருந்தது. கிரேக்க நாட்டில் ஏற்பட்ட கம்யூனிசப் போராட்டங்களில், இந்தோனேசியாவுக்கு சுதந்திரம் பெற்றுத்தரும்போது, பலஸ்தீன போராட்டங்களின்போது, ஐக்கிய அமெரிக்கா மிகவும் பலம்வாய்ந்தது என்பதை உலகுக்கு மிகவும் தெளிவாக விளங்கியது. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறையில் பாரியளவான முன்னோக்கிப் பாய்ச்சலான விண்வெளிப் பயணங்களிலும் ஐக்கிய அமெரிக்கா ஈடுபட்டது. இதற்கமைய விண்வெளி ஆராய்ச்சி சந்திரனின் காலடி பதித்தல், கோள்மண்டல ஆராய்ச்சி முதலிய துறைகளில் ஏனைய நாடுகளையும் மிஞ்சி ஐக்கிய அமெரிக்கா முன்னணிக்குச் சென்றது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயலாற்றல் படிவம்

Iம் IIம் குழுக்களுக்கானது

இணைப்பு 3இன் தகவற் படிவத்தின் ஊடாக பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பது உங்களுக்கான ஒப்படையாகும்.

1. ஐக்கிய அமெரிக்கா முதலாம் உலக மகாயுத்தத்தில் இணைந்து கொண்டதற்கா காரணங்களைக் காட்டவும்.

2. இக்கால வேளையில் ஐக்கிய அமெரிக்காவுக்குச் சவாலாக விளங்கிய நாடு எது?

3. ஐக்கிய அமெரிக்கா வல்லரசாக மாறுவதற்கான காரணங்கள் யாவை?

4. ஐக்கிய அமெரிக்காவின் உதவியைப் பெற்ற அணியைப் பெயரிடுக.

5. முதலாம் உலக மகாயுத்தத்தின் இறுதியில் தோன்றிய சர்வதேச அமைப்பு யாது?

6. அதன் ஸ்தாபகரின் பெயரைக் கூறவும்.

7. ஐக்கிய அமெரிக்கா முதலாளித்துவ முகாமின் தலைமைத்துவம் பெற்று அதனை
பிரசித்திபெறச் செய்ய மேற்கொண்ட வழிவகைகளைக் காட்டவும்.

செயலாற்றல் படிவம்

IIIம் IVம் குழுக்களுக்கானது

இணைப்பின் 3இன் தகவற் படிவத்தின் ஊடாக பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பது உங்களுக்கான ஒப்படையாகும்.

1. ஐக்கிய அமெரிக்கா இரண்டாம் உலக மகாயுத்தத்தில் இணைந்து கொண்டதற்கான
காரணங்களைக் காட்டவம்.

2. இக்கால வேளையில் ஐக்கிய அமெரிக்காவுக்குச் சவாலாக விளங்கிய தூரகிழக்கு
நாடு எது?

3. ஐக்கிய அமெரிக்கா தனது வல்லரசுத்தன்மையைக் காட்டிய சம்பவமொன்றைக் கூறுக?

4. இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது ஐக்கிய அமெரிக்கா எந்த அணிக்கு எதிராக போர் செய்தது?

5. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் உருவான சர்வதேச அமைப்பு யாது?

6. ஐ.நா. சபையினால் நிகழ்த்தப்படும் முக்கிய சேவையை விளக்குக.

7. விஞ்ஞான, தொழில்நுட்பத் துறையில் ஐக்கிய அமெரிக்கா பெற்றக்கொண்ட வெற்றி யாது?

11.5.2

தேர்ச்சி மட்டம் : சோவியத் ருசியா உலக வல்லரசாக எழுச்சி பெறல்

செயற்பாடு : பொது உடைமைவாதத்தின் முன்னோடிகளைத் தேடியறிவோம்.

நேரம் : 160 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடு : இணைப்பு இல: 1 லெனினின் படம்
இணைப்பு இல: 2 உலக தேசப்படம்
இணைப்பு இல: 3 செயலாற்றல் படிவம்
பாடநூல்

கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு

படி 11.5.2.1

- லெனினின் படத்தை வகுப்பில் மாணவருக்குக் காட்டி இவர் யார் என வினவியவாறு கலந்துரையாடலை ஆரம்பிக்கவும். இதற்கென பாடநூல் மற்றும் கீழே குறிப்பிடப்படும் விடயங்களையும் கொண்டு உலக தேசப்படத்தையும் பயன்படுத்தி கலந்துரையாடலை நடாத்தவும்.

- 1917 அக்டோபர் புரட்சியிலிருந்து பொதுவுடைமைவாத சோவியத் ருசியா பிறந்தது.

- அது உலகின் முதலாவது பொது உடைமைவாத எண்ணங்களுக்குச் சார்பான நாடுகளுடன் ஒன்றுசேர்ந்து பொது உடமைவாத முகாம் உருவாக்கப்பட்டது.

- இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் உருவான ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புச் சபையின் உறுப்பாண்மையை சோவியத் ருசியா பெற்றுக் கொண்டது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ஐ.நா. சபையின் பாதுகாப்புச்சபை உறுப்பாண்மையைப் பெற்றதனால் உலக வல்லரசான சோவியத் ருசியாவுக்கு வீட்டோ அதிகாரம் கிடைத்ததன் காரணமாக பொதுவுடமைவாத முகாம் பலம் பெற்றது.

- பொதுவுடமைவாத முகாமானது சோவியத் ருசியாவின் தலைமையில் பொது உடமைவாத பொருளாதாரத்தையும்பொது வுடமைவாத ஆட்சியையும் பரவலாக்கிக் கொண்டது.

(15 நிமிடங்கள்)

படி 11.5.2.2

- எல்லா மாணவருக்கும் இணைப்பு இலI செயலாற்றல் படிவத்தைப் பகிர்ந்து கொடுக்கவும்.

- செயலாற்றல் படிவம் Iன் செயற்பாட்டை தனியாகவும் செயலாற்றப் படிவம் IIன் செயற்பாட்டை குழுவாகவும் செய்ய வேண்டுமென அறிவிக்கவும்.

- செயலாற்றல் படிவம் IIக்கமைய தமக்கு வழங்கப்படும் வேலைக்காக பாடநூலில் இருந்தும் வேறு மூலாதாரங்களில் இருந்தும் தகவல்கள் பெறலாம் என்பதைக் கூறவும்.

- செயற்பாட்டிலீடுபடும் பொது எப்போதும் ஆசிரியரின் உதவியைப் பெறலாம் என்பதையும் கூறவும்.

படி 11.5.2.3

- செயற்பாட்டின் இறுதியில் மாணவரிடமிருந்து எழுமாற்றாக தெரிவுசெய்த ஆக்கங்கள் சிலவற்றை வகுப்பில் முன்வைக்கவும்.

- அவற்றின் குறைபாடுகளை எடுத்துக்காட்டி குறைகளை நிவர்த்தி செய்யவும்.

- வெற்றிகரமாக விடையளித்த மாணவனை பாராட்டவும்

- மீளாய்வின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தவும்.

- யோசப் ஸ்டாலின், நிகிட்டா குருசேவ் போன்ற வினைத்திறன் மிக்க தலைவர்கள் தோன்றியதால் உலக வல்லரசாக சோவியத் ருயா எழுச்சிபெற்றது.

- ஸ்டாலினின் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட பொருளாதாரம் ஏற்படுத்தப்பட்டது.

- சோவியத் ருயாவின் நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் 1946இல் ஆரம்பமானது

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- 1953இல் பதவியேற்ற நிகிட்டா குருசேவின் பொருளாதாரத் திட்டம் மிகவும் வினைத்திறனாக அமைந்ததுடன் அதன் மூலம் பிரதேச பொருளாதார அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

- அந்நாட்டில் ஏற்பட்ட விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பலனாக 1961இல் இந்நாட்டைச் சேர்ந்த யூரிககாரின் முதன் முறையாக விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டார்.

- சோவியத் ருசியா முதன்முறையாக பொதுவுடமைவாத முகாமின் தலைமைத்துவத்தையடைந்து கிழக்கு ஜேர்மனி, பல்கேரியா, ஹங்கேரியா, செக்கொஸ்லாவாக்கியா, போலாந்து, யூகொஸ்லாவியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொது வுடமைவாத பொருளாதாரத்துக்குட்பட்டன.

- நேட்டோ அமைப்புக்குச் சவாலாக 1955இல் வோர்சோ ஒப்பந்தம் சோவியத் ருசியாவின் தலைமையில் உருவாகியது.

- 1949 சீனப்புரட்சியின்போது கமியூனிசம் வெற்றிகொண்டதால் பொது வுடமைவாத அணி மேலும் பலம் பெற்றது.

- இவ்வாறாக உலகம் பூராவும் பரவலாகிப் போன பொதுஉடமைவாதக் கருத்துக்கள் ஐரோப்பாவிலிருந்து வெளியே சீனா, வட கொரியா, கியூபா, வியட்நாம் போன்ற நாடுகளுக்கும் பரம்பிச் சென்றது.

- இந்நாடுகளிடையே பொருளாதாரத்தைப் போலவே இராணுவ ரீதியாகவும் இணைப்பு காணப்பட்டது.

(80 நிமிடங்கள்)

கணிப்பீடும் மதிப்பீடும்

- சோவியத் ருசியா உலக வல்லரசாக எழுச்சி பெற்றதற்கான காரணங்களை விபரிப்பார்.

- சோவியத் ருசியாவின் தலைவர்கள் அந்நாட்டின் முன்னேற்றத்துக்காக ஆற்றிய நடவடிக்கைகளை மதிப்பார்.

- சோவியத் ருசியாவின் அதிகாரமுகாமுக்குரிய நாடுகள் தேசப்படமொன்றில் அடையாளமிட்டுப் பெயரிடுவார்.

- குழுவினுள் கூட்டுணர்வுடன் செயற்படுவார்.

- மூலாதாரங்களின் மூலம் தகவல்களைத் தேடியறிவு பழக்கப்படுவார்.

பின்வேலை:

சோவியத் ருீயா உலக வல்லரசாக எழுச்சி பெறுவதற்கு வழிவகுத்த லெனின், ட்ரொட்ஸ்கி, ஸ்டாலின் பற்றி மேலும் தரவுகளைச் சேர்த்து சிறு நூலொன்றைத் தயாரிக்கவும்.

இணைப்பு 11.5.2.1.

லெனின்

இணைப்பு 11.5.2.2.



உலக தேசப்படம்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயலாற்றற் படிவம் I

- வகுப்பின் எல்லா மாணவருக்கும் உலக தேசப்படத்தின் பிரதிகளை பகிர்ந்தளிக்கவும்
- சோவியத் ருீயா மற்றும் ஏனைய பொது உடமைவாத கருத்துக்கள் பரவிய நாடுகளை உலகத் தேசப்படத்தில் அடையாளமிட்டுக் குறிக்கும் படி மாணவருக்கு அறிவுரை வழங்கவும்.

  இணைப்பு இல: 04

- வகுப்பு மாணவரை 3 குழுக்களாகப் பிரிக்கவும்
- தரவிருத்தி உள்ளீடுகளில் குறிப்பிட்டவாறு பாடநூலையும் மூலாதாரங்களையும் பெற்றக் கொள்ளும்படி அறிவுரை வழங்கவும்.
- குழுவுக்கு தரப்பட்டுள்ள செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்தவும்.
- தேவையானபோது ஆசிரியரின் அறிவுரைகளை வழங்கவும்.

குழு I

- சோவியத் ருீயா உலக வல்லரசாக எழுச்சி பெற்றமைக்கான காரணங்கள் முறையே குறிப்பிடவும்.

  1.

  2.

  3.

குழு II

- சோவியத் ருீயாவில் பொதுவுடமைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய விதத்தை உதாரணங்களுடன் விளக்கவும்.

  1.

  2.

  3.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

குழு III

- சோவியத் ருீயா பொதுவுடமைவாதமுகாமின் தலைமைத்துவத்தை அடைந்த விதத்தை ஒழுங்கு வரிசையாக உதாரணங்களுடன் விளக்குக.

1.

2.

3.

11.5.3

செயற்பாடு

தேர்ச்சி மட்டம்: • ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்பாடு ஆயுத மோதல் மட்டுப்படுத்தப்படுவதற்கு ஏதுவான விதத்தை பகுப்பாய்வு செய்வார்.

செயற்பாடு: • "பனிப்போரைப் பற்றிக் கற்போம்"

நேரம்: • 160 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடு:
- இணைப்பு இல 1 - உலக தேசப்படம்
- இணைப்பு இல 2 - செயலாற்றப் படிவம்
- பாடநூல்

கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு

படி 11.5.3.1
- விசேடமான அடையாளங்களினால் காட்டப்பட்டுள்ள ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ருீயா ஆகிய நாடுகளை உலக தேசப்படத்தில் காட்டியவாறு கலந்துரையாடலை ஆரம்பிக்கவும்.
- இந்நாடுகளைப் பெயரிடவும்
- இந்நாடுகள் பற்றி நீங்கள் அறிந்த விபரங்கள்
- பனிப்போர் எனப்படுவதால் கருதப்படுவது யாது?

மேற்கூறிய வினாக்களுக்கு விடைகளைப் பெற்றவாறு பாடநூலையும் துணையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலை நடாத்தவும்.

- ஐக்கிய அமெரிக்கா, முதலாளித்துவ முகாமிற்கும் சோவியத் ருீயா பொதுவுடமைவாத முகாமிற்கும் தலைமை வகித்தன.
- இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் உருவான சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டினால் ஆயுத மோதல்களை திசைதிருப்ப முடிந்தது.
- 1956ன் சுயஸ் கால்வாய் பற்றிய நெருக்கடியை ஐ.நா. சபையின் தலையீட்டினால் முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது.

- சோவியத் ருீயாவும் ஐக்கிய அமெரிக்காவும் ஒருவருக்கொருவர் சவால்விடும் விதமாக மேற்கொண்ட எறிகணைப் பரிசோதனை பனிப்போராக செயற்பட்டது.
- பனிப்போரினால் ஆயுத மோதல் ஏற்படாமல் போரின் தோற்றமே மாற்றமடைந்தது.
- இந்த இரு அணிகளுக்கிடையே அந்நியோன்ய கருத்து வேறுபாடுகள், நம்பிக்கையின்மை, பனிப்போருக்கு வழியமைத்தது.
- சர்வதேச மோதல் தொடர்பாக அமெரிக்காவின் தலைமையில் ஜனநாயக நாடுகளுக்கு சோவியத் ருீயாவின் தலைமையில் கமியூனிச நாடுகளுக்கு இடையே நிலவிய அசௌகரியமான உறவுகளே பனிப்போரின் பண்புகளாகவிருந்தது.
- பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, சுதந்திர அரசியல் சித்தாந்தம் போன்ற அனைத்துப் பிரிவுகளுக்குப் பனிப்போரின் தாக்கத்தைக் காணக்கூடியதாகவிருந்தது.
- ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ருீயாவம் அடிக்கடி போட்டிகளில் ஈடுபட்டமை விண்வெளிப் பயணங்களிலும் கூட தொனித்தமை பனிப்போரின் ஒரு சந்தர்ப்பமாகும்.

(15 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி 11.5.3.2.

- இணைப்பு 2இல் குறிப்பிடப்படும் அட்டவணையை வகுப்பில் உள்ள அனைத்து மாணவருக்கும் தமது அப்பியாசக் கொப்பிகளில் பிரதி செய்து கொள்ளச் செய்யவும்.
- பின்னர் பாடநூலையும் துணையாகக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்வதற்கு உரிய அறிவுறுத்தலை வழங்கவும்.
- மாணவருக்குத் தேவையான வழிகாட்டலை வழங்கவும்.

(65 நிமிடங்கள்)

படி 11.5.3.3.

- மாணவரின் செயற்பாடுகள் சிலவற்றை அவர்களைக் கொண்டே முன்வைக்கச் செய்யவும்.
- அவற்றை மதிப்பீட்டுக்குள்ளாக்கவும்.
- மாணவரின் திறமைகளையும் நலிவுகளையும் இனங்காணவும்.
- மாணவரின் திறமைகளை மதித்து நலிவுகளுக்கான உரிய வழிகாட்டலை வழங்கவும்.
- பின்வரும் விடயங்கள் குறித்து கவனம் எடுததவாறு பாடத்தை மீளாய்வு செய்யவும்.

- பொதுவுடமைவாத அணியைப் பரவலாக்குவதற்கு புதிய பொருளாதார கொள்கைகளை உலகுக்கு அறிமுகம் செய்யப்பட்டது.
- 1950 தசாப்தமாகும் போது உலகம் பூராவும் முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகளையும் விஞ்சிக் கொண்டு பொது வுடமைவாத பொருளாதார கொள்கைகள் மேலெழுந்தன.
- ஐக்கிய அமெரிக்கா, ஜனநாயக ஆட்சியையும் முதலாளித்துவ பொருளாதாரத்தையும் பரவலாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தது.
- இங்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி முதலிய நிதி நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொண்டது.
- முழுமையான முதலாளித்துவ அல்லது முழுமையான பொது வுடமைவாத முறைக்கு விருப்பம் தெரிவிக்காத நாடுகள் கலப்புப் பொருளாதார கொள்கைகளைப் பின்பற்ற தூண்டப்பட்டன.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- முதலாளித்துவ, பொதுவுடமைவாத முகாம்கள் இரண்டையும் நிராகரித்த ஆசிய - ஆபிரிக்க நாடுகள் 1955இல் இந்தோனேசியாவில் பாண்டுங் நகரில் முதன் முறையாக அணிசேரா நாடுகளின் மகாநாட்டை நடாத்தின.

- இலங்கையும் இந்த அமைப்பு உருவாக்குவதில் முன்னோடியாக விளங்கியது.

- 1976இல் இலங்கையிலும் அணிசேரா நாடுகளின் மகாநாடு நடாத்தப்பட்டது.

- உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய சுதந்திரத்துக்காக மக்களுக்குள்ள உரிமை ஏற்றுக் கொள்ளல், அனைத்து நாட்டினருக்கும் சமமான பொருளாதார அபிவிருத்தியைப் பெற்றுத்தரல் மற்றும் நாடுகளிடையே ஒற்றுமையைக் கொடுத்தல் இந்த இயக்கத்தின் நோக்கங்களாக இருந்தன.

- 1980 தசாப்தங்களின் இறுதியாகும் போது சோவியத் ருீயாவின் பொதுவுடமைவாதக் கருத்துக்கள் வீழ்ச்சியுற்றன.

- சோவியத் ருீயாவின் சனாதிபதி மிகாயில் கொர்பசோவ் இனால் அறிமுகஞ் செய்யப்பட்ட வெளிப்படையான தன்மையை ஏற்படுத்தல் (கிளாஸ்நோஸ்ட்) மற்றும் புனரமைப்பு (பெரெஸ்ரொய்கா) என்ற சித்தாந்தங்களின் அடிப்படையே சோவியத் ருீயாவின் வீழ்ச்சிக்கு காரணமாகும்.

- இதன் விளைவாக சோவியத் ருீயாவின் பொருளாதார மறுசீரமைப்பு தொழிற்பட்டது.

- சுதந்திர பொருளாதார கொள்கையின் காரணமாக ஐக்கிய சோவியத் பொது உடமைவாத ஒன்றியம் (USSR) வீழ்ச்சியடைந்தது.

- சோவியத் ஒன்றியத்தினுள் இருந்த பிரதேச அரசுகளான பெலோ ருீயா, லிதுவேனியா என்பன சுதந்திரமாக அரசுகளாக மாறின.

- உலகின் பலம்வாய்ந்த முகாம்கள் இரண்டின் வல்லரசுப் போட்டியும் (பனிப்போர்) சோவியத் ருீயாவின் வீழ்ச்சியுடன் முடிவுற்றது.

- எனவே வோர்சோ ஒப்பந்த அமைப்பும் கலைக்கப்பட்டது.

(80 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கணிப்பீடும் மதிப்பீடும்

- ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஆயுதமோதல்களை மட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்குவார்.
- அதன் மூலம் நடைபெற்ற சேவைகளை மதிப்பார்.
- பலம் வாய்ந்த முகாம்களுக்குரிய நாடுகளை தேசப்படத்தில் அடையாளமிட்டுப் பெயரிடுவார்.
- அணிசேரா நாடுகளின் மகாநாடு பற்றிய தகவல்களை வழங்குவார்.
- தேவையான சந்தர்ப்பங்களில் முன்வந்து செயற்படுவார்.

இணைப்பு இல: 11.5.3.1.

இணைப்பு இல: 11.5.3.1 - செயற்பாட்டுப் பத்திரம்			
ஐக்கிய நாடுகள் ஊடாக தாபனம் நடைபெற்ற சேவைகள்.	சோவியற் ர்யாவின் வீழ்ச்சிக்கான காரணிகள்.	பனிப்போர் ஏற்பட்டமைக்கான காரணங்கள்.	அணிசேரா நாடுகள் தோன்றுவதற்கான காரணிகளும் நோக்கங்களும்.
1.	1.	1.	1.
2.	2.	2.	2.
3.	3.	3.	3.
4.	4.	4.	4.
5.	5.	5.	5.

சுதந்திரத்தின் பின் இலங்கை - (பாடவேளைகள் 16)

11.6 அறிமுகம்

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல் பொருளாதார துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பலவாகும். இவை இலங்கையின் அபிவிருத்தியில் பல்வேறு வகைகளில் செல்வாக்கைச் செலுத்தின.

இவ்வலகைக் கற்பிப்பதன் மூலம், 1947 - சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் இலங்கையர்கள் பெற்றுக் கொண்ட பாராளுமன்ற சனநாயக நிர்வாக முறை இன்று வரை பல்வேறு மாற்றங்களுக்குட்பட்ட வண்ணம் வளர்ச்சி பெற்ற விதத்தை, அறிந்து கொள்வதே எதிர்பார்க்கப்படும் நோக்கமாகும். இங்கு அரசியல் கட்சி, அமைச்சரவை, ஆட்சி முறை பற்றியும் 1972ம் 1978ம் ஆண்டுகளின் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் பற்றியும் விசேட கவனத்தைச் செலுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு கையாளப்பட்ட கொள்கை மற்றும் செயற்பாடுகள் பற்றி ஆய்வு செய்யப்படுவதோடு, விவசாய, கைத்தொழில், அரச முயற்சியாண்மை, கல்வி மற்றும் சமூக நலன்புரி விடயங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அடையப் பெற்றுள்ள முன்னேற்றங்கள் பற்றிக் கற்பதற்கும் இவ்வத்தியாயத்தின் வாயிலாக மேலும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அலகு 11.6

தேர்ச்சி : இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் அதன் அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், அபிவிருத்திச் செயற்பாட்டுக்குப் பங்களித்துள்ள விதத்தைப் பற்றி விபரிப்பார்.

தேர்ச்சி மட்டம் :
- பாராளுமன்ற சனநாயகம் செயற்படும் போது கட்சி முறை, அமைச்சரவை முறையின் முக்கியத்துவத்தை ஆராய்வார்.
- 1972, 1978 - அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களை விபரிப்பார்.
- சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்திச் திட்டங்களால் விளைந்த பயன்களை விபரிப்பார்.

11.6 சுதந்திரத்தின் பின் இலங்கை:

11.6.1 பாராளுமன்ற சனநாயக முறை:

- இலங்கைக்கு 1931ல் டொனமூர் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட நிர்வாகக் குழுவுடன் கூடிய சட்டவாக்கக் கழகத்திற்குப் பதிலாக 1947ல் சோல்பரி ஆணைக்குழுவினர் சிபார்சுசெய்த பிரித்தானிய மரபுக்கமைந்த பாராளுமன்ற ஆட்சிமுறை கிடைத்தது.

- அரசியல் கட்சி முறையும் அதன் ஆரம்பமும்:

  - பிரித்தானிய மரபிலான பாராளுமன்ற முறை வெற்றியடைவதற்கு பொது தேசியக் குறிக்கோளுடனான அரசியல் கட்சிமுறை இருக்க வேண்டும்.

  - அவ்வாறான கட்சிமுறை ஒன்று இல்லாமல் இருந்தமையால் டொனமூர் சீர்திருத்தத்தின் கீழ் பிரித்தானிய மரபுரீதியிலான பாராளுமன்ற முறை ஒன்றுக்குப் பதிலாக நிர்வாகக் குழுவுடனான ஆட்சிமுறை ஒன்று உருவானது.

- சுதந்திரத்தைப் பெறுவதற்காக தேசிய இயக்கங்கள் பல தோன்றினாலும் அவை அரசியல் கட்சிகளாக ஒழுங்கமைக்கப்பட்டிராமை.

  உதாரணமாக:

  1914ல் தேசியசீர்திருத்தச் சங்கம் (1912ல் மது ஒழிப்பு இயக்கம்)

  1919ல் இலங்கை தேசிய சங்கம் தோற்றம்

  1921ல் அகில இலங்கை தமிழ் மக்கள் சபை

  1921ல் மலாயர் அரசியல் தாபனம்

  1927ல் மலைநாட்டு தேசிய சபை

  1936ல் சிங்கள மகா சபை

  1945ல் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

- பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆரம்பம்

- திரு ஏ.ஈ.குணசிங்கவின் தலைமையில் 1923ல் இலங்கை தொழிலாளர் கட்சி ஆரம்பிக்கப்பட்டமை

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இடதுசாரி இயக்கம்: ஆங்கிலம் கற்ற மத்திய தர வர்க்க வாலிபர்கள் பிரித்தானியாவுக்குச் சென்று கல்வி கற்று, தாய்நாடு திரும்பிய பின்னர் ஆரம்பிக்கப்பட்டது.

- இலங்கைக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதும் சமஉடைமை சமூகத்தை உருவாக்குவதுமே இவர்களது நோக்கமாகும்.

- சூரிய மல் இயக்கம்:

- 1935ல் இலங்கை சமசமாஜக் கட்சி கலாநிதி என்.எம். பெரேரா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

- 1943ல் கலாநிதி எஸ்.ஏ. விக்கிரமசிங்க தலைமையில் இலங்கை கம்யூனிசக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

- 1943ல் கலாநிதி கொல்வின் ஆர்.டீ.சில்வா தலைமையில் போல்'ேவிக் லெனினிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

- 1919ல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தேசிய சபை 1945ல் திரு.டி.எஸ்.சேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி எனும் பெயரால் அரசியல் கட்சியானது.

- 1947 - பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் வருமாறு:

  - ஐக்கிய தேசியக் கட்சி - திரு.டி.எஸ்.சேனநாயக்க
  - இலங்கை சமசமாஜ கட்சி - கலாநிதி என்.எம்.பெரேரா
  - போல்'ேவிக் லெனிஸ்ட் கட்சி - கலாநிதி கொல்வினஆர்.டீ. சில்வா
  - இலங்கைகம்யூனிஸ்ட்கட்சி - கலாநிதி எஸ்.ஏ.விக்கிரமசிங்க
  - இலங்கை தொழிலாளர் கட்சி - திரு ஏ.ஈ.குணசிங்க
  - அகில இலங்கை தழிழ் காங்கிரஸ் கட்சி - திரு ஜீ.ஜீ பொன்னம்பலம்
  - இலங்கை-இந்திய காங்கிரஸ் கட்சி - திரு தொண்டமான்

  - பிற்காலத்தில் அபிப்பிராய பேதம் காரணமாகவும் வேறு காரணங்களின் நிமித்தமாகவும் பல்வேறு அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன.

  - அபிப்பிராய பேதம் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி திரு எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க, 1951ல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்தார்.

- அகில இலங்கை தமிழ் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் 1949ல் தமிழரசுக் கட்சி தோன்றியது.

- 1956ல் மக்கள் ஐக்கிய முன்னணி உருவானது.

- 1970ல் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டது.

- ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளின் மத்தியில் மக்கள் விடுதலை முன்னணி திரு.ரோஹண விஜேவீர தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

- அண்மைக் காலத்தில் தோன்றிய அரசியல் கட்சிகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவற்றுள் முக்கியமான சில வருமாறு:

  - இலங்கை மக்கள் கட்சி

  - ஜாதிக ஹெல உறுமய

  - முஸ்லிம் காங்கிரஸ்

- பொதுத் தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்காக, பொது இணக்கப்பாட்டுடன் கட்சிகள் பல இணைந்து கூட்டணி அமைத்துக் கொள்கின்றன. உதாரணமாக 1960,1970,1994 பொதுத் தேர்தல்கள்,

- அமைச்சரவை (கெபினட்) முறை

  - சோல்பரி அரசியல் அமைப்பின் படி கெபினட் முறை எமக்குக் கிடைக்கப்பெற்றது.

  - பிரித்தானிய மரபின் பாராளுமன்றத்தின் சிறப்பு இயல்பாக இதனைக் குறிப்பிடலாம்.

  - பிரதமர் இதன் தலைவராவார்.

  - பிரதமரால் அமைச்சர்கள் நியமிக்கப்படல்.

- அமைச்சரவையின் பொறுப்புக்கள்:

  - நிறைவேற்று அதிகாரம் பற்றிய முழுப் பொறுப்பு
  - நிதி நடவடிக்கைகள் தொடர்பான முழுப் பொறுப்பு
  - அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்துச் சமர்ப்பித்தல்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு:

  - அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் எல்லா அமைச்சர்களும் ஒரே குழுவாக கூட்டுப் பொறுப்புடன் வகை கூறவேண்டும்.

11.6.2 அரசியல் யாப்புச் சீர்திருத்தம்:

1972 - முதலாம் குடியரசு அரசியல் யாப்பு:

- 1947ல் அமைக்கப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பை அகற்றிவிட்டு 1972 மே22ல் இலங்கை முதன் முறையாக சுதந்திர தன்னாதிக்கம் உள்ள குடியரசாக்கப்பட்டது.

- இதுவரை இருந்து வந்த ஆளுநர் பதவிக்குப் பதிலாக சனாதிபதிப் பதவி ஏற்படுத்தப்பட்டது.

  சனாதிபதியானவர்,
  - பெயரளவு அதிகாரம் உள்ளவர்
  - பிரதமரால் பெயர் சிபாரிசு செய்யப்பட்டு நியமனம் பெறுபவர்.
  - அனைத்து அதிகாரங்களையும் பிரதமர் ஆலோசனை உடனேயே செயல்ப்படுத்த வேண்டும்.
  - சனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடர முடியாது.

- பிரதிநிதிகள் சபை :

  - இதுவரை நிலவிய பாராளுமன்றம் தேசிய அரசுப் பேரவை
    எனப் பெயர்மாற்றப்பட்டது.
  - தேசிய அரசுப் பேரவையே மேலாதிக்கம் மிக்கது.
  - சட்டவாக்க அதிகாரம் நேரடியாக இதனால் மேற்கொள்ளப்படும்.
  - நிறைவேற்று அதிகாரம் சனாதிபதியாலும் அமைச்சரவையாலும் மேற்கொள்ளப்பட, நீதி அதிகாரம் நீதித்துறையினரால் மேற்கொள்ளப்படும்.
  - அரசியல் அமைப்புச்சபையால் வழங்கப்படும் கடமைகளை
    மேற்கொள்வதற்கு அரசியல் யாப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது விசேட அம்சமாகும்.

பிரதமரும் அமைச்சரவையும்:

- பிரதமர் தெரிவு செய்யப்படும் முறை - அதிகாரமும் கடமைகளும்.
- அமைச்சரவையை நியமித்தல் - அதிகாரமும் கடமைகளும்.

நீதி அமைப்பு:

- குற்றவியல் நீதிச்சட்டம் அனுபவிக்கும்(1973 இல.44ம் இலக்கம்) கைத்தொழில் பிணக்குகள் சட்டம்.
- முஸ்லீம் விவாகம், விவாகரத்து.
- மீ உயர் நீதிமன்றம்: நாட்டின் அதிஉயர் நீதிமன்றமாகும்.இதுமேன்முறையீட்டு நீதிமன்றமுமாகும்.

அடிப்படை உரிமைகள் அரசியல் யாப்பில் உட்படுத்தப்பட்டமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

1978 இரண்டாம் குடியரசு யாப்பு:

- 1978- ஆகஸ்ட் 31ல் நிறைவேற்றப்பட்டது.
- இந்த யாப்பின் மூலம் இலங்கை சுதந்திர தன்னாதிக்க சனநாயக சமத்துவக்குடியரசானது.

பூரண நிறைவேற்று அதிகாரம் உள்ள சனாதிபதி ஆட்சி முறையாகும்.
சனாதிபதியானவர்,

. தெரிவு செய்யப்படும் முறை - நேரடியாக மக்களின் வாக்குரிமையால்.
. அதிகாரமும் பொறுப்புகளும்.
. சனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது.
. சனாதிபதி அரசாங்கத்தின் தலைவரும் நிர்வாகத்தின் தலைவரும் ஆவார்.

பிரதமரும் அமைச்சரவையும்:

- சனாதிபதியால் நியமனம் பெறுவர்.
- பிரதமர் பதவி பெயரளவிலானதாகும்.
- பிரதமர் உட்பட அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்புச் சொல்லக்கடமைப்பட்டது.
- அமைச்சரவையின் தலைவர் சனாதிபதியாவார்.
- சனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப் படுத்துவதும் நிறைவேற்றுவதும் அமைச்சரவையின் மூலம் ஆகும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பாராளுமன்றம்:

- தேசிய அரசுப்பேரவை என அழைக்கப்பட்ட சட்ட சபை மீண்டும் பாராளுமன்றம் எனப்பட்டது.
- பாராளுமன்ற அங்கத்தவர் தொகை, அதன் கட்டமைப்பு, தெரிவுசெய்யப்படும் முறை.
- விகிதாசாரத் தெரிவு.
- தேர்தல் மாவட்டங்கள்.
- பொதுமக்களின் வாக்களிப்பால் நேரடியாகவும் தேசியப் பட்டியலினது நியமனம் மூலமும் தெரிவாவர்.

பாராளுமன்றத்தின் பொறுப்பு:

- நாட்டின் முறையான ஆட்சிக்கான சட்டங்களை இயற்றுதல்.

பொதுசன கருத்துக்கணிப்பீடு:

- பொதுமக்கள் தமது சட்ட அதிகாரத்தை நேரடியாக பயன்படுத்தும் ஒரு வகையாக இதனைக் குறிப்பிடலாம்.

நீதித்துறை:

இலங்கையின் நீதிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, ஆறு வகையான நீதி மன்றங்களைக் கொண்ட தொகுதி ஒன்று காணப்படுகிறது.

1. மீ உயர் நீதிமன்றம்
2. மேன்முறையீட்டு நீதிமன்றம்
3. உயர் நீதிமன்றம்
4. மாவட்ட நீதிமன்றம்
5. மெஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்
6. முதனிலை நீதிமன்றம்

- நீதித் துறையின் சுதந்திரம்:
  - நீதித் துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பிரமாணங்கள் (அரசியல் யாப்பின் 107லிருந்து 117 வரையான வாசகங்கள்)

- அடிப்படை உரிமைகள்:
  - 1978 அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.
  - அடிப்படை உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்.
  - நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்).

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- உள்ராட்சி முறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்:

  - 1987ல் மாகாண சபை உருவாக்கப்படல்.(அரசியல் யாப்பின் 13வது திருத்தப்படி)

  - 1987ல் பிரதேச சபை அமைக்கப்படல்.

  - தற்போதைய இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் தொகுதி:
    - மாகாண சபை
    - மாநகர சபை
    - நகர சபை
    - பிரதேச சபை

  - மாகாண சபைகளிடமுள்ள அதிகாரங்கள்:
    - பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் 37உள்ளன(13வது அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் 9வது உபவிதியின்படி)

11.6.3 சுதந்திரத்தின் பின்னர் அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

- கல்வி

  - சுதந்திரத்தின் பின்னர் கல்வியைத் திட்டமிட்ட முறையில் செயற்படுத்துவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
    - 1950 கல்வி வெள்ளை அறிக்கையில் மொழி வேறுபாடு இன்றி ஆரம்ப இடைநிலை, உயர் நிலை என பாடசாலைக் கல்வி மூன்று பகுதிகளாக்கப்பட்டன.
    - 5-14 வயது மாணவர்களுக்குக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது.
    - உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைத் தோற்றுவிப்பதற்கு இருந்த இடைஞ்சல் அகற்றப்பட்டது.

  - 1956-ல் பதவிக்கு வந்த அரசாங்கத்தின் கீழ் கல்வித்துறையில் வேகமான விருத்தி ஏற்படல்.
  - இடைநிலைக் கல்வி இறுதி வரை நிலை வளர தாய் மொழி மூலக் கல்வியை வழங்கத் தீர்மானித்தல்.
  - பாடசாலைகளில் மீளவும் மதிய உணவு வழங்குதல்.
  - எட்டாந் தரத்தில் விஞ்ஞான புலமைப் பரிசில் வழங்குதல்.
  - சிரேட்ட பாடசாலைகள் எனக் குறிப்பிடப்பட்டவை மகா வித்தியாலயங்கள் எனக் குறிப்பிடப்பட்டமை.
  - அனைத்துப் பாடசாலைகளுக்கும் விஞ்ஞான கூடம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- 1958ல் வித்தியோதய, வித்தியாலயங்கார பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டமை.
- 1960ல் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் தனியார் பாடசாலைகளை அரசு சுவீகரித்துக் கொண்டது.

- தேசிய கல்வி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.
  1961 மார்ச் (J.E. ஜயசூரிய, தலைவர்)

- தொழிநுட்ப கல்வி ஆணைக்குழு
  (T.P.de.s.முனசிங்க தலைவர்).

- 1964 - வெள்ளை அறிக்கை.

- 1966 - வெள்ளை அறிக்கை.

- 1966 இல. 20 - உயர் கல்விச் சட்டம்:
  - உயர் கல்வி சம்பந்தமாக தேசிய சபை ஒன்று ஆரம்பிக்கப்பட்டமை. உயர் நிலைக் கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. நடைமுறைப்படுத்துவதற்கு நிர்வாகத்திற்கும் ஏற்பாடுகளைச் செய்வதற்காக இயற்றப்பட்ட சட்டமாகும்.
  - கனி'ட பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டது.

- 1972 கல்விச் சீர்திருத்தம்:

  - பாடசாலைக்கு அனுமதிக்கும் வயதை 6 ஆக உயர்த்தியமை.
  - பாடத் திட்டத்தில் மாற்றங்கள் தொழில் முன்னிலைப்பாடம் ஆரம்பிக்கப்படல்.
  - சமூகக் கல்வி என்று புதிய பாடம் ஒன்று தொடங்கப்பட்டது.
  - சேவைக் கால ஆசிரியர் பயிற்சி ஆரம்பக்கப்பட்டது.

- 1981 - கல்வி வெள்ளை அறிக்கை:
  - தொடர் மதிப்பீட்டு வேலைத்திட்டம்.
  - கல்வி நிர்வாகம் பன்முகப்படுத்தப்படல்.

- 1987 - தேசிய கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
  - பாடத் திட்டச் சீர்திருத்தம்
  - சேவைக் கால ஆசிரியர் பயிற்சி
  - தொலைக் கல்வி பயிற்சி ஆரம்பம்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பல்கலைக்கழகக் கல்வி அபிவிருத்தி:
  - புதிதாகப் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
  - திறந்த பல்கலைக்கழகம்.
  - மகாபொல புலமைப்பரிசில் முறை.

விவசாயம்

- சுதந்திரத்தின் பின்னர் வாழ்க்கைப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட மாற்றம்.
  - காணி அற்றவர்களுக்குக் காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
  - விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் பிரதான குளங்களை அடிப்படையாகக் கொண்ட நீர் விநியோகத்திட்டம். - முதலாவது பல்நோக்குத்திட்டமான கல் ஓய திட்டம் ஆரம்பிக்கப்படல்.

அரச முயற்சியாண்மை

- தேசிய மயக்கொள்கையின் ஆரம்பம்: 1956 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களின் அரசாங்கத்தின் கீழ் -
- போக்குவரத்து, தேசிய உடமையாக்கப்பட்டது.
- மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டமை

கைத்தொழில்

- சுதந்திரம் பெறும்போது சில கைத்தொழில்களே காணப்பட்டன.
- சுதந்திரத்தின் பின் கைத்தொழில்களில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. நட்டத்தில் இயங்கிய தொழிற்சாலைகள் மூடப்பட்டன.
- கண்ணாடி, அசிற்றிக் அசிட், கார்போரிட் போன்ற கைத்தொழில்கள் நட்டத்தில் இயங்கின
- ஒட்டுப்பலகை, தோல் பொருட்கள், பித்தளையிலான உற்பத்திக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தமை.
- சீமெந்து, கடதாசி, பீங்கான், இரசாயனப் பொருட்கள் உற்பத்திக்காக கைத்தொழிற்சாலைகளை ஆரம்பித்தமை
- 1950களில் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் திணைக்களத்தால் புடவை, சவர்காரம், கடதாசி, இனிப்புப் பண்டங்கள் போன்ற கைத்தொழிலடகளுக்காக கடனுதவி வழங்கப்பட்டது.

- 1956இன் பின்னர் கைத்தொழில்களில் அரசாங்கமே ஈடுபடல்

- 1957இல் அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம் இயற்றப்பட்டது.

  - 1962ல் ஏக்கலையில் கைத்தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்பட்டது.

  - 1969ல் தொழினுட்ப வசதிகளை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக கைத்தொழில் அபிவிருத்திச்சபை ஆரம்பிக்கப்பட்டது.

  - நெற்செய்கையாளர்களுக்கான சமூக நலத் திட்டங்கள்:

    - நெற் காணிச் சட்டம்.
    - பசளை மானியம்
    - உத்தரவாத விலை
    - நெல் சந்தைப்படுத்தும் சபை

  - உலர் வலயத்தை அபிவிருத்தி செய்வதற்காக மகாவலித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை.
  - உடவளவைத் திட்டமும் வேறு ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டங்களும்.
  - பெருந் தோட்டத்துறை அரசுடைமையாக்கப்படல். (அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம்)
  - காணிகளை அரசுடைமையாக்கல்.(ஜனவஸம)
  - கிராமங்களை விஸ்தரிக்கும் திட்டம்.
  - கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை ஆரம்பித்தல்.
  - மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ஆரம்பிக்கப்படல்.
  - வர்த்தக பயிர்ச்செய்கை விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்: தேயிலை, தென்னை, இறப்பர், சிறு ஏற்றுமதிப்பயிர்ச் செய்கைகள்
  - உள்ளூராட்சி - மாவட்ட சபைகள் நிறுவப்பட்டமை.
  - 1970 - 1977 கைத்தொழில்களில் அரசாங்கமே பெருமளவில் ஈடுபடல்.

  - 1977இன் பிந்திய காலப்பகுதி - நோக்கிலான கைத்தொழில் கொள்கைகள்.

  - அரச துறையை விட தனியார் துறைக்கு முக்கியத்துவம் அளித்தல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது.

- கட்டுநாயக்க, பியகம, ஏற்றுமதிக்கான தைத்த ஆடை சுதந்திர வர்த்தக வலயங்கள்

- கைத்தொழில் நகரங்கள்

- இருநூறு நெசவாலைகளை ஆரம்பித்தல்

- இலங்கை முதலீட்டுச்சபை ஆரம்பிக்கப்பட்டது

- பிரதேச கைத்தொழில்மய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

சமூக நலன்புரி நடவடிக்கைகள்

சுகாதாரம்:

இலவசமாக சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
வைத்தியசாலை வசதிகளை மேம்படுத்தல்.
நோய்நொடிகளைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள்.

கல்வி:

இலவச பாட நூல்.
இலவச சீருடை.
மாணவர்களுக்கு இலவச மதிய உணவு.
ஐந்தாந் தரப் புலமைப் பரிசில் திட்டம்.

போக்குவரத்து:

போக்குவரத்துச் சேவைகளைத் தேசியமயமாக்கல்.
பாதைகளின் தரத்தை மேம்படுத்தலும் அதிவேகப் பெருந்தெருக்களை அமைத்தலும்.
துறைமுக வசதிகளை மேம்படுத்தல்.

தொலைத் தொடர்பு:

தபால், தந்தி சேவைகளை மேம்படுத்தல்.
தொலைபேசி வசதிகள்.
மாணவர்களுக்கு இலவச மதிய உணவு.
வானொலி, தொலைக்காட்சி சேவைகளின் விருத்தி.

ஏனைய சமூக நலன்புரிச் சேவைகள்:

ஜனசவிய.
சமுர்தி.
உதாகம்.

செயற்பாடு 11.6.1

தேர்ச்சி மட்டம்: 1972,1978ம் ஆண்டுகளின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களை விபரிப்பார்.

செயற்பாடு: "இலங்கை அரசியல் கட்சிகளின் வரலாற்றைக் கற்போம்."

நேரம்: 120 நிமிடங்கள்

தர உள்ளீடுகள்: பின்னிணைப்பு இல.1. சனநாயகத்தின் வரைவிலக்கணத்தைக் குறிப்பிடும் இரு வாசகங்களைக் கொண்ட அட்டை.

பின்னிணைப்பு இல.2. பொதுத் தேர்தலின் முடிவுகளைக் காட்டும் புள்ளி விபரம் (1947, 1952)

பின்னிணைப்பு இல.3. பொதுத் தேர்தல் முடிவுகள் (1970, 1977, 1994)

பின்னிணைப்பு இல.4. செயற்பாட்டுப் பத்திரம்

பின்னிணைப்பு • பாடநூல்

பின்னிணைப்பு • சிறிய, பெரிய தாள்கள்

பின்னிணைப்பு • பிரிஸ்டல் போர்ட் - 1

பின்னிணைப்பு • பொக்ஸ் போர்ட் - 1

கற்றல், கற்பித்தல் செயற்பாடு

படிமுறை 11.6.1.1

- சனநாயகத்தைப் பற்றிய வரைவிலக்கணம் இரண்டைக் கொண்ட அட்டையை வகுப்பின் முன்வையுங்கள்
- பாராளுமன்ற சனநாயகத்தை செயற்படுத்துவதற்கு அரசியல் கட்சி முறையினால் கிடைக்கும் உதவியை விளங்கும் வண்ணம் கீழ்வரும்கருத்துக்கள் துலங்கும் விதமாக உரையாடலை முன்னெடுங்கள்.
- சனநாயகம் என்பது மக்கள் ஆட்சியாகும்.
- பாராளுமன்ற சனநாயக ஆட்சியில், அரசியல் கட்சிகள் மூலம் பொது மக்கள் ஆட்சியில்,சம்பந்தப்படுதல்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- அரசியல் கட்சி என்பது, பொதுக் கொள்கை ஒன்றின் மூலம் தமது விருப்புடன் ஒன்றுபட்டு உருவாக்கிக்கொண்ட அமைப்பாகும்.

- 1947க்கு முன்பு சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய இயக்கங்கள் பல செயற்பட்டுள்ளன.

- 1947க்கு முன்பிருந்தே இலங்கையில் கட்சி முறை ஒன்று நிலவிவந்தது.

- 1947லிருந்து இன்றுவரை பலகட்சி முறை செயற்படுகிறது.

(15 நிமிடங்கள்)

படிமுறை 11.6.1.2.

- வகுப்பு மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரியுங்கள்.

- செய்ய வேண்டிய வேலைகள் பற்றி சுருக்கமாக விளக்கமளியுங்கள்.

- 4வது பின்னிணைப்பு பத்திரத்தை குழுக்களிடையே விநியோகியுங்கள்.

  - இரண்டாவது குழுவுக்கு 2ம் பத்திரத்தையும் மூன்றாவது குழுவுக்கு 4வது பத்திரத்தையும் வழங்குங்கள்.

- குழுவை விடயங்களை சேகரித்தலில் ஈடுபடுத்துங்கள்.

- பாடநூலையும் வேறு மூலாதாரங்களையும் பார்வையிடுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படிமுறை 11.6.1.3.

- ஒவ்வொரு குழுவிற்கும் தனது முடிவுகளை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

- முன்வைத்த விடயங்களைக் கலந்துரையாட இடமளியுங்கள்.

- அடுத்த குழுவினருக்கு அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வாய்ப்பளியுங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- தேவைப்படும் தவகல்களைக் குறிப்பெடுத்துக் கொள்ளச் செய்யுங்கள்.

- மாணவர்களுடைய ஆற்றல்களை அறிந்து கொண்டு கீழே தரப்பட்டுள்ள கருத்துக்கள் துலக்குமாறு மீளாய்வில் ஈடுபடுங்கள்.

- பாராளுமன்ற சனநாயகத்தை செயற்படுத்துவதற்குக் கட்சி முறை ஒன்று அவசியமானது.

- சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய இயக்கங்கள் தோற்றம் பெற்றாலும் அவற்றை அரசியல் கட்சிகள் என்று ஏற்றுக் கொள்ள முடியாது.

- 1947ல் முதன்முறையாக பொதுத் தேர்தலுக்கு கட்சி முறையின்படி அங்கத்தவர்கள் போட்டியிட முன்வந்தார்கள்.

- 1947 - பொதுத் தேர்தலில் முதன் முறையாகப் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

- முதலாவது பொதுத் தேர்தலின் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களால் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது.

- 1947 லிருந்தே பொதுத் தேர்தலில் கட்சிகள் ஒருங்கிணைந்து போட்டியிட்டன.

- இலங்கையில் பல கட்சி முறைமை காணப்படுகிறது.

- இனரீதியாகக்கட்சிகள் தோற்றம் பெறுவது புதிய போக்காகும்.

(65 நிமிடங்கள்)

மதிப்பீட்டு, கணிப்பீட்டு நியதிகள்:

- சுதந்திரத்தை அடைவதற்காக ஆரம்பிக்கப்பட்ட தேசிய இயக்கங்களையும் அவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டையும் குறிப்பிடுவார்.

- இலங்கையின் அரசியல் கட்சிகளையும் அவை தொடங்கப்பட்ட ஆண்டுகளையும் அட்டவணைப்படுத்துவார்.

- பாராளுமன்ற ஆட்சி முறையின் வெற்றிக்கு அரசியல் கட்சி முறையால் கிடைக்கப் பெறும் பங்களிப்பை மதிப்பார்.

- குழு உணர்வுடன் செயற்படுவார்.

- தலைமைத்துவப் பண்புகளை வெளிக்காட்டுவார்.

பின்னிணைப்பு இல.4.

செயற்பாட்டுபபத்திரம்.I

குழு - I

வழங்கப்பட்டுள்ள பெரிய (டிமை) தாளில் துலக்கமாகத் தெரியும் வண்ணம் கீழ்வரும் அட்டவணையைத் தயாரித்தல் உங்களுக்கு வழங்கப்பட்ட வேலையாகும்.

"சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக செயற்பட்ட தேசிய இயக்கம்."

தேசிய இயக்கங்களின் பெயர்களுக்கு முன்பாக உள்ள கூடுகளில் அவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகளைச் சரியாகக்குறிப்பிடுக.

வருடம்	தேசிய இயக்கங்களின் பெயர்
	மது ஒழிப்பு இயக்கம்
	இலங்கை மறுசீரமைப்பு இயக்கம்
	மலேயர் அரசியல் இயக்கம்
	மலைநாட்டு தேசிய சபை
	சிங்கள மகாசபை
	அகில இலங்கை தழிழர் மகாசபை

2. இந்த தேசிய இயக்கங்கள் அரசியல் கட்சிகளாக ஏற்றுக் கொள்ளப்படாமைக்கான காரணங்கள் என்னென்ன?

செயற்பாட்டறிக்கை ii

இரண்டாவது குழு

வழங்கப்பட்டுள்ள பெரிய (டிமை) தாளில் கீழ்வரும் தகவல்களை துலக்கமாகவும் சரியாவும் தயாரித்து காட்சிப்படுத்தல் உங்களது வேலையாகும்.
1947க்கு முன்னைய இலங்கை அரசியல் கட்சி முறையின் வரலாறு.

இல வினா விடை

1. இலங்கையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பெயர்.

2. அதன் தலைவர்.

3. பிரித்தானியாவுக்குச் சென்று உயர் கல்வி கற்று மீண்ட இலங்கையரான படித்த புத்திசாலித்தனமான வாலிபர்கள் அரசியல் கட்சிகளை ஆரம்பித்தனர். அவ்வாறு 1935ல் தோற்றுவிக்கப்பட்ட அரசியல் கட்சி எது?

4. அதன் தலைவர் யார்.

5. 1935ல் ஆரம்பிக்கப்பட்ட கட்சி அபிப்பிராயம் பேதத்தால் பிரிந்து இரு கட்சிகளாக உருவாகின. அவ்விரண்டு கட்சிகளினதும் பெயர்களையும் தலைவர்களையும் கூறுக.

6. 1946ல் தோற்றுவிக்கப்பட்ட அரசியல் கட்சி.

7. அதன் தலைவர்

* உரிய இடத்தில் படங்களை ஒட்டுங்கள்.

குழு இல iii

செயற்பாட்டுப் பத்திரம்

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள (பணி), 1947 பொதுத் தேர்தலுடன் சம்பந்தப்பட்ட தகவலகளை வைத்து பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்து காட்சிப்படுத்தலாகும். உங்களிடம் தரப்பட்டுள்ள 1947ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுகள், பாடநூல் என்பவற்றில் இருந்து தேவைப்பட்ட தகவல்களைத் திரட்டிக்கொள்க.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

அட்டவணைக்கான மாதிரி கீழே தரப்பட்டுள்ளது. ‘அ’ பகுதிக்குப் பொருத்தமான ‘ஆ’ பகுதியைப் பூர்த்தி செய்க.

இல	‘அ’ பகுதி	‘ஆ’ பகுதி
(1)	1947 பாராளுமன்ற தேர்தலுக்கு வேட்பாளர்களை நிறுத்திய கட்சிகளின் எண்ணிக்கை எத்தனை?	
(2)	1947 பொதுத்தேர்தலில் கூடிய தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சி எது?	
(3)	1947 பொதுத்தேர்தலில் எத்தனை தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர்.	
(4)	1947 பொதுத் தேர்தல் முடிவுகளின் படி 1948இல் கூட்டப்பட்ட பாராளுமன்றத்தின் பிரதம மந்திரி யார்?	
(5)	1948 பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் யார்?	

நான்காவது குழு

செயற்பாட்டுப் பத்திரம் iv

பொதுத் தேர்தல் முடிவுகளுக்கமைய கூட்டரசாங்கங்கள் அமைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அக்கூட்டாட்சியில் இடம்பெற்ற கட்சிகளின் பெயர்களைக் கொண்ட அட்டவணை ஒன்றைத் தயாரிப்பது உங்களது குழுவின் வேலையாகும்.

அட்டவணை

தேர்தல் நடைபெற்ற ஆண்டு கூட்டாட்சியில் பங்கேற்ற கட்சிகள்

இதற்காகத் தரப்பட்டுள்ள பொதுத் தேர்தல் முடிவுகளையும் பாடப்புத்தகத்தையும் படித்து விடயங்களைச் சேகரித்துக் கொள்ளலாம்.உதவி தேவைப்படும் போது ஆசிரியரிடம் வினவுங்கள். உங்களது ஆக்கத்தை தெளிவுற எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

பின்னிணைப்பு இல. 2

செயற்பாட்டறிக்கை 3

பொதுத் தேர்தலில் ஒவ்வொரு கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர் தொகை

இல	அரசியல் கட்சிகள்	1947	1952
(01)	ஐக்கிய தேசிய கட்சி	42	54
(02)	இலங்கை சமசமாஜக்கட்சி	10	09
(03)	அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்	07	04
(04)	இலங்கை - இந்திய காங்கிரஸ்	06	-
(05)	போல்'வேக் லெனினிஸக் கட்சி	05	-
(06)	கமியூஸனிக் கட்சி	03	-
(07)	தொழிற் கட்சி	01	01
(08	ஐக்கிய இலங்கைக் கட்சி	00	-
(09)	சுயராட்சியக் கட்சி	00	-
(10)	சுயேட்சைகள்	21	12
(11)	ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி	-	09
(12)	புரட்சிகர லங்கா சமசமாஜக்கட்சி	-	04
(13)	தமிழரசுக் கட்சி	-	02
(14)	குடியரசுக்கட்சி	-	00
(15)	பௌத்த குடியரசுக்கட்சி	-	00
	மொத்தம்	95	95

பின்னிணைப்பு இல. 3

செயற்பாட்டறிக்கை 4க்கான தகவல் படிவம்

பொதுத் தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் பெற்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை

இல	அரசியல் கட்சிகள்	1970	1977	1994
(01)	ஐக்கிய தேசிய கட்சி	17	140	81
(02)	இலங்கை சமசமாஜக்கட்சி	19	00	-
(03)	அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்	03	-	-
(04)	கம்யூனிசக் கட்சி	06	00	-
(05)	சுயேச்சைகள்	02	01	10
(06)	தமிழரசுக் கட்சி	13	-	-
(07)	ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி	91	08	-
(08)	மக்கள் ஐக்கிய முன்னணி	00	00	00
(09)	தமிழர் விடுதலை கூட்டணி	-	18	04
(10)	இலங்கைதொழிலாளர் காங்கிரஸ்	-	01	00
(11)	இலங்கை முஸ்லீம் காங்கிரஸ்	-	-	06
(12)	ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி	-	-	03
(13)	பொதுசன ஐக்கிய முன்னணி	-	-	91
(14)	இலங்கை முற்போக்கு முன்னணி	-	-	01
(15)	தமிழ் ஈழ விடுதலைக் இயக்கம்	-	-	-
(16)	ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி	-	-	-
(17)	நவ சமசமாஜக்கட்சி	-	-	-
(18)	ஜனநாயகத் தொழிலாளர் கட்சி	-	-	-
(19)	சிங்ஹளயே மஹ சம்மத பூமி புத்ரா கட்சி	-	-	-
	மொத்தம்	151	168	196

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

11.6.2. செயற்பாடு

தேர்ச்சி மட்டம் : 1972, 1978 அரசியல் யாப்புத் திருத்தங்களை விபரிப்பார்.

செயற்பாடு: "1972, 1978 குடியரசு யாப்பை மதிப்பதுடன் ஒப்பீட்டுப் பார்ப்போம்."

நேரம்: 160 நிமிடங்கள்

தர உள்ளீடுகள்:
- பின்னிணைப்பு இலக்கம் 01 செயற்பாட்டு அறிக்கை
- 1972, 1978 அரசியல் யாப்பு
- 11ம் தர பாடநூல்

கற்றல் கற்பித்தல் செயற்பாடு:

படி முறை 11.6.2.1.

- 1972 இற்கு முன்பு செயற்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள்.

- அந்த அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கு அமைவா இலங்கை அரசாங்கத்திதன் தலைவர் யார்?

இவ்வினாக்களை மாணவரிடம் வினவுங்கள். 1972, 1978 அரசியல் யாப்புகளை அறிமுகப்படுத்தி, சட்டம், நிர்வாகம்,நீதி ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களில் கவனத்தைச் செலுத்தி, கீழ்வரும் விடயங்கள் துலங்கும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- 1972- முதலாம் குடியரசு அரசியல் யாப்பின் மூலம் அரசிடமிருந்து அரசாங்கத்தின் தலைமைத்துவத்தையும் அதனிடமிருந்த பல்வேறு அதிகாரங்களையும் இல்லாமற் செய்தமை.

- இலங்கை இதிலிருந்து (1972) தன்னாதிக்கமுள்ள சுதந்திரக் குடியரசானமை.

- தன்னாதிக்கமுள்ள சுதந்திரக் குடியரசுக்குப் பொருத்தமான விதத்தில் சட்ட நிர்வாக,நீதித்துறையில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டமை.

- 1978 - ஜனநாயக சோ'லிஸ குடியரசு யாப்பு மூலம் மீளவும் சட்ட, நிர்வாக, நீதித்துறைகளில் ஏகப்பட்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டமை.

(15நிமிடங்கள்)

படிமுறை 11.6.2.1 • வகுப்பில் மாணவர்களை பொருத்தமான முறையில் குழுக்களாக்குக.

- பின்னிணைப்பு இல 1ஐ மாணவர் குழுக்களிடம் பகிர்ந்தளிக்க.
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்
- தேவைப்படும் ஆலோசனைகளையும் வழி காட்டுதலையும் மேற்கொள்ளவும்.
- 1972,1978 அரசியல் யாப்புக்கள் இரண்டையும் மாணவர்களுக்கு பரிசீலிப்பதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

(65 நிமிடங்கள்)

படிமுறை 11.6.2.1 • குழுச் செயற்பாட்டை வகுப்பின் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.

- மாணவர்களின் திறமைகளை தெரிந்துகொள்ளுங்கள்.
- மாணவர்களின்பலவீனத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் துலங்கும்படி மீளாய்வை நடத்துக.
- 1947 -அரசியல் யாப்பு பிரித்தானிய மகாராணியை இலங்கையின் தலைவியாக ஏற்றுக் கொண்டது. 1972ல் அது இல்லாமலாக்கப்பட்டமை.
- அதிலிருந்து இலங்கை தன்னாதிக்கமுள்ள சுயாதீனமான குடியரசாக மாற்றமுற்றமை.
- 1972ல் பாராளுமன்றம் தேசிய அரசுப் பேரவை என்று குறிப்பிடப்பட்டமை.
- எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறையின் கீழ் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டமை
- பெயரளவிலான சனாதிபதிப் பதவி ஏற்படுத்தப்பட்டமை
- மேல் சபை இல்லாமலாக்கப்படடது
- நீதித்துறையில் மாற்றங்கள் பல ஏற்படுத்தப்பட்டன

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- கோமறைக் கழகத்திற்கு (பிரிவி - கௌன்சில்) மேன்முறையீடு செய்யும் உரிமை இல்லாமற் செய்யப்பட்டதனூடாக சட்டத்தின் முன் யாவருக்கும் சமத்துவமும் இலங்கையின் தன்னாதிக்கமும் உறுதிப்படுத்தப்பட்டன

- உள்ளூாட்சித் தாபனங்கள் மேலும் மக்களின் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டன

- 1978 அரசியல் யாப்புச் சட்டத்தின் மூலம் தேசிய அரசுப் பேரவை மீளவும் பாராளுமன்றம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது

- நிறைவேற்று அதிகாமுள்ள ஜனாதிபதிப் பதவி உருவாக்கப்பட்டு, அவரைச் சூழ அதிகாரம் குவிக்கப்பட்டமை

- விகிதாசார பிரதிநிதித்துவமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

- இதன் மூலம் பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சிச் சபைகளுக்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

- சனாதிபதித் தேர்தல் மூலம், பொதுமக்கள் சனாதிபதியைத் தெரிவு செய்து கொள்கின்றனர்.

- மக்கள் அபிப்பிராய வாக்குக்கணிப்பின் மூலம் பொதுமக்களுக்கு நேரடியாக ஆட்சியில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

- ''ஆளாட்சி அதிகாரி'' பதவி மூலம், அரசாங்க உத்தியோகத்தர்ாளுக்குக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

- நீதித்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

- இணக்க சபைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- 1978-அரசியல் யாப்பில் 13வது சீர்திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்டமை.

- உள்ளூராட்சிச் சபைகளின் அமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

மதிப்பீட்டு கணிப்பீட்டு நியதிகள்:

1. 1972, 1978 புதிய குடியரசு அரசியல் யாப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்ட புதிய அம்சங்களைப் பெயர் குறிப்பார்.

2. 1972 அரசியல் யாப்பின்படி இலங்கை தன்னாதிக்க உள்ள சுதந்திரக் குடியரசாக உருவானதை அபிமானத்துடன் பேசுவார்.

3. 1972, 1978 குடியரசு யாப்பின் மூலம் சட்ட, நிர்வாக,நீதி, உள்ளூராட்சி என்பனவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை ஒப்பிட்டு அட்டவணைப்படுத்துவார்.

4. குழு உணர்வுடன் செயற்படுவார்.

5. தலைமைத்துவப் பண்புகளை வெளிக்காட்டுவார்.

பின்னிணைப்பு இல 01

செயற்பாட்டுப் பத்திரம்:

1. 1972,1978 புதிய குடியரசு யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அம்சங்களை அட்டவணைப்படுத்துவார்.

1972	1978

2. பெயரளவிலான ஜனாதிபதி, ஆளாட்சி அதிகாரி இவ்விரு பதவிகளினதும் அதிகாரம், செயற்பாடு என்பவற்றை சுருக்கமாக விளக்குக.

3. மாகாண சபைகள் நிறுவப்பட்டதன் நோக்கத்தை சுருக்கமாக எழுதுக.

4. இணக்க சபைகளால் பொது மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகளை சுருக்கமாகக் குறிப்பிடுக.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இரண்டாவது குழு:

1972 - அரசியல் யாப்பின்படி பிரதமருக்கும் 1978 - யாப்பின்படி ஜனாதிபதிக்கும் உரிய அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் அட்டவணையில் குறிப்பிடுக.

1972 - பிரதமர்	1978 - ஜனாதிபதி

மூன்றாவது குழு:

1. 1972, 1978 யாப்புக்களின் பிரதிநிதித்துவ முறையின் அம்சங்களை அட்டவணைப்படுத்துக.

1972	1978

2. எளிமையான பெரும்பான்மைம பிரதிநிதித்துவ முறை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை, ஜனாதிபதித் தேர்தல் முறை, மக்கள் அபிப்பிராய கணிப்பு வாக்கெடுப்பு என்பவற்றையிடடு சிறு குறிப்பெழுதுக.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

நான்காவது குழு:

1. 1972, 1978 யாப்புகளில் நீதித்துறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களை ஒப்பீடு செய்க.

1972 நீதித்துறை	1978 நீதித்துறை

2. 1972, 1978 யாப்பின்படி உள்ளூராட்சித் தாபனங்கள் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

பின்தொடர் வேலை:

எளிமையான பெரும்பான்மைப் பிரதிநிதித்துவ முறையில் உள்ள நன்மை தீமைகளையும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலுள்ள நன்மை தீமைகளையும் பற்றிய தகவல்களைச் சேகரியுங்கள்.

11.6.3 செயற்பாடு:

தேர்ச்சி: • சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி முறைகளில் உள்ள நன்மைகளை விவரித்து அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதில் கவனஞ் செலுத்துவார்.

செயற்பாடு: "சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாட்டை ஆராய்ந்து பார்ப்போம்"

நேரம்: 200 நிமிடங்கள்

தர உள்ளீடு: பின்னிணைப்பு இல.01: செயற்பாடுகளைக் காட்சிப்படுத்துவதற்கான 'மாதிரி' ஒன்று
பின்னிணைப்பு இல.02 செயற்பாட்டுப் பத்திரம்
வேறுபட்ட நிறங்களிலான டிமைதாள்கள், பிளட்டினம் பேனைகள் மத்திய வங்கியின் பொன்விழா மலர்
11 ந்தர பாடநூல்

கற்றல் கற்பித்தல் செயற்பாடு:

படிமுறை 11.6.3.1

- பிரித்தானியர் காலத்தில் நுகர்வு விவசாயம் வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் யாவை?
- பிரித்தானியர் காலத்தில் வர்த்தகப் பயிர்ச்செய்கை தொடங்கப்படுவதற்கான காரணங்கள் யாவை?

இவ்வினாக்களை மாணவர்களுக்கு விடுத்து விடைகளைப் பெற்று, கீழே தரப்பட்டுள்ள விடயங்களை வெளிக் கொணரும் வண்ணம் கலந்துரையாடலை நடத்துக.

- பிரித்தானியர் காலத்தில் இலங்கையின் நுகர்வுப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்தமை.
- பிரித்தானியர் காலத்தில் வர்த்தகப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தமை.
- கைத்தொழில்கள் வீழ்ச்சியுற்றமை
- சுதந்திரத்தின் பின்னர் அரச முயற்சியாண்மை செயற்படுத்தப்பட்டதோடு கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு ஆகியதுறைகளில் அபிவிருத்தி ஏற்பட்டமை.

(15 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படிமுறை 11.6.3.1

- வகுப்பைப் பொறுத்தமான முறையில் குழுவாகப் பிரியுங்கள்.
- 2ம் பின்னிணைப்பான செயற்பாட்டுப் பத்திரத்தை குழுக்களுக்கு விநியோகியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினருக்கும் செய்யவேண்டிய காரியத்தைத் தெளிவபடுத்துக.
- 1ம் பின்னிணைப்பை படைப்பைக் காட்சிப்படுத்த வழங்கப்பட்டுள்ள 'மாதிரி' பற்றி மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் மேற்கொள்ளவும்.

(120 நிமிடங்கள்)

படிமுறை 11.6.3.3

- செயற்பாட்டின் இறுதியில், குழுவின் படைப்பை முன்வைப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- பின்னிணைப்பு இல.01 ல் வழங்கப்பட்டுள்ள மாதிரியில் தமது குழுவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தமது படைப்பை வைப்பதற்கு சந்தர்ப்பத்தை (ஆலோசனை) வழங்குங்கள்.
- குழுவினரின் செயற்பாட்டில் காணப்பட்ட சிறப்புக்களை மேம்படுத்தியும் குறைபாடுகளை நிறைவு செய்தும் கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் துலங்கும் வண்ணம் தொகுப்புரையை நிகழ்த்துக.

- தகவல்களைக் குறிப்பெடுத்துக் கொள்வதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குங்கள்
- சுதந்திரத்தின் பின்னர் பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் நுகர்வு விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- அதற்கமைவாக சிறு ஏற்றுமதிப் பயிர்கள், மந்தை வளர்ப்பு, நன்னீர், உவர் நீர் மீன் பிடித்தொழிலை மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- இந்நடவடிக்கைகள் இலங்கை மக்களினது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவியாக இருந்தமை.
- வர்த்தகப் பயிர்ச்செய்கையின் பெறுமானம் தேசமக்களுக்குக் கிடைக்கும் வண்ணம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.

- அதன்படி தேயிலை, றப்பர் பயிர்ச்செய்கையில் பல புதிய போக்குகள் ஏற்பட்டமை.

- தேசத்தின் தேவைக்கியைய கைத்தொழில்களை அபிவிருத்தி அடையச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

- இதற்கேற்ப பாரிய, இலகு, குடிசைக் கைத்தொழில்களை வளர்ச்சியடையச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.

- அரச முயற்சியாண்மை மூலம் தேசிய மயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பொது மக்கள் நலன்புரிச் சேவைகளை அிகரிப்பதற்கும் அக்காலத்திலிருந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பலவும் காரணமாயிருந்தமை.

- பொதுமக்களின் நலனுக்காக கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு ஆகிய துறைகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டமை.

- அந்நடவடிக்கைகளினூடாக மேற்குறிப்பிட்ட துறைகளில் அளவிலும் தரத்திலும் மேம்பாடுகள் ஏற்பட்டுள்ளமை.

மதிப்பீட்டு கணிப்பீட்டு நியதிகள்:

- சுதந்திரத்தின் பின்னர் அபிவிருத்தி சம்பந்தமாகக் கவனத்தை ஈர்ந்த துறைகளைப் பெயரிடுவார்.

- அத்துறைகளின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்ப்பார்.

- கூட்டுறவுடன் செயற்படுவார். குழுவினரின் ஒத்துழைப்புடன் எண்ணக்கரு படமொன்றை உருவாக்குவார்.

ஆசிரியருக்கான ஆலோசனை:

- வகுப்பறையில் காட்சிப்படுத்துவதற்காக உள்ள 'மாதிரி'யைப் பயன்படுத்துக. (இணைப்பு இல.01)
- குழுவின் மூலம் ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட புதிய அபிவிருத்திப் போக்குகளை படைப்பாற்றலுடன் முறைப்படுத்தி "உரியநிரலில்" அத்திரையில் ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.
- அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை 1947இலிருந்து 1977 வரை கால ஒழுங்கில் வரிசைப்படுத்துக.

பின் தொடர் வேலை:

- "இலங்கையில் சமூக நல நடவடிக்கைகள்" எனும் தலைப்பில் 1948 - 1977 வரையான காலத்தில் இடம்பெற்ற பல்வேறுபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை உட்படுத்தி, சிறுகைந்நூல் ஒன்றைத் தயாரிக்க.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

செயற்பாட்டுப் பத்திரம்:

- எல்லாக் குழுவினருக்கும் கிடைத்திருக்கும் டிமை தாளை, தேவைக்கேற்ற விதமாக மாற்றி, பயன்பாட்டிற்கு எடுக்கவும்.

- (ஒரு குழுவினர் தெரிவுசெய்த துறையைப் பற்றி) 1948-1977 வரையான முக்கியமான அபிவிருத்தி சார்ந்த ஒரு நடவடிக்கையை முறைப்படுத்தி சுருக்கமாகக் குறிக்க. பிழையின்றி, மனங்கவரும் விதமாக ஆண்டுகள் தெரியும் வண்ணம் குழுச் செயற்பாட்டை தயாரியுங்கள்.ஆசிரியரின் அறிவுறுத்தல்களை 'மாதிரியில்' காட்சிப்படுத்துங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கணிப்பீடும் மதிப்பீடும்

அறிமுகம்

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் ஊடாக எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை மாணவர்கள் அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காகவும், மாணவர்கள் அடைந்து கொண்ட பாண்டித்திய மட்டங்களை இனங்காணவும் வகுப்பறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தக் கூடிய இடைத் தொடர்புடன் கூடிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களாக கணிப்பீடும், மதிப்பீடும் காணப்படுகின்றன. கணிப்பீடு சரியான முறையில் நிறைவேற்றப்படின் வகுப்பபறையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் உரிய தேர்ச்சியின் அண்ணளவு பாண்டித்திய மட்டத்தையேனும் அடைந்து கொள்வது சிரமமாக இருக்காது. மாணவர்கள் அடைந்துள்ள பாண்டித்திய மட்டம் எதுவென்பதை அளவிடுவதே மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் தாம் மாணவர்களுக்கு இரு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அத்தகைய வழிகாட்டல் பொதுவாக பின்னூட்டல் ( ) முன்னூட்டல் ( ) என்பவையாகும். மாணவர்களின் நலிவுகளையும், இடர்பாடுகளையும், பலவீனங்களையும் கண்டறிந்து கொள்ளும் போது அவர்களின் கற்றற் பிரச்சினைகளை நிவர்த்தியாக்குவதற்கு பின்னூட்டல்களையும் மாணவர்களின் ஆற்றல்களையும் வலிமைகளையும் இனங்காணும் போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டல்களையும் வழங்க வேண்டும்.

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் வெற்றிக்காக பாடநெறியின் தேர்ச்சிகளில் எந்தத் தேர்ச்சியை எந்த மட்டத்திற்கு அடையப் பெற்றள்ளது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள் மாணவரின் வெற்றிகரமான மட்டங்களின் ஊடே மாணவர் அண்மித்த தேர்ச்சி மட்டத்தை இனங்காணுதல் இதன் மூலம் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதுடன் மாணவரும் ஆசிரியரும் உட்பட வேறு சம்பந்தப்பட்ட பகுதியினருக்கு மாணவரின் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைதல் வேண்டும்.

உங்கள் முன் வைக்கப்படும் இப்பாடநெறி மாணவர் மைய ( ) தேர்ச்சி அடிப்படையிலான செயற்பாட்டு முகமான ( ) அணுகுதலைக் கொண்டிருக்கும். வாழ்க்கையை அர்த்தமுடையதாக ஆக்கிக் கொள்வதற்காக செயலின் மூலம் கற்றல் ஆசிரியரின் பரிமாண நடிபாங்கின் ( ) உள்ளார்த்தமுமாகும்.

ஆரம்பத்தில் விருத்தி செய்யப்பட்ட செயற்பாட்டுத் தொடரின் ஊடே செயற்படுத்தப்படும் இப்பாட கற்றல் - கற்பித்தலை கணிப்பீடு - மதிப்பீட்டுடன் ஒன்றிணைக்க முயற்சி செய்யப்பட்டு உள்ளது. அவ்வந்த செயற்பாடுகளின் இரண்டாம் படிமுறையில் மாணவக் குழுக்கள் ஆய்வில் ஈடுபடும்போது அவர்களைக் கணிப்பீடு செய்யவும் செயற்பாடுகளில்

மூன்றாம் படிமுறையின் போது மாணவர் சுய கண்டறிதலை சமர்ப்பிக்கவும் விவரணம் செய்யவும் முனையும் போது அவர்கள் மதிப்பீடு செய்யப்படவும் ஆசிரியருக்கு இயலுமாகும். மாணவர்கள் ஆய்வில் ஈடுபடும் போது மாணவரிடையே நடமாடியவாறு அவர்கள் ஆற்றும் பணிகளை அவதானித்தவாறு மாணவர் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்த்துக்கொள்வதற்காக பார்க்கப்படும் பணிகளாகும்.

கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இலகுவாக நிறைவேற்றும் வகையில் ஐந்து நியதிகள் முன்மொழியப்படுகின்றன. இவற்றுள் முதல் மூன்று நியதிகளும் அவ்வத் தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புவதில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவு, மனப்பாங்கு, திறனை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும். இறுதி இரண்டு நியதிகள் வாழ்க்கைகையில் பயன்படும் பண்புகள் இரண்டை விருத்தி செய்வதற்காக உதவுகின்றன. இந்நியதிகளுடன் தொடர்பான நடத்தை மாற்றங்கள் ஐந்தையும் மாணவர்களின் செயற்பாட்டின்போது இனங்கண்டு கொள்ள ஆசிரியர்கள் முயற்சிப்பதுடன், கணிப்பீட்டின் கீழ் அத்தகைய நடத்தைகள் உருவாவதை உறுதிப்படுத்தவும் மதிப்பீட்டின் கீழ் உருவாக்கப்பட்ட நடத்தைகளை அளவிடவும் ஆசிரியர் முன்வர வேண்டும்.

மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதால் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவாக்கலாம். அதற்கென செயற்பாட்டுத் தொடர்ச்சி ( ) ஊடாக மதிப்பீட்டு வாய்ப்புக்கள் பலவற்றை ஏற்படுத்த ஆசிரியருக்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன. மதிப்பீட்டுப் புள்ளிகளை ( ) இனங்காண்பதற்கு இலகுவான வகையில் செயற்பாட்டுத் தொகுப்புக்கள் ( ) பலவற்றுக்கு வேறாக்குவதன் மூலம் மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அர்த்தமுடையதாக ஆக்கலாம். எல்லாச் செயற்பாட்டுத் தொகுப்பின் ஆரம்பத்திலும் அவ்வந்தச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் மதிப்பீட்டுக் கருவிகள் யாவை என மாணவருக்கு அறிவித்தல் அவசியமாகும்.

மதிப்பீட்டு வகைகளைத் தெரிவு செய்யும்போது மாணவரின் கற்றலின் தூண்டல் விரிவாக்கும் சுறுசுறுப்பான செயற்பாடுகளைப் பயன்படுத்தல் முக்கியமாகும். இதற்குரிய செயற்பாடுகளின் பட்டியல் அட்டவணை பின்வருமாறு:

எண்ணக்கரு படங்கள்
சுவர்ப்பத்திரிகை
வினாவிடை நூல்கள்
வினாவிடை நிகழ்ச்சி
மாணவர் செயலாற்றற் கோவை
மாணவர் கண்காட்சிகள்
விவாதங்கள்
உரையாடல் மன்றங்கள்
கருத்தரங்குகள்
திடீர் உரைகள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

நடிபங்குகள்
இலக்கிய மீளாய்வுச் சமர்ப்பணம்
களப்புத்தகம் இயற்கை நாளேடு நல்ல வேலை நூல்
செய்முறை சோதனைகள்

இந்நூலின் மூன்றாம் பகுதியில் உத்தேச மதிப்பீட்டு புள்ளியாகவும் அதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுக் கருவிகளும் இனங்காண்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக செயற்பாட்டின் மூலமும் அவற்றிடையேயும் மதிப்பீட்டையும் இருவிதமாக செய்வதனால் கற்றல் - கற்பித்தல் செயல் ஒழுங்கை மேலும் விரிவாக்கக்கூடியதுடன் உற்சாகமாக கற்றலில் ஈடுபடவும் மாணவர்களுக்கு இயலும்.

இவற்றுக்கு மேலதிகமாக வகுப்பிலேயே எழுத்துப் பரீட்சை, செயற்றிட்டம் போன்றவையும் வருட இறுதியில் நடாத்தப்படும் பாடசாலை மட்ட அல்லது வலய மட்ட எழுத்துப் பரீட்சைகள் என்பவற்றிலும் மாணவரை ஈடுபடுத்தலாம்.

அதுபோலவே தவணை இறுதியில் கணிப்பீட்டிற்காகத் தரப்பட்டுள்ள கற்றல் கற்பித்தல் செயன்முறை நீடிப்புக் கருவியையும் பயன்படுத்தலாம்.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நீடிக்க வைக்கும் உபகரணங்கள்

தரம் - 11

1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் - 1ம் தவணை

உபகரணம் - 01

2. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்

* ஆட்சியில் காணப்பட்ட பலவீனங்களைப் பயன்படுத்திக் கொண்டு, பிரித்தானியர் இலங்கையில் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்ட விதத்தை விளக்குவர்.

* சுயாதிபதியத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக உள்நாட்டவர்கள் எழுந்து நின்ற முறையைப் பாராட்டி சுதந்திர இலங்கையைப் பாதுகாக்க பங்களிப்புச் செய்வர்.

* பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட புனர்நிர்மானங்கள் பற்றிய தகவல்களை விபரிப்பதோடு, அப்புனர்நிர்மானங்கள் இலங்கைச்சமூகம் சீரடைவதற்கு பங்களிப்புச் செய்த முறையை விளக்குவார்.

3.0 உள்ளடங்கும் பாடப் பரப்புக்கள்

11.1.1 - 11.1.2, 11.1.3, 11.2, 11.2.1, 11.2.2, 11.2.3

4.0 உபகரணத்தின் தன்மை - வினா விடை வேலைத்திட்டம்

5.0 உபகரணத்தின் நோக்கங்கள்

* இலங்கையின் ஆட்சி அதிகாரம் பிரித்தானியவுக்குச் சொந்தமான முறையை கற்பதற்கு ஈடுபடுத்துதல்.
* பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக ஏற்பட்ட சுதந்திரப் போராட்டங்கள் பற்றிய தகவல்களை விமர்சனம் செய்தல்.
* பாராளுமன்ற ஆட்சி முறையை இலங்கையில் ஏற்படுத்தும் வரை ஆட்சி நிர்வாகம் போன்ற துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி தகவல்களை கற்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்துதல்.
* பிரித்தானிய ஆட்சி காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களை இனங் காண்பதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்தல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

6.0 உபகரணத்தை செயற்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள்

* வினா விடைவேலைத்திட்டம் நடைபெறும் முறையையும், நடைபெறும் தினத்தையும் அறிவியுங்கள்.
* வினாக்களை தயாரிப்பதற்காக வகுப்பை குழுக்களாக்குங்கள்.
* ஒவ்வொரு குழுவினரும் தயாரிப்பதற்கும் பயன்படுத்த வேண்டிய பாட அலகு, உப அலகு என்பவற்றை அறிமுகப்படுத்துங்கள்
  Iம் குழு - 11.1.1, 11.1.2
  IIம் குழு - 11.1.3 (கி.பி 1924 வரை)
  IIIம் குழு - 11.1.3 (கி.பி 1931, 1947)
  IVம் குழு - 11.2.1, 11.2.2, 11.2.3
* ஒரு குழுவினரால் தயாரிக்கப்பட வேண்டிய வினாக்களின் எண்ணிக்கையை (வேலைத்திட்டத்திற்கு பொருத்தமான வகையில்) மாணவர்களுக்கு அறிவியுங்கள்.
* வினாக்கள் தயாரிக்க வேண்டிய முறைபற்றி மாணவர்களுக்கு அறிவூட்டுங்கள். உதாரணம்:- குழுவுக்கு கிடைத்துள்ள பாட அலகுகளுக்கேற்ப சரியான சுருக்க விடைகளுடன்.
* தயாரித்துள்ள வினாக்களை வாசித்துப்பார்த்து அவசியமான திருத்தங்களை செய்யுங்கள்.
* இந்த வேலைத்திட்டத்தின் உள்ளடக்கப்படும் பாடத்துறைகளை நன்கு கற்று வேலைத்திட்டத்திற்கு தயாராகும் படி மாணவர்களுக்கு அறிவியுங்கள்.
* உரிய தினத்தில் வினா விடை நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கு அவசியமான அலுவல்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.
* மாணவர்களின் ஈடுபாட்டில் போட்டியை நடாத்துவதற்கு அவசியமான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொடுங்கள்.
* வினாவுக்கு மாணவர்கள் வழங்கும் விடைகள் பிழைக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றைத் திருத்துங்கள்.
* பொருத்தமான வகையில் புள்ளிகள் வழங்குவதற்கு முறை ஒன்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

* ஆசிரியரின் அறிவுறுத்தல்களுக்கேற்ப தமது குழுவுக்குக் கிடைத்துள்ள அலகுகளுக்குப் பொருத்தமான உரிய வினாக்களின் எண்ணிக்கையை தயாரியுங்கள்.
* 11.1, 11.2 அலகுகளை நன்கு கற்று வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தயாராகுங்கள்.
* நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு உதவுங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நீடிக்க வைக்கும் உபகரணங்கள்

வகுப்பு - 11

01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் - இரண்டாம் தவணை

உபகரணம் - 02

02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம்

* ஜப்பான் உலகின் பலம் வாய்ந்த ஒரு நாடாக உருவான முறையை விபரிப்பார்.

* நாட்டின் சுயாதிபதியத்துக்காக இந்தியர்கள் முன்மாதிரியாகச் செயற்பட்ட முறையை மதித்துப் பேசுவார்கள்.

* முதலாவது இரண்டாவது உலக மகா யுத்தங்கள் மனித இனத்தின் முன்னேற்றப் பயணத்துக்குத் தடையாக இருந்த விதத்தை விபரிப்பதோடு யுத்த நிலைகளிலிருந்து தவிர்த்து நிற்பதற்கு நடவடிக்கை எடுப்பார்.

* சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமையையும் ஐக்கிய நாடுகள் சபை பலமடைந்தமையையும் ஒப்பிடுவார்.

* பாசிச வாதத்தினதும் நாசிச வாதத்தினதும் தன்மைகளை அட்டவணைப்படுத்துவார்.

* உலக சமாதானத்துக்காக ஐக்கிய நாடுகள் சபையின பங்களிப்பை மதித்துப் பேசுவார்.

03. உள்ளடங்கும் பாடப்பரப்புக்கள்:- 11.3, 11.4

04. உபகரணத்தின் தன்மை:- பொருட்காட்சி ஒன்று நடாத்துதல்.

05. உபகரணத்தின் நோக்கங்கள்:-

* இருபதாம் நூற்றண்டில் ஆசிய நாடுகளின் முன்னேற்றம் பற்றிய தகவல்களைக் கற்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்துதல்.

* முதலாவது உலக மகா யுத்தத்துக்கு ஏதுவான காரணங்களைத் தேடித் அறிதலும் அதன் பெறுபேறுகளை இனங்காணலும்.

* சர்வதேச சங்கம் தோன்றுவதற்குப் பின்னணியாக இருந்த காரணங்கள், அதன் நோக்கங்கள் அது செயலிழந்தமைக்கு ஏதுவான காரணங்கள் பற்றி விமர்சிப்பதற்கு ஈடுபடுத்துதல்.

* இரண்டாவது உலக மகா யுத்தம் ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்களையும் அதன் பிரதிபலன்களையும் கற்றல்.

* ஐக்கிய நாடுகள் சபையின் ஆரம்பம், நோக்கங்கள், அமைப்பு, உலக சமாதானத்துக்கு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை தேடிப் பார்ப்பதற்கு ஈடுபடுத்துதல்.

06. உபகரணத்தைச் செயற்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள்

* செயற்பாட்டுக்கு அடிப்படையாகவுள்ள பாட அலகையும், செயற்பாட்டின் நோக்கங்களையும் பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டுதல்.

* வகுப்பைப் பொருத்தமான வகையில் குழுவாக்குங்கள்.

* ஒவ்வொரு குழுவுக்கும் உரிய தலைப்புக்களை ஒப்படையுங்கள்.

Iம் குழு - இந்தியா

- தேசிய இயக்கம்

- மகாத்மா காந்தி அவர்கள்

- இந்தியா பிரிந்து செல்லல்.

IIம் குழு - ஜப்பான்

- டொக்குகாவா யுகம்
- மெய்ஜி புனருத்தாபனம்
- ஜப்பானின் எழுச்சி
- ஹிரோசீமா நாகசாக்கி அழிவுகள்
- மார்'ல் திட்டத்தின் மூலம் மீண்டும் கட்டியெழுப்பப்படல்.

IIIம் குழு - சீனா

- சீனப் புரட்சியின் முக்கியமான சந்தர்ப்பங்கள்
- மக்கள் சீனாவின் தோற்றம்
- பொருளாதாரத் திட்டங்கள்
- கலாசாரப் புரட்சி

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

IVம் குழு - முதலாம் உலக மகா யுத்தம்
- யுத்தத்துக்கான காரணம்
- முக்கியமான அணிகள்
- பெறுபேறு
- சர்வதேச சங்கம்

Vம் குழு - இரண்டாம் உலக மகா யுத்தம்
- பாசிச வாதத்தின் எழுச்சி
- நாசிச வாதத்தின் எழுச்சி
- பெறுபேறு
- சர்வதேச சங்கம்
- இரண்டாம் உலக மகா யுத்தத்துக்கான காரணங்கள்
- முக்கியமான அணிகள்
- பெறுபேறு

VIம் குழு - ஐக்கிய நாடுகள் சபை
- ஆரம்பம்
- நோக்கம்
- அமைப்பு
- சமாதானத்துக்காக எடுத்த முயற்சிகள்

* ஒவ்வொரு குழுவும் பொருட்காட்சிக்குத் தயாரிக்க வேண்டிய உபகரணங்கள் பற்றி மாணவர்களை அறிவூட்டுங்கள்

* தாம் முன்வைக்கும் பொருட்காட்சி உபகரணம் பற்றி சுருக்கமான விபரமொன்றை முன்வைப்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

* சுதந்திரத்தின் பின் இலங்கையில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி உபாயங்களிலுள்ள வினைதிறனை விமர்விப்பார்.

3.0. உள்ளடங்கும் பாடப்பரப்புக்கள்:- 11.6

4.0. உபகரணத்தின் தன்மை:- தகவல் பத்திரமொன்றைத் தயாரித்தல்

5.0. உபகரணத்தின் நோக்கங்கள்:-

* 1972, 1978 யாப்புக்களின் வேறுபாடுகளை கற்றலுக்கு ஈடுபடுத்துதல்.

* சுதந்திரத்தின் பின் இலங்கையின் அபிவிருத்திக்காக வேண்டிப் பின்பற்றிய வழிவகைகள் பற்றி அறிவூட்டுதல்.

6.0. உபகரணத்தைச் செயற்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள்

* செயற்பாட்டுக்குரிய நோக்கங்கள் பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டுங்கள்.

* வகுப்பைப் பொருத்தமான வகையில் குழுவாக்குங்கள்.

* தகவல் பத்திரத்தைத் தயாரிக்கும் செயற்பாடு பற்றி மாணவர்களை அறிவூட்டுங்கள்.

* குழுக்களுக்கிடையே தலைப்புக்களைப் பகிர்ந்து கொடுங்கள்.

Iம் குழு - 1972ம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பு பற்றி பின்வரும் தலைப்புக்களுக்கு உரிய தகவல்களைச் சேகரியுங்கள்.
- ஜனாதிபதி பதவி
- பிரதமர் உட்பட்ட அமைச்சரவை.
- தேசிய அரசுப் பேரவையும் அதன் உறுப்பினர்களும் தெரிவு செய்யும் முறை
- அடிப்படை மனித உரிமைகள்
- நீதிமன்றம்
- உள்ளூராட்சி மன்றங்கள்

* இப்பாடப்பகுதி முக்கியமானதாக அமைகின்ற ஏனைய வகுப்பு மாணவர்களுக்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுங்கள்.

* பொருத்தமான மதிப்பீட்டு நியதிகளைப் பயன்படுத்தி குழுச் செயற்பாட்டை மதிப்பீட்டுக்கு உட்படுத்துங்கள்.

மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

* உங்களுடைய ஆசிரியரின் அறிவுறுத்தல்படி குழுவுக்குக் கிடைத்த தலைப்புக்குப் பொருத்தமான சித்திரங்கள், தேசப்படங்கள், புகைப்படங்கள், தகவல்கள் என்பவற்றை பொருட்காட்சிக்கு உசிதமான வகையில் தயாரித்துக் கொள்ளுங்கள்.
* பொருட்காட்சியை நடாத்துவதற்கு அவசியமான அலுவல்களை சிறப்பாக ஒழுக்கமைத்துக் கொள்ளுங்கள்.
* ஆசிரியரின் அறிவுறுத்தலின் படி பொருட்காட்சிக்கு முன்வைக்கக் கூடிய உபகரணங்கள் பற்றிய விபரமொன்றை முன்வைப்பதற்கு நன்கு ஆயத்தமாகுங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கணிப்பீட்டு நியதிகள்

* பொருட்காட்சி உபகரணங்களின் பொருத்தப்பாடு
* முன்வைக்கும் தகவல்களின் பிழையின்மை
* ஆக்கத்திறனுடையது என்பது
* தியாகத்துடன் செயற்படுவது

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நீடிக்க வைக்கும் உபகரணங்கள்

தரம் - 11

1.0. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் - மூன்றாம் தவணை உபகரணம் - 03

2.0. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்

* பாராளுமன்ற ஜனநாயகம் செயற்படும்போது கட்சி முறை, அமைச்சரவை முறை என்பவற்றின் முக்கியத்துவத்தை அறிவார்.

* 1972, 1978ம் ஆண்டுகளின் அரசியல் யாப்பு மாற்றங்கள் பற்றி விபரிப்பார்.

IIம் குழு - 1978ம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோ'லிசக் குடியரசின் யாப்பு பற்றிப் பின்வரும் தலைப்புக்களுக்கேற்றவாறு தகவல்களைச் சேகரியுங்கள்.
- ஜனாதிபதி பதவி
- பிரதமரும் அமைச்சரவையும்
- பாராளுடன்றமும், உறுப்பினர்கள் தெரிவு செய்யும் முறையும்
- அடிப்படை மனித உரிமைகள்
- நீதிமன்றம்
- உள்ளூராட்சி மன்றங்கள்

IIIம் குழு - சுதந்திரத்தின் பின் இலங்கைப் பொருளாதார அபிவிருத்திக்கு எடுக்கப்பட்ட வழிவகைகள் பற்றிப் பின்வரும் தலைப்புக்களின் ஊடாகத் தகவல்கள் சேகரியுங்கள்.
- விவசாயம்
- கைத்தொழில்
- சேவைகள்

IVம் குழு - சுதந்திரத்தின் பின் இலங்கையின் சமூக அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட வழிவகைகள் பற்றிப் பின்வரும் தலைப்புக்களின் ஊடாகத் தகவல்கள் சேகரியுங்கள்.
- கல்வி
- சுகாதாரம்
- போக்குவரத்து
- தொடர்பாடல்

* உரிய தகவல்களை பெற்றுககொள்ளக்கூடிய மூலாதாரங்கள் பற்றி மாணவர்களை அறிவூட்டுங்கள்

* தகவல் பத்திரத்தை முன்வைக்க ணேடிய திகதி பற்றி மாணவர்களை அறிவூட்டுங்கள்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

* ஒவ்வொரு குழுவினராலும் தயாரிக்கப்பட்ட வேண்டியகவல் பத்திரங்களை வகுப்பில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுங்கள்.

* உரிய நியதிகளைப் பயன்படுத்தி குழுச்செயற்பாட்டை மதிப்பீட்டுக்கு உட்படுத்துங்கள்

* ஒவ்வொரு குழுவினரும் முன்வைத்த தகவல்கள் பற்றி கருத்துத் தெரிவிக்க குழுக்களுக்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.

* குழுக்களுக்கிடையே அறிவு பரிமாறக்கூடிய முறை பற்றிக் கலந்துரையாடுங்கள்.

மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

* உங்களுக்கு பொறுப்பளிக்கப்படும் தலைப்புப் பற்றிய மூலாதாரங்களைப் பாவித்து போதுமான அளவு தகவல்களைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.

* ஆக்கத்திறனுடன் தகவல் பத்திரத்தைத் தயாரியுங்கள்.

* குறிப்பிட்ட தினத்தில் தகவல் பத்திரத்தை வகுப்புக்கு முன்வையுங்கள்.

* ஏனைய குழுக்கள் முன்வைத்த ஆக்கங்கள் பற்றிக் கருத்துத் தெரிவியுங்கள்.

* தகவல் பத்திரங்கள் எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து உங்கள் கல்வி நடவடிக்கைகளுக்கு பாவனைக்கு உகந்த வகையில் தகவல் சேவையொன்று தயாரியுங்கள்.

கணிப்பீட்டு நியதிகள்	புள்ளிகள்
* தகவல்களின் பிழையின்மை	
* பொருத்தப்பாடு	
* போதுமான தகவல்கள்	
* ஆக்கத்திறன்	
* முன்வைத்தல்.	

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.